பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

அக்டோபர் 2021



**சங்கம் மருவிய காலப் பாடல்களில் ஆண்கள் பேசுவதான பாடல்களில் ஒருவிதமான ஆணாதிக்கத் திமிரும் பெண்களை போகப் பொருளாகக் காணும் தன்மையும் இறைந்து கிடப்பதை நாம் கடந்து போகுதல் தகாது.**

**– கவிஞர் விக்டர்தாஸ்**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 அக்டோபர் 2021


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸீர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்! முண்டாசுக் கவிஞன் பாரதியாரின் நூற்றாண்டு நினைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பாரதிப்பிரியர்கள் அனைவருமே பாரதியின் கவிதைகளில் காதல் கொண்டு மூழ்கித் திளைத்திருக்கக் கூடும். அக்கவிதைகள் ஒவ்வொன்றும் இன்ப ஊற்றாகப் பொங்கிப் பிரவாகித்து தேனாறாக இலக்கியப்பிரியர்களின் மனங்களில் ஓடிக் கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இலக்கிய உலகில் அவர் கவிதைகள் புதுமைகள் படைத்தன. இந்தியாவின் சுதந்திரத்துக்கு அவரின் புரட்சிமிக்க கவிவரிகளும் பெரும்பங்கு வகித்தன என்றால் அது மிகையில்லை. அந்த மகாகவி தம் கவிதைகளில் இன்னும் வாழ்ந்து கொண்டு நம்மை வழிநடத்திச் செல்வதும் பேருண்மையே!

இவர் பல கடவுள்களைப் பாடினாலும், வள்ளலாரின் ஓரிறைக் கொள்கையைப் பின்பற்றியவரும் கூட என்பதை அவர் யாத்த சில கவிதைகள் சான்று பகர்கின்றன. ‘ உள்ளது அனைத்திலும் உள்ளொளியாகி ஒளிர்ந்திடும் ஆன்மாவே இங்கு கொள்ளற்கரிய பிரம்மம் என்று மறை கூவுதல் கேளீரோ’ என்று யாவரும் சிந்திக்க ஒரு கருத்தை அவர் முன்வைக்கிறார். ‘பல பித்த மதங்களிலே நிலைதடுமாறிப் பெருமை அழிவீரோ’ என பிரிவினை உண்டாக்கும் மதங்களால் கவிழும் மாந்தரைச் சாடியும் சில இடங்களில் பாடியுள்ளார்.

‘என்றன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்‘ என்ற பாரதி எழுதிய பாக்கள் தரணியே வியக்கும் வண்ணம் இலக்கிய உலகில் கோலோச்சுகின்றன. காற்றுள்ளவரை இந்த மகாகவியின் புகழ் மணக்கும்! அவரின் கனவுகள் மெய்ப்பட தமிழ்ப்பற்றுள்ள அனைவரும் கரங்கோர்ப்போம். நல்லுலகைப் படைப்போம். நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

# வெற்றிக்கு மேல் வெற்றி

•
தொடர்ந்து தோற்றாலும்
நல்ல ஆட்டக்காரன்
நான்என்பதை அறிவாய்தானே நீ,?

•
வெல்வதைவிட
தோல்வி சுகமானது
நீ வென்றால் மட்டுமே

•
தெரிந்தே வெற்றியை இழக்கிறேன்
பெறுவது நீ என்பதால்
நானும் நீயும் வேறல்லவே?

•
பந்தயமாய்
பணம்வைத்தா ஆடுகிறோம்
மனம் வைத்தல்லவா?

•
நசுங்கிய கனவுகளை
பொசுங்கிய இலட்சியங்களை
உன்னிடம் தோற்பதில்
மறக்கப்பழகுகிறேன்

•
பதங்குலைந்து
இதமற்றதாகிவிட்டது
உறவுகள்

•
உயிரின் உயிரை மிதிக்கின்றன
சொற்கள் வடிவிலான
யானைப்பாதங்கள்

•
பச்சையச் சுவையற்று
உதிர்ந்துகொண்டே இருக்கிறது
காலச்சருகு

•
எதைகொண்டு மறைப்பது
நிர்வாண
அதிருப்தியை?

•
ஆட்டத்தில் இருக்கிறவர்கள்
அறிவதே இல்லை வெற்றியின்
உண்மைத் தன்மையை

•
தோற்பவர்களை
அணைத்து
ஆற்றுப் படுத்துவோம்

•
பொதுபுத்தி கற்பிக்கிறது
வெற்றியை வழங்கியவர்கள்
தோல்வியாளர்கள்

•
வெற்றியாளர் ஏது
தோற்காதோர்
இல்லாதபோது?

சிங்கார சுகுமாறன்

## ஆக்கங்கள் அனுப்பும் அன்பர்கள் கவனத்திற்கு...

சிலர், ஆக்கங்களில் தங்கள் பெயரைக் குறிப்பிடுவதில்லை. அனுப்பப்படும் ஒவ்வொரு ஆக்கத்திற்குக் கீழ் தங்களின் பெயர்ரைத் தமிழிலும், தொடர்புக்காக அலைபேசி எண்கள் அல்லது மினனஞ்சல் ஐடியையும் அவசியம் பதியவும். தவிர, ஒரே ஆக்கத்தை ஒரே நேரத்தில் இரண்டு அல்லது பல இதழ்களுக்கு அனுப்ப வேண்டாம். ஒரு இதழுக்கு ஆக்கத்தை அனுப்பிவிட்டு கொஞ்ச காலம் பொறுத்திருப்பது அவசியம்.

# அளவோடு வேண்டும்

அளவாய்ப் பெய்தால் மழையதுவும்
அகிலம் சிறக்கும் என்னாளும்
அளவேயில்லா மழையதனால்
அழிவுமிழப்பும் உருவாகும்

கரைக்குள் அடிக்கும் அலை கண்டு
களிப்பார் மக்கள் என்னாளும்
கரையை மீறிக் கடல் வந்தால்
கணக்கற்றழிவுகள் உருவாகும்

விளக்கில் எரியும் தீபமதால்
விரட்டிடுமிருளை யென்னாளும்
படர்ந்தது பற்றும் தீயதனால்
பல்லுயிர் பொருளும் கரியாகும்

விரிகதிர் வீசும் சூரியனால்
விளைபயிர் உயிர்களும் உருவாகும்
எரிகதிர் வீசியெரித்திட்டால்
எங்குமே பாலை நிலமாகும்

இதமாய் வீசும் இளந்தென்றல்
இன்பமும் சுகமும் தனை வழங்கும்
வதங்கள் செய்திடும் புயலதனால்
வதைத்துயிர் போக்கியுலகழிக்கும்

பசிக்குணவூட்டம் தனையுண்டால்
பலமுறு தேகநலன் காட்டும்
பல பேருணவை நாமுண்டால்
பாரிய நோய் பிடித்துயிர் வாட்டும்

பெற்றறிவதனால் பெருமைகள் சேரும்
பெரும்புகழ் செல்வம் உருவாகும்
கெட்டறிவதனால் கேடு நினைத்தால்
கெடுதியுமிழிவும் உனைச் சேரும்

மதங்களை மதித்து வாழ்ந்தாக்கால்
மனிதனாய் வாழும் வழி சிறக்கும்
மதவெறி பிடித்து அலைந்தாக்கால்
மனித உருவில் விலங்காக்கும்

இயற்கையின் செல்வம்தனைப் போற்றி
இணையில்லாத நலம் பெறுவோம்
செயற்கையின் கைக்குள் சிறைப்பட்டால்
சீரழிந்துலகைச் சீர்குலைக்கும்

மட்டிட முடியா அன்பினைக்காட்டு
மகத்துவம் ஓங்க உனைவாழ்த்தும்
கெட்டிடும் கோபக்கெடு செயல் புரிந்தால்
கேவலமாக்கியுனைத் தூற்றும்

அளவோடெதையு மனுபவித்தால்
அழகிய வாழ்வின் வழிகாட்டும்
அளவுகள் மீறிச் செயற்பட்டால்
அமுதமும் நஞ்சாய் உயிர்வாட்டும்



- ஏறூர்க்கவிக்கோ
ஏ.சீ.அப்துல் றகுமான்

# உன் தோள் சாய மனம் தேடுதே

இரவென்றும் பகலென்றும்
இனிக்கும் நினைவாக
என்னுள் உறைந்தவன் நீயே.
உறவென்று உள்ளதெல்லாம்
உனையன்றி யாருமில்லை.
தெருவெங்கும் தேடுகின்றேன்.- உன்
தயவின்றி வாடுகின்றேன்.

ஊணின்றி உறக்கமின்றி
உன் நினைவில் உழலுகின்றேன்.
காணுகின்ற காட்சி யாவும்
நீ யெனவே நோக்குகின்றேன்.
வேரறுந்த செடி போன்று
வாடி யிங்கு வதங்குகின்றேன்.

உன்னோடு பேச எண்ணி
இதயமும் கனக்கிறதே.
உன் தோளில் சாய்ந்திடவே
என் மனமும் தேடுகிறதே.
அன்போடு கரம் கோர்க்க
ஆசை பொங்கி வருகிறதே.

ஏங்குமிவள் உள்ளமதைப்
புரிந்து கொள்ள மாட்டாயா?
என் னிதயச் சுமை போக்க
கரம் நீட்ட மாட்டாயா?
கசிந் தொழுகும் கண்ணீரைத்
துடைத்தெறிய மாட்டாயா?
காதலின் தாபம் தீர்க்க
கனிவு கொள்ள மாட்டாயா?

- நஸீரா எஸ் ஆப்தீன்



# அகிலமாளும் பேரரசே

பற்றற்று கிடக்கும்
பற்றுகளை பற்றிப்பிடிக்க உம்
பராக்கிரமங்களால்
பரிசளித்திடு!

நித்தமூறும் நீர்சுனையாய்
நின்நினைவுக் கேணிக்குள்
நித்தம் அள்ளயெண்ணுமென்
மனக்கரங்களுக்கு நீட்சி தந்திடு!

யாக்கையினுள் சுழற்றியடிக்கும்
செங்குருதியை
உச்சிமுகர்கையில்
உணரும் தருணமாய்
குளிர்ச்சிப் பதமாக்கிடு!

வெட்டவெளி வானமாய் நீ
வெட்கித்தலைகுனிந்த
ஈனமாய் நான்
பட்டவைகளால் புடம்போட்டெம்மை
திட்டவட்டமாய் தீர்க்கம் தந்திடு!

உச்சிகுளிரும் அந்நொடியில்
மெச்சி உதிர்க்கும் கண்ணீரில்
பிச்சிப்பூவின் மென்னிதழாய்
சக்திபெறட்டும்
ஒன்பது ஓட்டைகொண்ட
ஊண்சதுரம்..

ஆவல்மேவ
காதல்கொள்ளுமுன்னை
ஆதுரமாய் தழுவிக்கொள்
அகிலமாளும் பேரரசா..

# என் நேசம் நிசம்..

எனக்காக
நீ விட்டுச்சென்ற
நினைவுகளில்
கோழி அடைகாக்கும்
கதகதப்பை உணர்கிறேன்..

ஒளித்துவைத்தும்
காட்டிக்கொடுக்கும் தாழம்பூவின்
நறுமணத்தை உன்நினைவுகளில்
நுகர்கிறேன்..

உறைபனி நடுவில் உஷ்ணம் பரவ
இழுத்துபோர்த்திய போர்வையை
இன்னுமிழுத்து
இறுக்கப்பற்றிக்கொள்கிறேன்...

நமக்கான வாழ்வாதாரம் சேகரிக்க
நீ நாடுகடந்தாய்,
நானோ நினைவுக்கூடமைத்து
நித்தம் நமக்கான
வாழ்வலங்காரத்தை
சேகரித்துக்கொண்டிருக்கிறேன்...

பேரன்பின்
நீளத்தை வானிலும்
மனவுணர்வின் வாசத்தை பூக்களிலும்
தேடலின் மவுனத்தை தென்றலிலும்
பெருநேசமதின் துடிப்பை
பொங்கிக் கொட்டும்
பாலிலும் கண்டு நிறைகிறேன்..

உனது நிழலில் எனது நெஞ்சம்
தஞ்சமடையும்வரையில்
என் நேசத்தை உனக்காக
பூட்டிவைத்திருப்பேன்...

கனவுகளை அலங்கரிக்கும் கணவா
என் நிசத்தை நேரில் காண வா...

**அன்புடன்**

*மலிக்கா ஃபாரூக்*
முத்துப்பேட்டை.



# மகன் தந்தைக்காற்றும் நன்றி!



**முனைவர் ப. கற்பகராமன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் – 05

அன்பின் அடையாளமான ஆண்டவன் அனைவரின் அருகிலும் இருக்கின்றார் என்றால் அது அவரவர் தந்தை மட்டுமே. இவன் தான் எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும் என்று கடவுளிடம் வரம் வாங்கிப் பெற்று, உங்களையே உலகமாக எண்ணி வாழ்பவர்தான் தந்தை. உங்களின் வெற்றிக்காகவே ஒவ்வொரு முறையும் தோல்வியை விரும்பி ஏற்பவர் தந்தை. உங்களுடைய வெற்றிக்குத் தேவையானது உலகின் எந்த மூலையில் இருப்பினும், உலகில் உள்ள சிறந்தவை அனைத்தும் தன் மகனுக்குத்தான் என்று ஓயாது உழைத்து அதனைப் பெற்றுத் தருபவர் தந்தை. என் மகன் அறிவுக்கு அகிலமே அடிமை என்று அனைவரிடமும் ஆனந்தமாக அறிவிப்பவர் தந்தை.

தடுக்கிவிழும்போது தோழனாய், வழி காட்டுவதில் தலைவனாய், போதிப்பதில் குருவாய், மொத்தத்தில் எப்படி வாழவேண்டும்என்றுவாழ்ந்துக்காட்டுபவர் தந்தை. நீங்கள் பெற்றுள்ள தந்தை என்பவர் வெறும் பூத உடல் கொண்டவர் மட்டும் அல்ல. பஞ்ச பூதங்களின் ஆற்றல்களையும் உங்களுக்குள்ளே அடைத்துப் பக்குவமாக உங்களை அனுதினமும் செதுக்கும் சிற்பியே உங்கள் தந்தை.

யார் சொன்னது கடவுளுக்கு உருவமில்லை என்று? உங்கள் தந்தையை நன்கு உற்றுப்பாருங்கள். உலகில் உள்ள அனைத்துக் கடவுள்களின் மொத்த உருவமாகத் தோன்றுவார். இவர்தான் உண்மையான கடவுள் என்று நாம் உணரவில்லை என்பதே உண்மை.

உங்களுக்காகவே ஓர் உலகத்தை உருவாக்கி வைத்துள்ளார் உங்கள் தந்தை. அது தன்னையே அழித்து உருவாக்கிய உலகம். தன் மகனுக்கான உலகம். இந்த உலகத்தில் உங்களைத் தவிர மற்றவர் யாராலும் வெற்றியடைய முடியாது. இந்த உலகத்தை ஒருபோதும் சிதைத்து விடாதீர்கள். அதன் வலி உங்களுக்கு இப்போது புரியாது. நீங்கள் தந்தையாகும் போது மட்டுமே அதன் வலியை உங்களால் உணரமுடியும்.

உங்கள் தோல்வி உங்களுடைய தந்தையின் தோல்வி. உங்களைப் பெற்றதனால் எந்த சூழலிலும் உங்கள் தந்தை தலை குனிந்து விடக் கூடாது. நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உங்கள் தந்தையின் இதயத் துடிப்பு. நீங்கள் ஒவ்வொரு முறை தோற்கும் போதும் உங்கள் தந்தையின் ஆயுளில் ஓர்நாள் குறைகின்றதாம். நீங்கள் சிந்தும் ஒவ்வொருதுளி வியர்வையும் உங்கள் தந்தையின் உதிரம். அதனை வெறுமனே வீணாக்காதீர்கள். அதனை வெற்றிக்காக மட்டுமே செலவிடுங்கள்.

உங்களுடைய கண்கள் மட்டுமல்ல உங்கள் தந்தையுடைய கண்களும் உங்களுடைய வெற்றியையே ஒவ்வொரு நாளும் தேடும். அவருடைய கண்களையும் சேர்த்துக் குருடாக்குவதற்காக நீங்கள் பிறவியெடுக்கவில்லை. பெற்றோரின் எண்ணங்களைப் பொய்யாக்குபவனுக்கு எமலோகத்திலும் இடமிருக்காதாம்.

நீங்கள் செய்யும் தவறை உங்கள்

பெற்றோர்அறியமாட்டார்கள்என்றுமட்டும் எந்தத் தருணத்திலும்; எண்ணிவிடாதீர்கள். அதை விட முட்டாள்தனம் உலகில் வேறு எதுவும் இல்லை. உங்களுடைய உயிர் அது. உங்களுடைய ஒவ்வொரு அசைவும் அவ்வு யிருக்கு அத்துபடி.

எந்த சூழ்நிலையிலும் உண்மையாக இருங்கள். நீங்கள் செய்யும் தவறை நீங்களே உங்கள் பெற்றோருக்கு அறிவித்து விடுங்கள். இது மீண்டும் உங்களை அத்தவறைச் செய்யவிடாமல் உங்களைக் காப்பாற்றும். உங்கள் தவறைப் பிறர் விமர்சிக்கும்போது அதைத் தாங்கும் சக்தி சத்தியமாக அந்த அன்பு உள்ளத்திற்கு இருக்காது.

கல்வியில் சிறந்து விளங்குங்கள். கற்றதைப் பிறருக்குக் கற்பியுங்கள். வாழ்வது எப்படி என்பதை வாழ்ந்துக் காட்டுங்கள். எதிர்க்கும் வெற்றிக்கனியைப் பரிசளியுங்கள். உங்களுக்கு நிகர் நீங்கள் மட்டுமே என்பதை ஒவ்வொரு தருணத்திலும் உணர்த்துங்கள். வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் வளருங்கள். புலிக்குப் பிறந்தது புலிதான் என்பதை நிரூபிக்க இதுவே சிறந்த வழி.

செய்யும் செயல் அனைத்திலும் வெற்றியைப் பெறுங்கள். பெற்ற வெற்றியை உங்கள் தந்தைக்குப் பரிசளி யுங்கள். அந்த உயிர் உங்களிடம் எதையும் கேட்பதில்லை. உங்களுடைய உயர்வை மட்டுமே காணத் துடிக்கின்றது.

ஒவ்வொரு நாளும் புதுப்புது மகிழ்ச்சியை உங்கள் தந்தைக்குப் பரிசளி யுங்கள். எந்த சந்தர்ப்பத்திலும் அவரை விட்டுக்கொடுக்காதீர்கள். உலகில் உள்ள உயர்ந்ததையெல்லாம் பக்குவமாகப் படைய லிடுங்கள். ஏனென் றால் இறுதிவரை உங்களோடு அவ்வுயிர் பயணிக்காது. என்று வேண்டுமானாலும் அப்பயணம் தடை படலாம். அவரில் நீங்கள் கலந்து உங்களில் அவரைக் கலந்துவிடுங்கள். உடலுக்குத் தான் பிரிவு. உணர்வுக்கு அல்ல. என்றும் அந்த உணர்வோடு இணைந்தே இருங்கள். ஏனென்றால் அவர் உங்களுக்கு உயிர் தந்த உயிர்

■

# அந்தத் தலையணை!

## கவித்திலகம் வெற்றிப்பேரொளி

அந்தத் தலையணை....

அன்னை மடிக்கு
அடுத்தமடி!

உறக்க உலகுக்கு
என்னைச் சுமக்கும்
பல்லக்கு!

கண்மூடும் பொழுதெல்லாம்
கனவுகளைப் பரிசளித்த
கொடைக்கரம்!

மந்திரம் ஓத
மனைவிக்குக் கிடைத்த
மடம்!

தனிமை மெத்தையில்
துணைவரும் தத்தை!

குழந்தைகள்
அடித்துவிளையாட
கைக்குக் கிடைத்த ஆயுதம்!


சில வீடுகளில்
பாயுடன் குடும்பம் நடத்தும்
பத்தினி!

ஆண்டுக் கணக்கில்
சேவகம் செய்யும்
அடிமை!

மனித வாசனை
மல்லிகை வாசனை
இரண்டையும் சமமாக உணரும்
சித்தர்!



# பாரியன்பன் – கவிதைகள்



1.
கோடையில் பெயர்த் தெரியாத மரத்தடியில்
நிழலுக்காக ஒதுங்கிய ஒரு வழிப்போக்கன்
நிழலின் குளிர்ச்சியில் வெயிலின் தாக்கத்திற்கான
காரணத்தை அறிய முற்படுகிறான்.
அதை அவன் கண்டறிந்த வேளையில்...
அவன் தலைக்குப் பின்னால் ஒளிர்கிறது ஒளிவட்டம்.
இப்போது அந்த வழிப்போக்கன்
எல்லோராலும் புத்தனென்று அழைக்கப்படுகிறான்.
அவனுக்கு ஞானத்தை போதித்ததால்
பெயர்த் தெரியாத அம்மரத்தை எல்லோரும்
போதி மரமென்று அழைக்கிறார்கள்.

2.
பசியை மிச்சம் வைத்தே பிரிகிறது ஒவ்வொரு பொழுதும்.
வேளைக்கு வேளை நீண்டு தொடர்ப் படிகளாய் முடிவின்றி.
முயற்சி தேடலின்றி எதற்கும் இல்லை தீர்வு.
சிறிதும் பெரிதுமாய் வடிவங்களில் உருவங்களில்
வெவ்வேறாய் எண்ணற்ற உயிர்கள்.
அதனதன் தேவையைப் பொறுத்தே பசியின் பட்டியல்.
எனினும் எவ்வுயிர்க்கும் பாசாங்கற்றது பசி.

3.
அப்பா அம்மா அண்ணன் அக்கா தோழியென
ஒவ்வொருவருக்குமான முத்தங்களை
தன் வலது இடது கன்னங்களிலிருந்து மாறி மாறி
எடுத்துக் கொடுக்கிறது குழந்தை.
கடைசியாய் தாத்தாவின் முத்தம் மட்டுமே பாக்கியென்று
குழந்தை திருப்பிக் கொடுத்த தாத்தாவின் முத்தத்தில்
பாட்டின் வாயிலிருந்து கடைசியாய்
கழன்று விழுந்த கடவாய்ப் பல்லொன்று
பத்திரமாக இருக்கிறது தாத்தாவின் கன்னத்தில்.



**பாரியன்பன்**
குடியாத்தம் - 632602

# தன்முனைக் கவிச்சாரல்

## ராஜூ ஆரோக்கியசாமி



◆ தன்முனைக் கவிச்சாரல் -1

ஒருவன் சம நிலையில் இருப்பதற்கும், நிமிர்ந்து நிற்பதற்கும் வில் ஒரு சின்னமாக சொல்லப்படுகிறது. வில் வித்தையில் ஒருவன் பயிற்சி பெறவேண்டுமானால், அவனது கட்டைவிரல் தான் மிக முக்கியமானது. மிகச் சிறந்த வீரனாக வேண்டுமானால் அதன் முக்கியத்துவம் எவ்வளவு எனபதை அறிந்து அருச்சுனன் மட்டுமே மிகச் சிறந்த வீரனாக வேண்டுமானால் ஏகலைவன் வில்லைத் தொடக்கூடாது எனத் தீவிரமாக சிந்தித்து ஒரு முடிவு செய்தார் துரோணர். ஏகலைவனை நோக்கி "உனது வலதுகைக் கட்டைவிரலைத் தா" என்றார். ஒரு கணம் கூடத் தாமதிக்காமல் கத்தியை எடுத்தான் தனது வலதுகைக் கட்டைவிரலை வெட்டி எடுத்து துரோணரின் காலடியில் வைத்தான். ஒருவன் வலது கைக் கட்டைவிரல் இல்லாமல் வில் எய்ய முடியாது, அருச்சுனன் தன் குருவின் கொடூர எண்ணத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். தான் மட்டுமே வில்லாளன் என்ற எண்ணம் மேலோங்கி நின்றான். (https://ta.wikipedia.org/wiki)

ஏகலைவன் நான்
துரோணராய் இணையும்
யாருக்கும் இல்லை
என் கட்டைவிரல்

◆ தன்முனைக் கவிச்சாரல் - 2

புத்தனின் வாழ்க்கையை போற்றும் யாரும் அவர் மனைவி யசோதராவைப் பற்றிப் பேசுவது இல்லை. புத்தர் போனது போல் யசோதரா ஒரு நள்ளிரவில் வெளியேறி இருந்தால் இந்த உலகம் ஒப்புக் கொண்டிருக்குமா... ஓடுகாலி என்றிருக்கும்.

சரி, புத்தர் போன பின்பும்தான் என்ன செய்தது... அவளை வாழாவெட்டி என்றது.

அப்படி ஒன்றும் வயதாகிவிடாத அழகு மங்கை. ஒற்றைக் குழந்தை ராகுலன். விடுமா ஆண்வர்க்கம்.?சாதாரணமாய் இருந்தாலே விடாது. உரிமையாய் ஒரு ராஜ்ஜியம் வேறு.

எவ்வளவு போராடியிருப்பாள்.? புத்தர் போனதும் தன் தலையை மழித்துக் கொண்டாள். தன் ஆடை அலங்கோலமாக்கிக் கொண்டாள். ஒற்றைப் பிள்ளையின் "அப்பா எங்கே" எனும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமலேயே பதின்வயது வரை வளர்க்கப் போராடினாள்.

எல்லாவற்றையும் துறந்து எத்தொல்லையும் இல்லாமல் துறவியானான் புத்தன்.

எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு, எல்லாத் துயரையும் அனுபவித்தபடி துறவியாய் வாழ்ந்தாள் யசோதரா.

எது கடினம்.? சொல்லுங்கள் யார் துறவி இப்போது.!!!

துயரங்களின் அம்புகளின்
காயங்களோடு போராடுகிறேன்
புத்தனாதல் எளிது
யசோதரையாய் வாழ்தலே




**சங்கம் மருவிய காலப் பாடல்களில் ஆண்கள் பேசுவதான பாடல்களில் ஒருவிதமான ஆணாதிக்கத் திமிரும் பெண்களை போகப் பொருளாகக் காணும் தன்மையும் இறைந்து கிடப்பதை நாம் கடந்து போகுதல் தகாது.**

**– கவிஞர் விக்டர்தாஸ்**

நேர்கண்டவர் :
**தமிழ்நெஞ்சம் அமின்**

# நேர்காணல்

ஆளும் வளர்ந்தவர் அறிவும் வளர்ந்தவர்
அன்பெனும் தேசத்தில் நாளும் வளர்ந்தவர்
தாளும் கோலும் கையில் கிடைத்தால்
தாங்கா திவரின் தமிழ் விளையாட்டு
ஆளிவர் அனுதினம் ஆக்கிடும் படைப்பு
ஆகா சத்தின் சூரிய வெளுப்பு
பாலும் கசக்கும் பழமும் புளிக்கும்
பாயிவர் எழுதினால் பக்கங்கள் இனிக்கும்!

உருவங் கறுப்பு உள்ளம் வெளுப்பு
உயிர்த்திடும் பொழுதிவர் உயரிய சிரிப்பு
கருவ மறியா கவிஞர் விக்டர்தாஸ்
காலக் கிருபையின் கனத்தப் பிறப்பு
அரியவை யொன்றை அடைந்தது போலே
அகமகிழ் வெய்தினாள் தமிழி வராலே
சரியிவர் பதிலை சந்திப்போம் கொஞ்சம்
சந்தோஷிக்குது தமிழ்(மா) நெஞ்சம்!

1) பழமையான இலக்கிய நூல்களுக்கும், நவீன இலக்கிய நூல்களுக்குமிடையில் இருக்கக் கூடிய ஒற்றுமை வேற்றுமைகளை ஒரு கவிஞனாக எப்படி பார்க்கிறீர்கள்?

மனிதனை மனித குணங்களை மேம் படுத்தும் ஒரு மகத்தான கருவி இலக்கியம்.

ஈரத்தை இரக்கத்தை ஒழுக்கத்தை உயர் பண்பை சலவை செய்து தரும் ஒரு தங்க விரல் இலக்கியம்.

குழந்தையின் கண்களில் ஞானியின் பார்வையையும் ஞானியின் உதடுகளில் குழந்தையின் இதயத்தையும் உடுத்திக் காட்டி ஊஞ்சலாட்டும் ஓர் உன்னதப் பாடசாலை இலக்கியம்.

இப்படிப்பட்ட குணங்களை இறுக்கிக் கட்டியதே இலக்கியம்.

இதில் பழையது நவீனம் என்ற பாகுபாடு கிடையாது

அப்படி ஏதேனும் இடைவெளி இருந்தால் அது இலக்கியமே கிடையாது.

நற்றிணையில் ஒரு பாடல் வரும்.

மனிதநேயம் மிஞ்சிய மர நேயம் அந்தப் பாடல்.

ஒரு புன்னை மரத்தை தன் சொந்தத் தங்கையென்கிறாள் அந்தச் சங்ககாலத் தங்கத் தமிழச்சி.

வரி இதுதான்

"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்(று)
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொழி நகையே"

இதற்குச் சற்றும் குறையாமல் நம் சமகால மகாகவி ஐயா.ஈரோடு தமிழன்பன் இப்படிச் சொல்கிறார்

"போகும் போது
வாசலில் பூத்திருக்கும் பூவிடமும்
ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப்
போகக் கூடாதா"

ஆக பழமையின் சங்கிலிக் கண்ணிகள் பழுத்த விரல்களால் விதைகளாக நடப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன.

நந்தவனங்கள் நிறைய நிறைய பூத்துக் கொண்டேதான் வருகின்றன.

ஒன்றிரண்டின் தவறுகள் உலகத் தவறுகள் ஆகிவிடாது.

விதிவிலக்குகளை தொல்காப்பியம் நன்னூல் கூட தோள்தட்டிக் கொடுத்திருக்கிறதே அன்றி அதைத் துரத்திவிடவில்லை என்பதை நாம் உணர்வது அவசியம்.

2019ல் நிலா முற்றம் கவியரங்க விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து சிறப்பிதத்போது,,, கவிஞரின் உடனிருப்பவர்கள் கவிஞர் பொன்மணிதாசன், கவிதைக்கலைமாமணி வீரபாண்டியத்தென்னவன் ஐயா மற்றும் பாலிடெக்னிக் பிரின்சிபல் தமிழரசு ஆகியோர்.





கவிஞரின் பாடல் ஆல்பம் தயாரிப்பின்போது இசையமைபிற்குப்பின் எம்.எஸ்.வி ஐயா அவர்களுடன் அவர்கள் வீட்டில் கவிஞர் விக்டர்தாஸ். 2000

அதனால் வேற்றுமைகளின் வேரறுத்தல் தேவையில்லை. விசனப் படவும் அவசியமில்லை.

காலம் நல்லவற்றை நிறுத்தும் அல்லவற்றை விரட்டும்.

**2) பழங்காலக் கவிதைகளின் ஆழத்தை தற்போதைய கவிதைகளில் காணமுடிவதில்லையே! இதைப்பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இதை சாயம் போன அல்லது சாரம் போன குற்றச்சாட்டென்றே சந்தேகிக்கிறேன்.

காரணம் பழங்கவிதைகள் அத்தனையும் பவுன்கள் அல்ல. சமகாலக் கவிதைகள் அத்தனையும் சருகுகள் அல்ல.

அங்கும் சருகுகள் உண்டு. இங்கும் பவுன்கள் உண்டு.

2381 சங்கப்பாடல்களில் உள்ள 1862 அகப்பாடல்களும் ஆராதிக்கபட வேண்டிய ஒன்றல்ல.

அவை அத்தனையும் பூச்செண்டல்ல கற்கண்டல்ல. தேன் துண்டல்ல.. உண்மையில் அவை யாவும் நன்றல்ல.

தூது உலா போன்ற சிருங்கார இலக்கியங்கள் இந்தச் சமூகத்திற்கு எந்த வகையிலும் அவசியமல்ல.

மட்டுமல்ல சங்க கால சங்கம் மருவிய காலப் பாடல்களில் கூட களவொழுக்கமும் உடன்போக்கும் கதறலும் பதறலுமே பெரும்பாலான பாடல்களாக பின்னிக் கிடக்கின்றன என்பதை நாம் மறந்துவிடல் ஆகாது.

அதிலும் ஆண்கள் பேசுவதான பாடல்களில் ஒருவிதமான ஆணாதிக்கத் திமிரும் பெண்களை போகப் பொருளாகக் காணும் தன்மையும் இறைந்து கிடப்பதை நாம் கடந்து போகுதல் தகாது.

“அரிவைக் கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே”

இது குறுந்தொகைப் பாடல்.

“குவளை அன்ன ஏந்தொழில் மழைக்கண்
திதலை அல்குல் பெருந்தோள் குறுமகட்கு”

“அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
ஏறி மடமாற்கு வல்சி ஆகும்
வல்வில் ஓரி கானம் நாறி
இரும்பல் ஒலிவரும் கூந்தல்”

இது நற்றிணைப் பாடல்.

ஒன்று பெண்ணுண்ட எக்காளத்தில் ஆண் பாடுவது. இன்னொன்று பெண்ணுண்ண ஆண் வலை விரிப்பது.

சரி, புறப்பாடல்கள் மட்டும் பொருள் பொதிந்தவையா என்ன.

இல்லை. சரித்திரம் பேசிய சத்திய வார்த்தைகளா என்ன.

அன்றைய மன்னராட்சியில் குடி மக்கள் எல்லாம் உழைத்து உழைத்து ஓடாகி வரிகட்டி வரிகட்டி கேடாகி, அந்து அறுந்து நூலாகி, பந்து போல பாழாகி வறுமையில் வாடிய போதுதான் உழைக்க உடன்படாத இந்தப் புலவர்பிரான்கள் வாய்கொள்ளாத பொய்சொல்லி மன்ன

னைப் புகழ்ந்து பாடி பொன்னும் பொருளும் பொட்டலங்கட்டி எடுத்தேகி இருக்கின்றனர்.

அந்தப் பாடல்கள் உண்மையு மில்லை அதனால் ஊருக்கு எந்த நன்மையுமில்லை.

அதனால்தான், புலவர்களின் சான்று களை எந்தச் சரித்திர ஆய்வாளனும் ஒப்புவ தில்லை.

தந்தால் போற்று தராவிட்டால் தூற்று. இது புலவர்கள் பொதுப்புத்தி.

சாட்சிக்கு ஒரு புறநானூற்றுப் பாடலை சபைக்கு அழைக்கிறேன்.

“யாணர் வைப்பின்,
நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை!
நீயோ, பெரும!
அலங்குளைப் புரவி
ஐவரோடு சினைஇ,
நிலந்தலைக் கொண்ட
பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும்
பொருது, களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம்
வரையாது கொடுத்தோய்”

இதன் பொருள் யாதெனில் மகாபாரதப் போர் நடந்த போது இரு பிரிவுகளுக்கும் சோறிட்டவன் நீ என்பதாகும்.

இதனின்று இதன் உண்மைத் தன்மையை நான் சொல்லி நீங்கள் தெரிய வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

இப்படி என் சுட்டுவிரல் நீட்டிச் சுட்டாலும் நுட்பமான நுண்மாண் நுழைபுலம் ஆன பல பல பாடல்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் உண்டென்பதும் ஒதுக்க இயலாத உண்மைதான்.

நான் மேற்சொன்ன அத்தனைக் கூற்றும் நிகழ்காலக் கவிதைகளுக்கும் பொருந்தும்.

பல நல்லக் கவிதைகள் இன்றும் எழுதப்படுகிறது என்பதை நாம் மறைத்தல் தகாது.ஆனால் தகாத படைப்புகளும், விடாத கருப்பாக நம்மை விரட்டுவதும் சம நாள்களின் சாபம் என்றே கருதுகிறேன்.

ஓர் அப்துல் ரகுமானை
ஓர் ஈரோடு தமிழன்பனை
ஒரு மீராவை
ஒரு மேத்தாவை
ஒரு துரை வசுந்தராசனை
ஒரு வெற்றிப்பேரொளியை
ஓர் ஆரூர் தமிழ்நாடனை
ஒரு வண்ணதாசனை
ஒரு பொன்மணி தாசனை
ஒரு பொற்கைப் பாண்டியனை

இன்னும் பல அபூர்வக் கவிஞர்களை அருகில் வைத்துக்கொண்டு தற்போதைய கவிதைகளில் தங்கம் இல்லையா எனச் சந்தேகிப்பது தமிழுக்கு நல்லதல்ல என்றே தழுதழுக்கிறேன்.

### 3) ஒரு கவிஞன் எதையெல்லாம் பாட லாம்? எதைப் பாடுவதைத் தவிர்க்கலாம்?

இது ஒரு நல்ல கேள்வி

கவிஞர்களுக்கான ஒரு செல்ல வேள்வி என்றே இந்த வினாவை எதிர் கொள்கிறேன்.

கவிதை என்பது கார்மேகம் கட்டி வைத்த மழை மாதிரி. அது எப்போது அவிழும் எவ்விடம் நெகிழும் எவ்வாறு நிகழும் என்பது எவருக்கும் தெரியாது. ஏன் கவிஞனுக்கே தெரியாது.

ஒரு நல்ல கவிதை என்பது கவிஞன் எழுதுவதில்லை. அது கவிஞனைக் கொண்டுஎழுதப்படுகிறது.அவ்வளவுதான்.

ஏதோ ஒரு சக்தி, எங்கிருந்தோ வரும் ஓர் ஆற்றல் படைப்பாக கவிஞன் விரல்வழி வழிகிறதே அன்றி, அது அவனால் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

இதன் கர்த்தா யாரென இதுவரை தகவல் இல்லை.

இதில், கவிஞன் ஒரு கருவி மட்டுமே. கருவிகளுக்கு கர்வம் கூடாது.

குழந்தைகள் நம்மூலம் வருகிறார் கள். அவர்கள் நமக்கானவர்கள் அல்ல என்பது எத்தனை நிஜமோ அப்படித் தான் ஒரு கவிஞனுக்கு அவன் கவிதை என்பது.

எங்கோ தயாரிக்கப்பட்ட ஒரு பொருள் வந்திறங்கும் சந்தைதான் கவிஞன்

என்பவன்.

மட்டுமல்ல கவிதை என்பது கறப்பதல்ல சுரப்பது.

எதைப் பார்க்கிற போது
எதை நினைக்கிற போது
எதை வாசிக்கிற போது
எதை யோசிக்கிற போது
இதய நாளங்களில் ஈரம் பூக்கிறதோ

எது கனக்கிற போது
எது மணக்கிற போது
எது கடைகிற போது
எது உடைகிற போது
மனத்தின் மையங்களில் வெப்பம் காய்க்கிறதோ

அவ்வாறானவற்றை ஆழ மண்தோண்டி ஆயிரஞ் சூரிய வெளிச்சத்தோடு எழுதுதல் நன்று.

எதை தன் தாயிடமும், தன் சகோதரியிடமும், தன் மகளிடமும் பேசத் தகாதென உள் மனது உத்தரவிடுகிறதோ அதை அமிலக் குழிதோண்டி எழுதாமல் புதைப்பது இனிது.

ஓர் எழுத்து என்பது குறைந்தபட்சம் ஒரு கண்ணின் நீர் துடைப்பது.

அதிகபட்சம் இந்த பூமி கொண்ட காயங்களின் வேர் அடைப்பது.

பெண்களை கொச்சையாக ஆபாச மாக எழுதும் போக்கு இப்போது அதிகரித் திருக்கிறது என்பது அகற்ற முடியாத உண்மை.

அவ்வாறு எழுதுபவர்களின் ஆதர் அட்டை, வாக்காளர் அட்டை, உணவுப் பங்கீட்டு அட்டை, வங்கி அட்டை, கடவுச்சீட்டு அனைத்தையும் அரசு பறிமுதல் செய்ய வேண்டும்.

மட்டுமல்ல, அப்படிப்பட்டவர்களை திறந்தவெளிக் கைதிகளாக உள்ளூர் அகதி களாக ஊருலகுக்கு அறிவிக்க வேண்டும்.

எழுத்துச் சுதந்திரம், பேச்சு ஜன நாயகம் என எவரேனும் கொடி தூக்கினால் பிரம்பாலே உரிக்க வேண்டும்.

**4) கவிதைகளின் மூலமும் சமூகத்தில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரலாம். அந்தவகையில்,இயற்கைவளங்களைக்காத்தல், துஷ்பிரயோகங்களில் இருந்து பெண்கள் சிறுவர்களைக் காத்தல், ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் இன்னும் இதுபோன்ற விடயங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக்காக கவிஞர்கள் ஆற்ற வேண்டிய பங்கு என்ன?**

ஆதங்கத்தோடு எறிந்த ஆக்கப்பூர்வ மான சாட்டை இது.

அதற்காகவே உங்களை ஆரத் தழுவுகிறேன். அன்பால் வாழ்த்துகிறேன்.

புரட்டிப் போட்ட புரட்சிகள், பொறுக்க முடியாத போராட்டங்கள், மறுக்க இயலாத மாற்றங்கள், சீறிக் கிளம்பியச் சீர்திருத்தங்கள் இவை அத்தனையும் ஏதோ ஓர் எழுத்தால், இடைவிடாத பேச்சால் தொடர் முழக்கங்களால் தொடர்ந்து எழுதப்பட்ட துண்டறிக்கைகளால்தான் என்பதை நம் இளையச் சமூகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமை நமக்கிருக்கின்றது.

கத்தியின்றி ரத்தமின்றி, யுத்தமின்றி எல்லாம் இந்தச் சுதந்திரம் வரவில்லை என்ற வரலாற்று உண்மையை நம் வீட்டுப் பிள்ளைகளின் புத்தியில் விளக்கேற்ற வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கின்றது.

பாரதி காலத்தில் ஒரே ஒரு எதிரி தான். ஒரே ஒரு வெள்ளைக்காரன்தான்.

இப்போது அப்படியல்ல. கண் ணுக்குத் தெரியாத பல துரோகிகள். கட்டுக்கடங்காத பல கொள்ளைக் காரன்கள்.

இவர்களை அறுக்க, இழிசெயல் களை நொறுக்க, ஐம்பூதச் செல்வங்கள் காக்க, பெண்கள் குழந்தைகள் பெரியவர்கள் பேண, தற்சார்பு பெருக, வறுமை அருக, சாதி சமயச் சழக்குகள் விலக, அனைவருமே களமாடல் அவசியம்.

இது காலத்தின் கட்டாயம். இதன் ஒருங்கிணைப்பை ஒவ்வொரு கவிஞனின் எழுத்தும் செய்ய வேண்டும். ஈட்டிமுனையாய் எழுத்துமுனை விழிப் புணர் வைப் பெய்ய வேண்டும்.

காசுக்கு விலை போவதை கவிதை தடுக்க வேண்டும்.

கவிஞன் முதலில் களவு போகா திருக்க வேண்டும்.

குண்டர்களை கவிதைக் குண்டு களால் ஒடுக்க வேண்டும்.

இண்டு இடுக்கெல்லாம் இணையத் தளம் மூலமாக எழுத்து பீரங்கிகள் இறங்க வேண்டும்.

ஊழல் அதிகாரிகளை, உதவாக்கரை அரசியல்வாதிகளை, தோல்கனத்தத் தொழி லதிபர்களை, வாக்குக்கு பணம் பெறுபவர் களை, சட்டத்தின் முன் நிறுத்த கவிஞர்கள் எழுதுகோல் சவுக்கு எடுக்க வேண்டும்.

அறைக்குள் இருந்து அறிவிப்பு மட்டுமே செய்வதல்ல கவிதை.

தேவை வந்தால் தரையில் இறங்கி மக்களோடு மக்களாக இயங்கி நீதி வென்றெடுக்க கவிஞன் களப்போராளி ஆக வேண்டும்.

அப்போதுதான் எழுதுகோல் என்பது ஒவ்வொரு உள்ளத்தையும் உழுத கோலாகவும் உலகே தொழும் கோலாகவும் மாறும். இல்லை இல்லை மாற வேண்டும்.

## 5) ஒரு கவிதையின் வடிவம் எப்படி அமையவேண்டும்?

வடிவம் எப்படி இருந்தால் என்ன வளைந்துதான் இருக்கட்டுமே வானவில் அழகு தானே.

நிறங்கள் ஏதோ ஒரு மாயாஜாலம் செய்கிறதல்லவா

அதுதான் அதன் பயன்பாடு அது போதும். தோற்றம் எப்படி இருந்தால் என்ன அழுக்காகவே இருக்கட்டுமே... ஆறு அழகு தானே.

தரையில் அது மெழுகும் நீராடை எத்தனை நிலத்திற்குப் பச்சைப் புடவை போர்த்துகிறது. அதுதான் அதன் பிறவிப் பயன் அதுபோதும்.

பார்க்கக் கூட முடியாவிட்டால் என்ன. உருவமே இல்லாதிருக்கட்டுமே... காற்று அழகு தானே.

ஒவ்வொரு உடலுக்கும் அதுதானே உயிரூட்டுகிறது. அதுதான் அதன் செயப் பாட்டு வினை. அதுபோதும்.

கவிதையும் அதுபோல் தானே.



கவிஞரின் பாடலை எம்.எஸ்.வி ஐயா இசயமைத்துப் பாடியத் தருணம்... எஸ். பி.பாலாவுடன் கவிஞர் விக்டர்தாஸ். 2000

என்ன வடிவம் என்றால் என்ன

இந்த உலகுக்கு உதவுகிறதா? உணர் வுகளை மென்மை செய்கிறதா? விலங்குத் தோல் உரிக்கிறதா? ஞானநதி பொரிக்கிறதா? மனிதநேசம் வளர்க்கிறதா? உயிர்களிடம் அன்பு பாராட்டுகிறதா? இயற்கையை காதலிக்கச் சொல்லித் தருகிறதா? பெண் மையை மதிக்கப் பழக்குகிறதா.?

அதுபோதும் ஒரு கவிதைக்கு.

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை யாய் இருப்பதை விட, ஒழுகும் குடிசைக்குள் உள்ளங்கை ஏந்தலாக இருத்தலே உன்ன தமான கவிதையின் உயரமான இலக்கணம் என நம்புகிறேன் நான்.

இப்போதெல்லாம் நிறைய பேரிடம் வடிவம் இருக்கிறது. கவிதை இல்லை என்ற குற்றச்சாட்டை அத்தனை எளிதாக நாம் புறந்தள்ளிவிட முடியாது.

வடிவம் என்பது உடல் மாதிரி. கவிதை என்பது உயிர் மாதிரி

உயிரற்ற உடல் வெறும் பிணம். செத்த பிணத்தைக் கொண்டாடுவது சிறப்பல்ல.

ஒரு செய்தி சொல்கிறேன்.

ஒரு மன்னனுக்குப் பிறந்தநாள் வருகிறது. அதனால் அரண்மனையைச் சுத்தப்படுகிறார்கள்.

அப்போது அங்கிருந்த சிலந்தியின்

கூடொன்றைச் சிதைத்துச் சிதிலமாக்கி சிரச்சேதம் செய்து விடுகிறார்கள்.

ஆனால், பொன் பூ பழம் பொருள் என யார் யாருக்கெலாமோ என்னென் னவோ தானம் தருகிறார்கள்.

இங்கே பாருங்கள்.

சிலந்தியின் வாழ்வாதாரம் போயிற்று. கட்டிய வீடு களவு போயிற்று. இருந்த இடமும் பறிபோயிற்று.

இரவானால், அது எங்கே போய் உறங்கும். குளிரெடுத்தால் எந்த நூலெடுத்துப் போர்த்தும். உணவு பெற எங்கே வலை வாங்கும்.

இல்லாதவன் என்பதால் இந்த இழிநிலையா? கேட்க ஆளிலையா.

இத்தனைக் கேள்விகளால் கிழிந்து போன ஒரு புலவன் முத்தொள்ளாயிரத்தில் முகம் வீங்கக் கண்ணீர் விடுகிறான்.

அது இது



"அந்தணர் ஆவொடு
பொன்பெற்றார் நாவலர்
மந்திரம்போல் மாண்ட
களிறூர்ந்தார்-எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி
இரேவதிநாள் மன்னோ
சிலம்பி தன் கூடிழந்த
வாறு"

இதில், வெண்பா என்ற வடிவம் தாண்டி அந்தப் புலவனின் உயிர் நேசம் நம்மை ஏதோ செய்கிறதல்லவா. அதுதான் கவிதை.

சமகாலச் சங்கதி ஒன்று தருகிறேன்.

"பித்தன்
தன் சட்டையைக்
கிழித்துக் கொண்டிருந்தான்.

சட்டையை ஏன்
கிழிக்கிறாய் என்றேன்

கடிதத்தைப்
படிக்க வேண்டும் என்றால்
உறையை
கிழிக்கத்தானே வேண்டும்
என்றான்"

இது, கவிக்கோ அப்துல் ரகுமான் கஜல் வடிவக் கவிதை.

இந்த வடிவம் கடந்து ஏதோ ஒரு மின்னல் கீற்று நம் இதய ரேகையுள் ஏதேதோ தோகை விரிக்கிறதல்லவா

அதுதான் கவிதை.

மரபு
புதிது
ஐக்கூ
தன்முனை
சென்ரியு போன்ற நவீனம்

இப்படி எந்த வடிவத்திலும் பயணம் போக தமிழ் தயாராகவே இருக்கிறது

வாசகர்களும் வாஞ்சையோடுதான் காத்திருக்கிறார்கள். நல்ல மாலுமிகளே நமக்கான தேவை.

6) சாதி, மதம், அரசியல் இவற்றில் கவிதைகளின் நிலைப்பாடு என்ன? சரியான திசை நோக்கிய பயணமாக அது அமையுமா?

அரசு அரசியல் சமூகம் தேர்தல் கோவில் இவை சாதி மதம் வளர்க்கும் சங்கட மடங்கள்.

இவற்றின் சங்கறுக்க கையில் உள்ள ஒரே ஆயுதம் கல்வியும் விழிப்புணர்வும் மட்டும்தான்.

கல்வி எத்தனை முக்கியம் என்பதற்குச் சான்றாக ஒரு புறப்பாடல் தருகிறேன்.

''உற்றுழி உதவியும்,
உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது,
கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன
உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால்,
தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த
பல்லோ ருள்ளும்,
'மூத்தோன் வருக'
என்னாது, அவருள்
அறிவுடை யோன் ஆறு
அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த
நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன்
கற்பின்,
மேற்பால் ஒருவனும்
அவன்கண் படுமே''.

இந்தப் பாடல் சொல்வது யாதெனில் கல்வி பரவாலானால் மேல் கீழ் பேதம் தகரும். கீழ் என்ற அமைப்பே சிதறும். கற்றால்தான் மதிப்பே உயரும். கற்றவனைத் தான் அரசே மதிக்கும்.

மட்டுமல்ல கல்விதரும் ஆசிரியர்களுக்கு கணக்குப் பாராமல் தர வேண்டும்

அவர்களுக்கொரு இடரெனில் அரணாக நாம் வர வேண்டும்.

ஆனால் நம்மூரில் கல்விக்கூடங்கள் வாசலிலேயே என்ன சாதி நீ
எனக் கேட்கிறது அரசு.

அங்கேதான் சாதிகள் இல்லையடி பாப்பா என்றும் கற்றுத் தரப்படுகிறது.

சமூகமோ ஆயிரம் உண்டிங்கு சாதி என அசுரத்தனமாக கிளைபரப்பிக் கிடக்கிறது.

அதில்தான் ஆரம்பிக்கிறது ஆபத்தான அரசியல்.

இந்தச் சாதி மதங்களைக் கொண்டே அரசியல் என்பது ஏற்றத்தாழ்வுகளை இறக்குமதி செய்கிறது.

பிரிவினைகளை பேதங்களை சண்டை சச்சரவுகளை வன்மங்களை உயிர்க் கொலைகளை ஊக்குவிக்கிறது.

இதைச் சலவை செய்ய கவிதை என்ற சவர்க்காரம் அவசியம்.

கவிதை இந்த நூற்றாண்டு கால இருட்டை நொடிப்பொழுதில் துடைக்கும் வல்லமையுடையதுதான்.

ஆனால் அது மட்டும் போதா.

இனியேனும் நாம் கடைக்கோடி மனிதருக்கும் கல்வியைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

அதன்மூலம் ஒவ்வொருவரும் தங்கள் அறிவு விரிவு செய்ய வேண்டும்.

இந்தக் கல்வியறிவின் மூலம் பொருளாதாரத்தின் முதல்வரிசை நாற்காலிக்கு அவரவர்களே தங்களை நகர்த்த வேண்டும்.

பணியாளர் என்பதைத் தகர்த்து தொழில்முனைவோர் என்ற நிலைக்கு இந்தச் சமூகம் உயர வேண்டும்.

அவ்வாறாயின் சாதி மத அரசியல் சல்லடையாகும்.

பிரச்சினை எதுவெனில் இங்கே கவிஞர்களே சாதி மதக் கிடங்குகளில் சட்டை தயாரிப்பவர்களாக இருக்கிறார்கள்.

சாதி மதத்தின் கொடூரங்களை ஒவ்வொரு மனிதருக்கும் உணரவைக்க கவிதை கண்ணாடியாக நிற்பது நன்று.

அதன் வல்லாதிக்கம் வீழ்த்த கவிதைக்கு வாளாய் நிற்கும் வலிமை உண்டு.

சாதி மதம் கழற்றி வீச ஒவ்வொரு கவிஞர்களின் விரலும் ஒவ்வொரு கொடிக் கம்பமாக உயர வேண்டும்.

ஒவ்வொரு கவிதையும் சாதி மதத்திற்கு எதிராக அறிவுப்பூர்வமாக விஞ்ஞானப்பூர்வமாக பகுத்தறிவு மிளிர

இனியாவது வேள்வி நடத்த வேண்டும்.

சாதி மதமற்றச் சமூகம் ஒவ்வொரு கவிஞனின் மனிதனின் இலக்காக மாற வேண்டும்.

இவை சரியானால் போதும். அரசியல் தானாக மாறும்.

7) ஒடுக்கப்பட்ட ,ஆதரவற்ற, பாதிக்கப் பட்ட மக்களின் ஏகோபித்த குரலாக கவிஞனின் குரல் ஓங்கி ஒலித்தால், அதன் மூலம் சமூக மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா? அது எந்தவகையில் சாத்தியமாகும்?

விழப் போகும் கொடிக்கு ஒரு கொம்பு நம்பிக்கை தரும் போது ஒரு கவிஞனால் முடியாதா என்ன.

முடியும் நிச்சயம் முடியும்.

பகல் வந்த ஒரு சூரியனின் பாதிப்பு இரவு நிலாவுக்கு எரிபொருள் தர இயலும் போது, ஒரு கவிஞனால் ஏலாதா என்ன. இயலும் நிச்சயம் இயலும்.

தொடர் முயற்சிகள் கண்டிப்பாக பலன் தரும்.

ஆனால், அதை மக்கள் இயக்கமாக மக்கள் குரலாக வெகு ஜன ஊடகங்கள் பேசும் இடத்திற்கு எடுத்தேக வேண்டும்.

ஒவ்வொருவர் கையிலும் ஓர் ஆண்ட்ராய்டு உலகம் இருக்கிறது. இதைக் கொண்டே ஒரு கவிஞன் மட்டுமல்ல. ஒவ்வொருவரும் ஒடுக்கப்பட்ட மக்களுக் காக ஓங்கிக் குரல் கொடுக்கலாம்.

இதற்கு ஜல்லிக்கட்டு போராட்டம் ஒரு சரியான உதாரணம்.

மட்டுமல்ல
டெல்டா பிரச்சினை
கதிராமங்கலம்
நெடுவாசல்
ஒக்கிப்புயல்
கூடங்குளம் அணு உலை
நியூட்ரினோ மீத்தேன்
தூத்துக்குடி ஸ்டெர்லைட்

பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்பு இப்படிப்பட்ட மக்கள் போராட் டங்களில் என் போன்ற கவிஞர்களின் பங்கும் கணிசமான ஒன்றென்பதை அறிந்தவர் அறிவர்.

இப்போதெல்லாம் விவசாயிகள் வாழ்வு அந்தரத்தில்தான் தொங்கிக் கொண்டு இருக்கிறது.

வேளாண் சட்டங்களை விரட்டி யடிக்க விழிப்புணர்வு கொடுக்க ஒவ்வொரு பேனாவும் பேராயுதமாக நிமிர வேண்டும்.

தில்லி விவசாயிகளுக்கு அனை வருமே ஆதரவு தர வேண்டும்.

மாநிலத்தில் இப்போது ஓரளவு நம்பிக்கை வெளிச்சம் தெரிகிறது.

இதைக் கொண்டே இருட்டுள்ள இடங்களை துரத்தியடிக்க கவிதை கடைத்தெரு வந்தாக வேண்டும். கவிஞன் பாரதியின் கனலோடு களமாட வேண்டும்.

8) இந்த விஞ்ஞான யுகத்தில் நம் மொழி, ஒழுக்கம், கலாச்சாரம்,பண்பாட்டு விழுமியங்களைப் பழுதின்றி காப்பது அனை வரது கடமை. இதில் கவிதையின் மற்றும் கவிஞனின் தேவையும் அத்தியா வசியமாகிறது. இவற்றைக் காக்க, கவிஞனானவன் கவிதை யின் மூலம் எப்படிப்பட்ட முன்னெடுப்புகளை செய்யலாம்?

உலகின் சக்கரம் வேக வேகமாக உருண்டோடிக் கொண்டிருக்கிறது.

இங்கே யாருக்கும் நிற்க பேச சிந்திக்க நேரமில்லை.

கலாச்சாரம் பண்பாடு பற்றி யெல்லாம் கவலையுமில்லை.

இங்கே மொழி என்பது தொடர்பு கொள்ள என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இதில் கவிதை கவனிக்கப்படுமா என்பது கவலையான கேள்விதான்.

ஆனால், இணையத்தில் கவிதைக் கான ஆதரவு கனமாகவே இருக்கிற தென்பது சற்றே ஆறுதலான ஒன்று.

ஒவ்வொரு கவிஞனும் சமூக அக்கறை யோடு, நீதி வழுவாத நிலை யோடு, இயற்கை மீது பரிவோடு, பெண்கள் மீது மதிப்போடு, பழைய பண்பாட்டின் தொடர்ச்சியோடு, கவிதை களாக... இசைப் பாடல்களாக... கதை



2019 இல் வலங்கைமானில் காவியக் களஞ்சியம் சார்பாக ஐயா.பொன்மணிதாசனுக்கு விருது வழங்கிய போது எடுத்த படம். உடன் இருப்பவர் அமரர் ராஜகுரு.

சொல்லிகளாக... ஓரங்க நாடகங்களாக... நகைச்சுவைத் தொடர்களாக... யூ டியூபில், இன்ஸ்டாகிராமில், ட்வீட்டரில்; க்ளப் ஹவுசில், ஃபேஸ் புக்கில், வாட்ஸ் அப்பில், இன்னும் உள்ள பிற நவீனச் சாதனங்களில், இளைய பிள்ளைகளின் பார்வைக்குக் கடத்த வேண்டும்.

விவாத அரங்குகளில் தர்க்க ரீதியாக, தத்துவ ரீதியாக, தமிழை கொண்டு போக வேண்டும்.

பள்ளிகளில், கல்லூரிகளில், பொது வெளி அரங்குகளில், கோவில் கூடங்களில், சமகாலத் தமிழால் சங்க காலத் தமிழை ருசியோடு பரிமாற வேண்டும்.

கிடைக்கும் இடங்களில் எல்லாம் தமிழின் தொன்மையை, தமிழின் அழகியலை பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்தாலே நம் ஒழுக்கம், விருந்தோம்பல், பண்பாடு, பாசம், பிறரன்பு, கலாச்சாரம் இன்னபிற தானாகவே தழைத்தோங்கும்

இப்படிப்பட்ட தொடர்ந்த முன்னெடுப்புகள் ஒருநாள் நிச்சயம் பலன் கொடுக்கும்.

அப்போது தமிழ் வாழும். தமிழே ஆளும்.

9) முற்காலத்தில் புலவர்கள் அரச சபைக்கு ஆலோசனை சொல்பவர்களாகவும், மக்களுக்கு நன்னெறியைப் போதிப்பவர்களாகவும் இருந்துள்ளனர். இன்றைய காலக்கட்டத்திலும் இவர்கள் தம் புலமையால் பாரிய தாக்கத்தை செலுத்த முடியும் என நினைக்கிறீர்களா?

பாரிக்கொரு கபிலர். அதியமானுக்கோர் அவ்வை. பேகனுக்கொரு பரணர். தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கொருநக்கீரர். சேரமான் இரும்பொறைக்கொரு மோசுகீரனார். ஆய் அண்டிரனுக்கொரு முடமோசியார். கரிகாலனுக்கொரு உருத்திரங் கண்ணனார் இப்படி ஒரு நீண்ட பட்டியல் உண்டு.

இந்தப் புலவர்கள் அரசனுக்கு ஆலோசனை சொல்பவர்களாகவும் வழிகாட்டி களாகவும் இருந்திருக்கிறார்கள்.

இந்த அரசர்கள் ஆண்ட நிலப்பரப்பு இன்றைய தமிழ்நாட்டோடு ஒப்பிடும் போது மிக மிகச் சிறியதென்பதை நாம் நம் கவனங் கொள்வது நன்று.

இப்போது உள்ள சூழலே வேறு.

நீங்கள் எந்தக் கட்சி, எந்தச் சாதி, என்ன செல்வாக்கு, யாருடைய பின்புலம் என்றெல்லாம் பல ஆய்வுக்குப் பின்

கூட அதிகார வர்க்கத்தின் வாசல் கதவு திறக்குமா என்பதே வினா தான்.

இன்று அறிவு, அனுபவம் இருப்பதை விட «லைம்லைட்»டில் இருப்பதே தகுதி எனக் கருதப்படுகிறது.

மட்டுமல்ல, பொருள் உடையாருக்கே இவ்வுலகம் என்றாகி பலகாலம் ஆகிவிட்டது.

நிஜம் சொல்வதென்றால் மொழி தன் மகுடம் இழந்து வருகிறது

தொழில்நுட்பம் அறிவியல் விஞ்ஞானம் இணையத்தளம் இவை தமிழை பின் வரிசைக்கு நகர்த்தியிருக்கிறது என்பதை ஒப்ப நாம் தயாராக வேண்டும்.

காரணம்... அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக புதிய கண்டுபிடிப்புகளுக்கு புதிய கலைச்சொல்களை தமிழில் கண்டுபிடிக்க நாம் தவறி இருக்கிறோம் என்பதே உண்மை.

அதனால்தான் அரசின் ஆலோசனைக் குழுவில் ஒரு தமிழ்க் கவிஞன் கூட இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உலகமயமாதல் வந்த பிறகு தொழில்நுட்பம் ஒன்றே வணிகத்தின் எல்லா வாசல்களிலும் வாய்திறந்து நிற்கிறது.

கடன்சுமை ஒருபக்கம் அரசுகளின் கழுத்தைத் திருகிக் கொண்டிருக்கிறது.

ஆக, இப்போது பொருளாதார வல்லுனர்கள்தான் தேவையே தவிர புலவர்கள் அல்ல.

ஒருவேளை நம் தமிழக முதல்வர் கண்ணில் விக்டர்தாஸின் இந்த நேர் காணல் பட்டால் அரசவைக் கவிஞர் ஆக அவன் ஆகலாம் எனச் சொல்லலாமே தவிர, அதற்குமேல் சொல்ல வேறொன்றுமல்ல.

**10) அகப்பாடல்கள் தேவைதான். ஆயினும் அவற்றைக் கொண்டே கவிஞனின் தகுதியும் நிர்ணயிக்கப்படும் நிலை தற்போது உள்ளதே! இது சரிதானா?**

அப்படியா... எனக்குத் தெரியவில்லை. அப்படி இருந்தால் அது சரியில்லை.

ஒரு கவிஞன், வெறும் பழைய இலக்கியம் மட்டும் படித்தால் போதாது.

உலக இலக்கிய அறிவு, உலக நூலறிவு, உலகப் பொது அறிவு வேண்டும்.

மருத்துவம், விஞ்ஞானம், விண்ணியல், பொறியியல், எந்திரவியல், கட்டட வியல், தொழில்நுட்பம், கலைப் பாடங்கள், இயற்கை நுட்பம், புவியியல், வரலாறு என பலவும் தெரிந்திருக்க வேண்டும்.

தன்னைச் சுற்றி நடப்பதையும், தன்னைத் தாண்டி இருப்பதையும், தன்னுள் என்ன என்பதையும், ஒரு ஞானியைப்போல் அறியும் நுண்ணறிவு வேண்டும்.

அப்படிப் பார்த்தால் அகத்திணை என்பது கடுகினும் சிறிதளவே ஆகும்.

அதை விடுத்து இந்த பூமி மேம்பட, இந்த மக்கள் உயர்வுற, இந்த இயற்கை வளம்பெற, ஒரு கவிஞன் வள்ளுவரைப் போல, வள்ளலாரைப் போல, பாரதியைப் போல சிந்திக்க வேண்டும்.

காலம் வெல்லும் படைப்புகளை கல்கியைப் போல, கண்ணதாசனைப் போல தர வேண்டும்.

**11) முன்னைய காலங்களில் எழுதப்பட்ட அழகிய காவியங்கள் தமிழிலக்கியத்தை அலங்கரித்து, தமிழுக்குப் பெருமை சேர்த்தன. ஆனால், தற்காலத்தில் துணுக்குகளோடும், பலதரப்பட்ட கடைநிலைக் கவிதைகளோடும் தமிழ் ஊசலாடிக் கொண்டிருக்கிறதே! மொழிவளத்தைக் கையாளும் திறமை குன்றி வருகிறதா?**

இல்லை. அப்படி நான் கருதவில்லை. நம்மிடையே கனத்தப் படைப்பாளிகள் கடலளவு இருக்கிறார்கள்.

அதனால்தான் இந்தளவாவது தமிழ் தங்கத் தலைப்பாகை கட்டி நிற்கிறது.

பசி பொறுத்தே பானைகளின் அளவு என்பர் கிராமத்தில்.

இப்போது மொழியின் தேவை முடங்கியிருக்கிறது.

பத்து வருடம் பாடையில் இருந்தது தமிழ்நாடு.

இப்போதுதான் புதிய நீர் பழைய வாய்க்காலில் ஓட ஆரம்பித்திருக்கிறது.

அரசு தமிழை உயர்த்த நினைத்தால் ஒரே நாளில் மொழி அதன் உச்சாணிக் கொம்பேறும்.

தமிழுக்கு முன்னுரிமை. தமிழ் படித்தால் அரசு வேலை. தமிழ்நூலுக்குப் பொற்கிழி. தமிழ்ப்புலவனுக்குச் சலுகை என ஒரே ஓர் அரசாணை போதும்.

அடுத்த நொடியே
ஆயிரம் கணியன் பூங்குன்றன்
ஆயிரம் கம்பன்
ஆயிரம் கபிலன்
ஆயிரம் அவ்வை
ஆயிரம் நப்பசலை
ஆயிரம் காக்கைப்பாடினி
ஆயிரம் ஓதலாந்தை
ஆயிரம் அம்மூவன்
ஆயிரம் காளமேகம்
ஆயிரம் புகழேந்தி
ஆயிரம் ஒட்டக்கூத்தன்
ஆயிரம் இளங்கோ
ஆயிரம் பாரதி
ஆயிரம் பாரதிதாசன்
ஆயிரம் வாணிதாசன்
ஆயிரம் சுரதா
ஒரே நாளில் உங்கள் கண்முன் வருவர்.

ஆயிரம் குழுக்கள் ஆயிரம் தனி மனிதர்கள் செய்ய முடியாததை அரசு எந்திரத்தால் ஒரே ஒரு கையெழுத்தில் ஓர் ஒளிவானத்தையே உற்பத்தி செய்ய முடியும்.

செய்யுமா என்பது கேள்வி. செய்ய வேண்டும் என்பது என் போன்றோரின் வேள்வி.

மற்றபடி கவிஞர்களில் திறமைக்குப் பஞ்சமில்லை என திடமாகவே நான் நம்புகிறேன்.

**12) தமிழைக் காப்பதில் இலக்கிய ஆளுமைகள் முன்னோக்கியுள்ள சவால்கள் எவையென கருதுகிறீர்கள்?**

என் முந்தையப் பதில்களில் இந்த வினாவுக்கான விடையை சந்தைப் படுத்தியதாக நம்புகிறேன்.

கொண்டு பொருள் கூட்டும் அணிபோல் கண்டறிவீர்கள் எனக் கருதுகிறேன்.

**13) நவீன தொழில்நுட்ப யுகத்தில் கவிதையின் இருப்பு என்ன? இந்த எந்திர யுகத்தில் நம் மொழியைக் காக்கவும், எதிர்கால சந்ததியிடம் அதைப் பழுதுபடாமல் கொண்டு சேர்க்கவும் கவிதைக்கும் கவிஞனுக்கும் உரித்தான பணிகள் எவை?**

எமக்குத் தொழில் கவிதை எனும் சூழல் இப்போது இல்லை என்பதில் இருந்தே கவிதைக்கான இடத்தைக் கண்டு கொள்ளலாம்.

கவிதை பொதுவெளியின் பயன் பாட்டுக்கு என்ற நிலையில் இருந்து சுய மகிழ்ச்சிக்காகவும், சுய தகுதியின் அளவீட்டுக்காகவும், பொழுது போக்கிற் காகவும், விரும்பியவரோடு வாயாடு வதற்காகவும் சமீப காலங்களில் திரிந்து போய் கிடக்கிறது என்பதை ஒப்பனை யில்லாமல் நாம் உள்வாங்க வேண்டும்.

கவிஞரின் நூலகம்



தொழிலாக யாவருக்கும் வேறொன்றிருக்க நம்மை ஆசுவாசப்படுத்த தலையில் சூடும் ஒன்றாகவே தமிழுக்கு கவிதை கட்டுரை என்ற பூக்கள் இருக்கிறதோ என ஐயமுறுபவர்களில் நானும் ஒருவன்.

ஒரு ஜென் தத்துவம் சொல்கிறேன்

"ஒன்றை அசுத்தப்படுத்த நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம் சும்மா இருந்தாலே போதும்தானாகவே அது அழுக்காகி விடும்"

அதையே மாற்றிச் சொல்கிறேன்

தமிழைக் காப்பாற்ற நீங்களோ நானோ ஒன்றும் செய்ய வேண்டாம். சும்மா இருந்தாலே போதும்.

தமிழ் தன்னை வளர்த்துக் கொள்ளும். தன்னை உயர்த்திக் கொள்ளும்

காரணம் தமிழ் ஒரு சுயம்பு.

அது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த ஒன்று.

தமிழுக்குச்சோறு போடுகிறேன்என வந்தவனெல்லாம் தன் சந்ததிக்குச் சோறு போட மண்டபம் கட்டினானே அன்றி தமிழ் வாழ நூல் கூட கிழித்தானில்லை.

தமிழைக் காப்பாற்றப் போகிறேன் என தலை தூக்கிய ஒவ்வொருவனும் தலைமுறைக்குச் சொத்து சேர்த்தானே யன்றி தமிழுக்கு ஒரு வித்து கூட தரவில்லை.

ஆழியிலும் ஊழியிலும் அனலிலும் புனலிலும் காற்றிலும் காலத்திலும் காயப்படாமல் கடந்துவந்த பெருமைக் குரியது நம் கன்னித்தமிழ்.

அது எந்த எந்திரப் புயலையும் கடக்கும். எந்தத் தொழில்நுட்ப யுகத்தையும் துரத்தும். எந்தப் பொருளாதார மாற்றத்திலும் புதுக்கும்.

ஊரில் சொல்வார்களே...

"உதவி செய்யலனாலும் பரவாயில்ல. உபத்திரவம் பண்ணாத"

தமிழை வாழ வைக்காமல் போனால் கூட தவறில்லை.

தப்பும் தவறுமாக பேசாதிருங்கள். ஒற்றுப் பிழையோடு எழுதாதிருங்கள். பிறமொழிக் கலப்பை முடிந்தவரை தவிருங்கள். தொலைக்காட்சித் தமிழைத் தொடராதிருங்கள்.

தமிழ் இலக்கணம் வழுவறப் பயிலுங்கள். பழந்தமிழ் இலக்கியம் வாசியுங்கள். நிறைய படியுங்கள். நிறைவாக எழுதுங்கள்.

அத்தனை எழுத்தையும் ஆவணமாக் குங்கள். புதிதாக எழுத வருபவர்களை ஊக்குவியுங்கள் விமர்சிக்காதிருங்கள். இது போதும் இன்தமிழ் ஆயுள் நீளும்.

**14) தாங்கள் இலக்கியத்துறையிலும் திரைத்துறையிலும் பயணித்ததை நன்கறிவோம். எப்போதாவது திரைத்துறை இது நமக்கு ஆகாது என நினைத்ததுண்டா?**

இல்லை. இல்லவே இல்லை.

திரைப்படங்களுக்குப் பாடல் எழுதுவது என்பது சாரலில் நனைந்து கொண்டே பூக்களின் பள்ளத்தாக்கில் நடந்து போகும் பட்டாம்பூச்சி மாதிரி ரம்மியமானது. ரசனையானது. ராத்திரிச் சந்தோஷம் போன்ற ரகளையானது.

மழைவிழும் ஒரு பின்சாம இரவில் ஒரு மலைக்கிராமத்தில் ஒழுகும் குடிசையின் திண்ணையமர்ந்து குறிஞ்சி நிலக்காடுகளை ஒரு தேநீர்க் கோப்பையோடு ரசிப்பது எத்தனை ரசமான சுகமோ அதனினும் சுகம் சினிமாச் சூழலுக்குப் பாட்டெழுதுவது.

காரணம் சினிமா என்பது புலன் கெடுக்காத ஒருவித போதை. அதை தொட்டால் விடாது விட்டாலும் விலகாது.

கடற்கரை வந்த காதலியின் கால்கொலுசுகளைக் கட்டிக் கொண்டு நகர மறுக்கும் அலைகள் மாதிரியானது சினிமாப் பாடல் மீதான என் காதல்.

அது தொடரும். அது தொடரும் வரை என் உயிர் வண்டி உருளும்.

**15) ஐயா எம் எஸ் வி இசையிலும் இளையராஜாவின் இசையிலும் பாடல்கள் எழுதியிருப்பீர்கள். இதில் யாருடன் எழுதும் போது உங்களுக்கான சுதந்திரம் அதிகம் கிடைக்கும்?**

மெல்லிசை மன்னர் ஐயா. எம் எஸ் வி அவர்களால் இசைஞானியிடம் பிரசாத் ஸ்டூடியோவில் நான் அறிமுகப்

படுத்தப்பட்டேன்.

அப்போது அவர் ஒரு மெட்டு வாசித்தார். சட்டென்று அதற்குத் தமிழ் செய்தேன்.

மற்றபடி ராகதேவனோடு நான் பணியாற்றவில்லை.

மெல்லிசை மன்னர் ஐயா.எம் எஸ் வி, தேவா, சபேஷ் முரளி, யுவன் சங்கர் ராஜா, இமான் இப்படி நிறைய இசையமைப்பாளர்களோடு பணியாற்றி இருக்கிறேன்.

ஐயா இசைக்கு எழுதுவது அடக்க முடியாத பாக்கியம்.சாகாவரம் பெற்ற சஞ்சீவி மூலிகை அவர் விரல்கள். ஆர்மோனியத்தில் அவர் விரல் வரையும் ஓவியம்.

அடேயப்பா

பச்சைக் குழந்தை பவளமல்லி மீது நடப்பது மாதிரி அத்தனை தெய்வீகமானது.

என்ன எழுதிக் கொடுத்தாலும் அசரவே மாட்டார். ஏராளமான மெட்டுகள் அமைப்பார்.

அதே போல மெட்டு தந்தால் சந்தம் மாறாமல், அநேக தாள ராக பாவங்களில் ஒரு ராகமாலிகாவே நிகழ்த்துவார்.

அவர் ஓர் அதிசயம். அள்ள இயலாத அபூர்வம்.

அவரோடு தங்கி, அவ.ரோடு பய ணித்து, அவரோடு அளவளாவி அவருக்குப் பாடல்கள் எழுதி, அவரென்னைச் சினிமா வில் அறிமுகப் படுத்தி நினைத்தாலே புல்லரிக்கிறது.

எந்த முன்ஜென்மப் பலனோ யார் செய்த புண்ணியமோ இது தெரியவில்லை.

அதன்பிறகு, ஓரளவு அந்த வேகம், ஓரளவு அந்த லாவகம் இசையமைப்பாளர் இமானிடம் பார்த்திருக்கிறேன்.

எதை எழுதிக் கொடுத்தாலும் பட்டென்று மெட்டமைத்துப் பரவசம் செய்வார்.

யுவன் இசை கேட்கவே வேண்டாம்.

அது ஷாம்பெய்னில் நனைந்து போகும் சாக்லெட் ரிவர்.

அண்ணன் சபேஷ்-முரளி இருவரும் இசையிலும், இலையிலும் எனக்கு அன்னமிட்ட அன்னையர்.

தேனிசைத் தென்றல் தேவா ஒரு நீண்ட பயணத்தில் என் விரல்பிடித்து அழைத்து வந்த மெட்டுக்குச் சொந்தக்காரர்.



வள்ளியூரில் 2020 டிசம்பர் 24 மாலை நேரத்தில் கவிஞர்.

இப்படி அனைத்து இசையமைப் பாளர்களிடமும் ஆனந்தமாக சுதந்திரமாக எழுதியதாகவே உணர்கிறேன்.

இப்போதும்... அதே சுதந்திரத் தோடு எழுத ஆரம்பித்திருக்கிறேன் என்பதே என் ஆயுள் ரேகையை நீட்டியதாக உணர்கிறேன்.

**16) தற்காலம் சினிமாவில் இசைத்துறை மிகவும் சீர்கெட்டுப் போய்விட்டதாக சொல்கிறார்கள் அது ஏன்? வருங்காலத்தில் அது சீராக வழியுண்டா?**

நான் அப்படிக் கருதவில்லை. ஏனெனில் உலகம் இசையின் ஓடுதளம் மாற்றியிருக்கிறது.

அதனால், வாத்தியங்களின் ஆடு களம் வாலிபமாகி இருக்கிறது.

யூ டியூப் இன்ஸ்டாகிராம் வந்த

பிறகு களம் கனமாகி இருக்கிறது.

இசையில் நிறைய பரிசோதனை முயற்சிகள் நடக்கிறது.

புதிய புதிய ஒலிகள் பூப்பூக்கின்றன. இசை தனக்கான ஆடையை தானே தயாரித்துக் கொண்டிருக்கிறது. அதன் மேசையில் பழமையின் பரிமாறல் இல்லை.

பல மென்பாடல்கள் பவனி வரத் தான் செய்கின்றன.

ஒவ்வொரு மெட்டுக்குள்ளும் ஒரு கோடி கவிதை நிலாக்கள் ஒளியரும்பு அவிழ்க்கத்தான் செய்கின்றன.

குழந்தையின் மழலையை தாய் புரிந்து கொள்வது மாதிரி இசைக்கருவிகளின் பாஷையை நாம் புரிய முயன்றாலே போதும்.

உங்கள் வனம் வானமாகும் வாழ்க்கை கானமாகும்.

17) உங்கள் தந்தையார் உங்களிடம் எழுத்துத் துறையைப் பற்றி விவாதித்த துண்டா? அதுபற்றிய சுவாரஸ்யமிருந்தால் பகிருங்களேன்?

என் தந்தையார் அவர்கள், கவியரசர் கண்ணதாசன், ஐயா. எம் எஸ் வி, டி.எம். எஸ், சிவாஜி இவர்களின் கனத்த ரசிகர்.

கவிஞர் பாடலென்றால் உயிர்.

என் தகப்பனார் அவர்கள் தென்னக இரயில்வேயில் பொறியியல் துறையில் ஓர் உயரமான இடத்தில் பணி புரிந்தார்கள்.

அவர்களுக்கு கவிதை மீது அப்படி யொன்றும் கனத்தக் காதலில்லை.

கவிதை என் வாழ்க்கை மீது கல்லெறிந்து காயம் செய்து கலவரம் செய்து விடுமோ என ஒரு தகப்பனாக பயப்பட்டார்கள்.

ஆனால், என் மேடைப் பேச்சுகளை, என் கவியரங்குகளை, தூரமிருந்து துப்பறிந்து மகிழ்ந்தார்கள் என்பது பின்னாளில் நானறிந்த பெருஞ்சந்தோஷத் செய்தி.

சன் தொலைக்காட்சியில் என் நேரலை நேர்காணல் வந்த போது ஊரெல்லாம் தொலைபேசி செய்து உயிர் நனைந்தார்கள் என்பது என் தாய்சொல்லி நான் தெரிந்த தகவல்.

"உங்க அப்பா நல்லா எழுதுவான். மேடையில அப்டி பேசுவான்'' என என் பிள்ளைகளிடம் அடிக்கடி சிலாகிப் பார்களென குழந்தைகள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

மற்றபடி அப்பா அவர்கள் என் எழுத்து குறித்து என்னிடம் எதுவும் சொன்னதில்லை.

அளவிட முடியாத மரியாதை அன்பு கலந்த பயம். எதிரே அமரக் கூட தைரியமின்மை. தேவைகளை அம்மாவிடம் மட்டுமே கேட்டுப் பழகியது. இப்படி அந்தத் தங்க வானத்தை தள்ளி நின்றே நான் தரிசித்திருக்கிறேன்.

அப்பா அவர்கள் என் சின்ன மகனிடம் சிரித்து விளையாடியதைப் பார்த்த பிறகுதான் அப்பாவுக்குச் சிரிக்கத் தெரியும் என்பதும் அவர்கள் இத்தனை எளிமையானவர்கள் என்பதும் நானே அறிந்து வியந்து போன ஒன்று.

வெளியே முள் உள்ளே பழம் விளங்க முடியாத கவிதை அவர்கள்.

வெளியே பாறை உள்ளே மெழுகு விளக்கத் தெரியாத குழந்தை அவர்கள்.

மருத்துவமனையில் கடைசி பன்னிரண்டு நாள் என் கைப்பிடித்து அவர்கள் கொட்டிய பாசப் பரல்களை கடல்கொண்டு கூட மொண்டுவிட முடியாது.

அந்த அதிர்வலைகளில் இந்தத் துடுப்பு இன்னும் துடித்தபடி கிடக்கிறது.

ஆனால், அந்தப் படகோ படியேறிப் போய்விட்டது.

உயிரறுந்த உச்ச வலியில் நான்.

வேறென்ன சொல்ல.

18) இறுதியாக ஒரு கேள்வி. அண்மை யில் தங்கள் அப்பாவின் மறைவு (தனது ஆழ்ந்த இரங்கலை தமிழ்நெஞ்சம் தெரிவித்துக் கொள்கிறது) தங்களது மனதை மிகவும் பாதித்திருக்கும். எழுபத்தாறு வயதில் இறைவனடி சேர்ந்த தந்தைக்காக அழுதபோது அவரது விருப்பம் இதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டோமே என்று நினைத்து வருந்தியதுண்டா?

தவற விட்டு விட்டோமே அந்தத் தங்கத்தை

களவு தந்து விட்டோமே அந்தக் கற்பூரத்தை

இழந்து விட்டோமே அந்த இமயத்தை என்றுதான் இப்போதுவரை அழுது கொண்டிருக்கிறேன்.

பொருளாதார ரீதியாக அப்பாவையும் அம்மாவையும் நான் பூர்ஷ்வாக்களாகவே வைத்திருந்தேன்.

புறத்தேவைகளைப் பொறுத்தவரை போதும் போதும் எனும் அளவுக்குப் பொன்னாடைகளால் நான் போர்த்தியிருந்தேன்.

ஆனால், அவர்கள் அகத்தேவையான அருகிருத்தலை என் அருகாமையை அத்தனை நெருக்கமாக நெய்துதர இயலவில்லை என்பது என் நெஞ்செரிக்கும் உண்மை.

கொரோனா எங்கள் சந்திப்பின் சந்தோஷத்தில் பாறாங்கல் உருட்டி வைத்திருந்தது.

"இது என் மகன் வாங்கிக் குடுத்த காஸ்ட்லியான ஃபோன் என தூங்கும் போதும் தலைமாட்டிலேயே வச்சிருப்பாங்க அப்பா" என அம்மா சொன்ன போது இன்னும் பலதரம் அழைத்திருக்கலாமோ என ஏங்கி நிற்கிறேன்.

ஒரு தேசிய விருதாவது வாங்கி அவர்கள் கையில் தந்திருந்தால் இவனை பொறியியலுக்கு அனுப்பாமல் தமிழ் படிக்க அனுப்பியிருக்கலாமோ என மகிழ்ந்திருப்பார்கள். அதைத் தவற விட்டு விட்டேனே என்றுதான் தாங்கவொணாத் தவிதவிப்பில் தலைவெடித்து உயிர் துடிக்கிறேன்.

19) தமிழ்நெஞ்சம் இதழைப் பற்றிய உங்கள் கருத்தை எம் வாசகர்களுடன் பகிரலாமே!

தமிழ்நெஞ்சம் வாசகன் என்ற முறையில் என் சக வாசகர்களுக்கு என் வணக்கம் வாழ்த்து நன்றி.

அரை நூற்றாண்டுக் காலம் கடந்தும் ஆகாயச் சௌந்தர்யத்தோடு இதழ் நடத்துவதென்பது எளிதான பணியன்று.

வள்ளியூர் வீட்டில் அப்பா, அம்மாவுடன் கவிஞர் விக்டர்தாஸ். 2020



அதுவும்,தமிழிற்காக இலக்கியத்திற் காக, கவிதைக்காக, கடல்கடந்த தாகத்தோடு எப்படி ஓடி வருகிறீர்கள் திரு. அமின் என்ற மாபெரும் ஆச்சரியம் என் மண்டைக்குள் உண்டு.

வெகுஜன ஊடகமே பொருளாதாரச் சுனாமியில் புதைகிற போது நீங்கள் எப்படி தாங்குகிறீர்கள் என நினைக்காத நாளில்லை திரு.அமின்.

எந்த இதழுக்கும் போகிற போக்கில் பேசிவிட்டுப் போகிற நான் தமிழ்நெஞ்சம் என்றதும் சற்றே தடுமாறினேன் என்பதே தடுமாறாத உண்மை.

காரணம்... வாசகர்கள் ஒவ்வொரு வரும் கவிஞர்கள் ஒவ்வொருவரும் ஆய்வா ளர்கள் ஒவ்வொருவரும் வல்லுனர்கள் ஒவ்வொருவரும் படிப்பாளர்கள்.

கடுகு நான்

கடல்முன் சொற்பொழிவா என கால் நடுங்கினேன். ஆயினும் நம் வாசகர்கள் பிழை பொறுப்பார்கள் என்ற பெருந் தைரியத்தில் பேசியிருக்கிறேன்.

உங்கள் கேள்வியின் கனத்தில் என் விரல்கள் பல இடங்களில் வியர்த்ததை யாரிடம் சொல்வது நான்.

வாசகர்கள் ஒப்புவார்கள் என்ற நம்பிக்கையில் பல இடங்களில் நிஜத்தின் தோளேறித் தொங்கியிருக்கிறேன்.

எந்த பிம்பங்களுக்கும் (Image) ஆட்படாமல் நான் உற்றதை உணர்ந்ததை கற்றதை கடைந்ததை பெற்றதை பிறழ்ந்ததை பொய் கலவாமல் பொங்கி வைத்திருக்கிறேன்.

பழைய இலக்கியத்தின் மீது அதிகமாகவே காதலெனக்குண்டு. அதனால் தான் அப்படி விமர்சித் திருக்கிறேன். என் தந்தையை நான் சொல்லாமல் யார் சொல்வது.

இப்படி ஒரு வாய்ப்பு தந்த திரு. அமினுக்கும் வாசகப் பிதாக்களுக்கும் எந்த லிபியில் நன்றி பிலிற்றுவதெனத் தெரியவில்லை.

என்றாலும் கனத்த நன்றி மனம் நெகிழ்ந்த வாழ்த்துகள்.

தமிழ் வாழ்கதமிழே ஆள்க.

■

# கண்களுக்குள் ஓர் பயணம்

கண்களை இறுக மூடிக் கொண்டு
கடந்த நினைவுகளின் காட்சிகளில்
சிறு பயணம் மேற்கொள்ள வேண்டும்

அதில் விருப்பற்ற வீதியில்
பயணித்த பாதைகளை
அழித்திட வேண்டும்

எனக்கான புதிய பாதைகளை
என் கண் மை கொண்டு
நானே கிறுக்கிட வேண்டும்

பழைய பாதைகளை
என் கண்ணீரைக் கொண்டு
நானே கரைத்திட வேண்டும்

அழிக்க முடியா நினைவுகளை
பத்திரப்படுத்தும் விருதைப்போல்
உயிருள்ள வரை நினைவுகளால்
பாதுகாத்திட வேண்டும்

**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி.



# கண்ணே

உன்னுடன் நானி ருந்தால்
உணர்வுகள் வானம் ஏறும்
உன்னுடன் நானி ருந்தால்
உளமெலாம் தேனாய் ஊறும்
உன்னுடன் நானி ருந்தால்
உலகமே கடுகாய்ப் போகும்
உன்னுடன் இருக்க லாமா
உயிர்வரை இனிக்க லாமா

காற்றடி உந்தன் பார்வை
கதிரடி உந்தன் மோகம்
நாற்றடி உந்தன் மென்மை
நதியடி உந்தன் பேச்சு
சாற்றடி தன்னில் நீயென்
சதியடி என்றேன் அன்பே
ஈற்றடி இல்லா பாவாய்
என்னுடன் வாராய்

## ஏழ வரதராசன்

வழிவழி வந்து நம்மை
வளமாக்கும் கவிதை வாழ
விழிவிழி கவிதை என்னும்
விளக்கேற்று நெஞ்ச வீட்டில்

# சென்சிடிவ் உணர்திறன்

நீ ரொம்ப சென்ஸிடிவாயிற்றே... இப்படி சொல்லிக் கேட்பது அந்தப் பெண்ணிற்கு புதிதில்லை என்றாலும் ஒவ்வொரு முறை கேட்கும் போதும் மனம் அழுந்தி மூக்கு விடைத்து கண்களில் நீர் கோர்த்து தான் கொள்கிறது. அது சொல்பவர்களுக்கு இன்னும் பலம் சேர்ப்பதாக அமைய எல்லோருமே தன்னை சீண்டிப் பார்ப்பதாகவே அவளுக்குப் படுகிறது.

ஏன் நான் இப்படி இருக்கிறேன் எதற்கெடுத்தாலும் அழுத கண்ணும் அரற்றும் மனமுமாக என அவளுக்குள் கேள்வி எழாமல் இல்லை. ஆனால் பதில் தான் தெரியவில்லை.

மேற்கூறிய இவர் உங்களில் ஒருவராக இருக்கலாம் அல்லது உங்களை சுற்றி இருப்பவர்களில் ஒருவராக இருக் கலாம். உங்களிடம் ஒரு கேள்வி...

வாழ்க்கை இலகுவானதா அல்ல கடினமானதா..

உண்மையில் வாழ்க்கை இலகுவா னது இப்போது பள்ளியில் கஷ்டப் பட்டு படித்தால் போதும் பின் கல்லூரி காலத்தில் எஞ்சாய் பண்ணிக் கொள்ளலாம். கல்லூரியில் கஷ்டப் பட்டு படித்தால் நல்ல வேளை கிடைத்து மகிழ்ச்சியாக இருக்கலாம். கஷ்டப்பட்டு வேலை செய்தால் பின் வயதான காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கலாம் இப்படி life is easy அதற்கு நீங்கள் இப்போது கஷ்டப்பட வேண்டும் என்றே சொல்லப்படுகிறோம். அப்படி எல்லாம் கஷ்டப்பட்டாலும் மகிழ்ச்சி என்பது மின்னல் போல் வந்து விட்டு மறைகிறதே தவிர, வாழ்க்கை பெரும்பாலும் கடினமாக தானே இருக்கிறது என்றே மனம் வருந்தும். நாம் எங்கோ தவறு செய்கிறோமோ என மனம் குழம்பும்.

அதிலும் அவர் கொஞ்சம் சென்சிடி வானவராக இருந்து விட்டால் சின்ன சின்ன விஷயங்கள் கூட அதிகமான மன பாதிப்பை ஏற்படுத்தும்.

நான் ஏன் இப்படி செய்தேன்.. .ஏன் இதை செய்யாமல் விட்டேன்... ஏன் நான் என்ன சொன்னாலும் தவறாக போகிறது.. ஏன் இப்படி என்னிடம் எல்லோரும் கடினமாக நடந்து கொள்கிறார்கள்.. என்று பெரும்பாலும் ஏதாவது ஒன்றை பிடித்துக் கொண்டு அதை சுற்றி சுற்றி ஆயிரம் கேள்விகளை எழுப்பி பெரும் பாரத்துடன் மனம் தவிக்கும்.

ஒரு சிறு பிரச்னையென்றாலும் வருகிற வாய்ப்புகளில் எதை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் நமக்கு சந்தர்ப்பம் தரப்படவில்லை எனும் வருத்தம் ஒரு புறம் இருந்தால், சந்தர்ப்பம் தரப்பட்டும் சரியான ஒன்றை நான் தேர்ந்தெடுக்காமல் தவறான ஒன்றை தேர்ந்தெடுத்து விட்டேனே எனும் வருத்தம் பலமடங்கு ஆழமாக ஒருவர் மனதை பாதிக்கும்.

அதைவிட போகிற வருகிறவர்கள் எல்லோரும் நீ ரொம்ப சென்ஸிடிவ் ஆயிற்றே. அதிகமாக மனதில் எதையும் எடுத்து அலட்டிக் கொள்ளாதே, நீ உன்னை இன்னும் கொஞ்சம் கடினப்படுத்திக் கொள்ளதான் வேண்டும் என எதையாவது சொல்லி தன்னுடைய இயல்பே தவறோ

இந்த இயல்பு தான் எல்லா பிரச்னைக்கும் காரணமோ என புலம்ப வைத்து விடுவார்கள்.

தன்னை கடினப்படுத்திக் கொள்ளா மல், இயல்பாக மென்மையாக சென்சிடிவாக இருப்பது என்பது பெரும் குறையாக சித்தரிக்கப் படும். Sensitive people என்றவுடனே எல்லோருக்கும் கண்களைக் கசக்கிக் கொண்டு எதற்கெடுத்தாலும் அழுது அரற்றுவது அல்லது அழத் தயாராக நிற்கும் ஒருவரே நினைவிற்கு வருவார்.

உண்மையில் சென்சிடிவானவர் களுக்கு சிறு பிரச்னையும் பெரிதாக தான் தெரியும் என்றாலும் சிறு மகிழ்ச்சியிலும் குதூகலிப்பவர்கள் இவர்கள். யாருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்று இவர்கள் நினைப்பதால் மற்றவர்களுடைய ஒவ்வொரு அசைவிற்கும் அர்த்தம் தேடி அதை தங்களுடைய செய்கையுடன் தொடர்பு படுத்தி பார்ப்பார்கள். அதனால் மற்றவர்களுடைய ஒவ்வொரு அசைவும் இவர்களை பாதிக்கும். வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருப்பதாக தோன்றும். இவர்களுடைய எல்லா senses ம் high alert இல் இருக்கும். ஒவ்வொரு இரவு தூங்கப் போகுமுன் இவர்கள் தங்களை தாங்களே அலசி ஆராய்வார்கள் இப்படி 'தான்' செய்தது தவறோ அப்படி செய்திருக்க வேண்டுமோ, அவர்கள் ஏன் அப்படி நடந்து கொண்டார்கள் என குழம்பி மனதை குழப்பி தூக்கத்தை துரத்தி விடுவார்கள். மற்றவர்களுடைய criticism இவர்களை பெருமளவில் பாதிக்கும் என்பது ஒருபுறம் இருக்க தங்களை தாங்களே அதிகமாக criticism செய்து கொள்வார்கள்.

அதனால் எது ஒன்றையும் செய்வதற்கு ஒன்றுக்கு பத்து முறை யோசிப்பார்கள். அப்படியே செய்ய ஆரம்பித்து விட்டால் கூட யாராவது ஏதாவது போகிற போக்கில் சொல்லி விட்டால் அல்லது எங்காவது ஏதாவது தவறாக நடந்து விட்டால் கூட, இவர்களே தவறு செய்தது போல் அல்லது இவர்கள் செய்வதை யாராவது தவறு என சொல்லி விடுவார்களோ என தளர்ந்து உடனே தொடர்ந்து விடாமுயற்சியுடன் அதை செய்வதை விட்டும் தடுமாறி விடுவார்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா.. நெப்போலியன் மிக அழகாக சொல்கிறார் ஒருவன் தவறே செய்யவில்லை எனில்



Dr. ஃபஜிலா ஆசாத்
(International Life Coach – Mentor – Facilitator)

அவன் எந்த புது முயற்சியும் எடுக்கவில்லை என்று. தவறு செய்வது தவறல்ல. உங்களை யாராவது நீங்கள் தவறு செய்து விட்டீர்கள் என்று சுட்டிக் காட்டுவதும் தவறல்ல. நீங்கள் அதை புரிந்து கொண்டு உங்களை நீங்கள் வளர்த்து கொள்ள முன் வருவதை விட்டும் உங்களை நீங்களே criticize செய்து உங்களுக்குள் நீங்கள் சுருண்டு கொள்வது தான் தவறு என்கிறது ஆழ்மன இயல்.

ஏனென்றால் அதனால் அவர்கள் தங்கள் ஆழ்மனதிற்கு தாங்கள் மகிழ்ச்சி யாக இல்லை தங்களை சுற்றி இருப்ப வர்கள் தங்களுடன் மகிழ்ச்சியாக இல்லை என சிக்னல் தருகிறார்கள். அது தவிர சின்ன சின்ன விஷயத்தையும் கவனித்து வருந்த வேண்டும் என அதற்கு பயிற்சி அளிக்கிறார்கள். அதனால் ஆழ்மனதும் ஏற்கெனவே செய்தவற்றிலேயே அதிகம் கவனம் வைத்து இனி செய்ய வேண்டி யதில் கவனம் வைக்காமல் நடந்த நிகழ்வுகளையே சுற்றி சுற்றி நினைத்து வருந்த செய்கிறது.அதனால் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது இவர்களுக்கு விட்டில் பூச்சியாகவே மின்வெட்டி மறைகிறது.

உண்மையில் சென்சிடிவிட்டி என்பது ஒரு குறையே அல்ல. அது நீங்கள் தேர்ந்தெடுக்கக் கூடியதும் அல்ல. இது ஜீன்களின் மூலம் பெரும்பாலும் வரும். உலகில் 15 -20 சதவீதம் பேர்கள் சென்ஸிடிவானவர்களாக இருக்கிறார் கள் என்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று. பெணகள் தான் பொதுவாக சென்சிடிவானவர்கள் என்று சொல்லப் பட்டாலும் ஆண்களிலும் சரிக்கு சமமான வர்கள் இருக்கிறார்கள் என்கிறது அந்த ஆய்வு.

பொதுவாக Detached ஆக இருப்பது எதையும் கண்டு கொள்ளாமல் போகவும் இப்போது பழகிக் கொண்டிருப்பதால் எல்லாவற்றையும் கேர் எடுப்பவர்களை பார்க்கும் போது அது அவர்கள் குறை போல் தெரிகிறது.

சென்சிடிவிட்டி என்பதை நெகடி வாக லேபில் பண்ணுவதை விட்டும் அதன் பாஸிடிவான இயல்புகளை பார்க்க வேண்டும். உங்களுடைய சென்சிடிவிட்டியை ஒரு intuition ஆக எடுத்துக் கொள்ளுங்கள். சென்சிடிவிட்டி என்பதை ஒரு வீக்னெஸ்ஸாக பார்க்கக் கூடாது.

பிறருடைய கஷ்டங்களையும் வலிகளையும் உணர முடிந்ததால் தான் மகாத்மாவும் மதர் தெரசாவும் நமக்கு கிடைத்தார்கள். அவர்களால் அதை தீர்க்க கூடிய முயற்சியை எடுக்க முடிந்தது. வலிப்பது தவறல்ல அதை தாங்கும் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனபதே நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று,

எல்லாவற்றையும் விட ஒருவரை, அவர்கள் சென்சிடிவ் என்றோ கடினமான வர்கள் என்றோ லேபில் பண்ணுவதற்கு முன்னால் ஒரு நிமிடம் நிறுத்தி அவர்களை அவர்களாக எதார்த்தமாக புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். மகிழ்ச்சி மலரும்.

### நீங்கள் சென்ஸிடிவானவரா..?!

என்ன பிரச்னையென்றாலும் அதற்கு அழுது அரற்றுவது தவறல்ல. ஆனால் அதை, பின் ஒரு பெருமூச்சுடன் கடந்து விட்டு, அடுத்து ஆக்கப் பூர்வமாக அதற்கு என்ன செய்யலாம் என சிந்தித்து பாருங்கள்.

ஏதோ மற்றவர்கள் உங்களுக்கு தீங்கு செய்கிறார்கள் என எமோஷனலாக நினைக்காமல், உங்களால் எதையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை என பலகீனமாக உணராமல், எது உங்களை அழுத்துகிறது, எங்கே வலிக்கிறது என உங்களுக்குள் நீங்கள் திடமாக உற்றுப் பாருங்கள். உங்களுடைய மென்மையான மனதை எமோஷனலாக தட்டிக் கொடுத்து விட்டு உங்களை வருத்தும் பிரச்னைக்கு லாஜிக்கலான தீர்வை சிந்தியுங்கள்.

உங்களிடம் உள்ள மென்மை, சென்சிடிவிட்டி குறையாமலேயே உங்கள் மனதில் உறுதியும் திடமும் எழும். அது உங்களுக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கே பலன் தரும். மகிழ்ச்சி மலரும்.



அறுசீர் விருத்தம்
விளம் மா தேமா

# பனியென குளிர்ந்தப் பாவை

## தமிழ்நெஞ்சம் அமின்

கண்களால் கவிகள் காட்டிக்
கலந்தவள் எங்கே சென்றாள்
எண்ணத்தில் எழிலை ஊட்டி
ஏனவள் ஓடிச் சென்றாள்
மண்டிய தழைகள் போல
மனத்தினில் நிறைந்த காதல்
கண்டிட தழைத்தே என்னுள்
கருத்தினில் நிறையக் கண்டேன்

கனிந்திட உருகி நின்றேன்
கன்னியின் அழகில் நானும்
இனித்திடும் சுவையாய்  வந்தாள்
என்னுளே இனிமை கூட்டி
பனியென குளிர்ந்தே உள்ளம்
பாவையின்  அருகில் செல்ல
நனிபசும் பாலின் ஊற்றாய்
நங்கையும் வருவாள்? பார்ப்போம்

விண்ணிடைப் பறவை யாக
வீதியில் அவளைச் சுற்றி
தண்மையின் ஈரம் போல
தாமரை முகத்தைப் பார்க்க
கண்மையில் மின்னும் சேல்கள்
கரையினில் துள்ளக் கண்டேன்
பண்ணிடைப் பாடல் போல
பாவையும் என்னில் வந்தாள்

காற்றிலே ஆடும் பூவாய்
கன்னியின் முகத்தைக் கண்டு
ஊற்றிலே பாயும் நீராய்
உள்ளமும் மகிழக் கண்டேன்
சேற்றிடை மலராம் ஆம்பல்
செந்நிற உடலின்  மென்மை
நாற்றிலே ஆடும் புள்ளாய்
நானுமே ஆகக் கண்டேன்

கண்களால் அவளைத் தேடி
கனவிலும் அழுதேன் நானும்
எண்ணத்தில் நிறைந்த பாவை
எங்கேயும் காண வில்லை
தன்னிலை மறக்க வைத்தாள்
தாரமாய்ச் சிலிர்க்க வைத்தாள்
என்னிலைக் கண்டு மங்கை
இங்கேதான் வருவாள்? காண்பேன்

என்னுடன் சேர்வாள் கன்னி?
எங்கிலும் அவளின் தோற்றம்
இன்னுயி ராகி நிற்பேன்
இன்பமும் தருவேன் அள்ளி
துன்பத்தைப் போக்கச் செய்வேன்
துணையென இருப்பேன் நாளும்
தன்னுடன் இணைத்துக் கொண்டால்
தரணியும் தூசாய்த்  தோன்றும்

அவளுடை நெஞ்சம் தங்கும்
அழகிய பூவின் இல்லம்
தவமென நானும் வேண்டும்
தனித்தமிழ் வாழும் தேயம்
பயத்துடன் அணுகி நிற்பேன்
பண்புடன் மகிழ்ந்தே கூடி
தயவினை வேண்டி கள்ளம்
தைத்திடா உள்ளம் கொள்வேன்

சாடைகள் காட்டி நின்றாள்
சன்னலின் ஓரம் நின்றே
வேடனைப் போல நானும்
வேட்டையைத் தொடரச் சென்றேன்
மாடத்தி லோடிக் கண்ணால்
மன்னவா அழைத்தாள் தேவி
தேடினேன் காண வில்லை
திடுக்கென கண்வி ழித்தேன்!

# சிந்திய சிரிப்பலைகள்



**கே.என். இராமகிருஷ்ணன்**

என்னம்மா நிஷா, சாப்பிடலையா இன்னும்.

சாப்பிட்டேன்மா, இன்னைக்கு எனக்குப் பிடிச்ச புளிக் குழம்பும், உருளைக் கிழங்கு பொடிமாசும் இருந்ததனால் முன்னாடியே சாப்பிட்டுட்டேன்மா என்றாள் நிஷா தன் அம்மா ராஜி என்ற ழைக்கப் படும் ராஜலட்சுமியிடம்.

ஆமாம், உன் தூரத்து அத்தையம்மா இருக்கும்வரை நமக்கு ருசியான சாப் பாட்டுக்குப் பஞ்சமிருக்காது. ஆனால் நீ கல்யாணமாகி வெளிநாட்டுக்குப் போகப் போறீயே, அங்கேயெல்லாம் சமையலுக்கு ஆள் கிடைக்காதே, என்னம்மா செய்வே.

அது தான்ம்மா எனக்கும் பயமா யிருக்கு, எனக்கு அங்கேயிருக்கிற ஐட்டங்கள் ஒன்னுமே பிடிக்காதே, என்ன செய்வேனோ?

ஏன்ம்மா நான் உனக்கு ஒன்னொன்னா சொல்லித் தரேன்மா தங்கம் எனக் கொஞ்சினாள், சிறிது நேரமுன்பு அத்தை யம்மாள் என்றழைக்கப்பட்ட பானுமதி.

ஐயோ என்னாலாகாது அத்தை. பார்ப்போம் ஏதாவது வழியிருக்கிறதா என்று என்றவள் தன் ஆபிஸ் கிளம்பிச் சென்று விட்டாள்.

பானு இவ எப்படிம்மா சமாளிப்பா? ஒன்னுமே தெரியாதவளா வளர்த்துட்டமே. சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ்டப்படுவாளே. மாப்பிள்ளையா வரப்போற பாஸ்கரும் கண்டதெல்லாம் சாப்பிடமாட்டானாமே.

நிஷாவிடம் மெல்லப் பேசி ஒன்றி ரண்டாவது சமையல் கற்றுக் கொடுத்தி டறேன் நான். நீங்கக் கவலைப்படாதீங்க. சரியா

என்னமோ பானு இவளைப் பிரிஞ்சு நாம எப்படியிருக்கப் போறோமோ.? அத நெனச்சாத்தான் நெஞ்சை அடைக்குது.

நானும் அவ கூடப் போகட்டு மாம்மா.

சின்னஞ்சிறுசுகள் தனியா இருக்க இஷ்டப்படுமே. அதனால் வேண்டாம். குழந்தை பிறக்கிறப்போ நீ அவசியம் போய்த்தானாக வேண்டும். நான் தான் படுத்த படுக்கையிலே இருக்கிறேனே. நீ இல்லேன்னா நான் எப்பவோ என் வாழ்க்கைய முடிச்சிருப்பேன் பானு,

ஏன்ம்மா என்னென்னவோ பேசி றீங்க. எல்லாம் சரியாகிடும். கவலையை விடுங்க. இப்ப தான் ஸ்கைப்பில் பேசலாங்கறாங்களே. அப்புறம் என்ன? என்றவள் அங்கிருந்து மெதுவாக நடந்தாள். ராஜியின் புலம்பல் அதிகமா வதைத் தடுப்பதற்காக.

நிஷாவுக்கு அப்பா இல்லாத குறையை அத்தையம்மாள் பானு அவளுக்கு அந்தக் கவலை வராமல் ஏற்பாடுகளை சிறப்பாகச்செய்து கவனித்துக்கொண்டாள். கல்யாணம் தடபுடலாகத் தான் நடந்தது. இரண்டு மூன்று நாட்கள் நிஷாவும் அவள் கணவன் பாஸ்கரும் உறவினர்களின் விருந்துக்கெல்லாம் சென்று வந்தார்கள். நாளைக்கு இருவரும் லண்டன் பயணப்பட வேண்டும். மாலை 5 மணிக்கு ப்ளைட்.

நிஷாவுக்கு வேண்டியவற்றை யெல்லாம் தயாராக எடுத்த வைத்துக் கொடுத்த பானு சில சமையலுக்கு வேண்டிய பொருட்களையும் சில சிறு பாத்தி ரங்களையும்கூட பேக் செய்து கொடுத்தாள்.

புறப்படும்போது நிஷாவின் கண் களில் கண்ணீர் ஆறாகப் பெருக அவள் உடல் முடியாத அம்மாவைக் கட்டிப் பிடித்து அழுதாள்.அம்மா உன்னை விட்டுப் பிரிந்து வெளிநாடு செல்வது எனக்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது. பானு அத்தையில்லையென்றால் நான் கல்யா மே வேண்டாம் என்றிருப்பேனம்மா என அழுதாள்.

சீச்சீ, அசட்டுப் பெண்ணே, அப்படி யெல்லாம் சொல்லாதே. சீக்கிரம் ஒரு பேரனையோ, பேத்தியையோ பெற்றுக் கொடு.

பானுவும் அதையே ஆமோதித்து, அழாதே நிஷா நான் உன் அம்மாவை பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன். நீ சந்தோஷமாக உன் கணவனோடு குடும்பம் நடத்து. சந்தோஷமாயிரு என்று அவள் முதுகைத் தடவி ஆறுதலளித்தாள்.

பாஸ்கரும் ராஜியிடமும் பானுவிட மும் ஆசிர்வாதம் பெற்று இருவரும் விமானநிலையத்திற்கு சென்றார்கள். பானுவையும் விமானநிலையம் வர வேண்டாம். அம்மாவுக்குத் துணையா யிருங்கள் எனத் தடுத்து விட்டார்கள்.

அவர்கள் சென்றதும் அதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீரைத் தாரை தாரையாக கீழே இறக்கினாள் ராஜி.

பானு அவளை கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல் அனுப்பி வைக்கிறோமே அவள் என்ன செய்வாள் எனப் பயமாயிருக்கிறதே.

இந்தக் கால பெண் பிள்ளைக ளுக்கு நாம்ஒன்றும்சொல்லித்தரவேண்டியதில்லை. அவர்கள் நமக்குக் கற்றுத் தருவார்கள். அதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அவர்கள் விமானம் ஏறியதும் போன் செய்யச் சொல்லி யிருக்கிறேன். அதே போல் லண்டன் சென்ற தும் அங்கிருந்தும் போன் செய்யச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு தான் ஸ்கைப் இருக்கிறதே.

என்னமோ நீ சொல்கிறாய் என்று தான் நான் அமைதியடைகிறேன்.

இரண்டு நாட்கள் கழிவதற்கு முன்ன தாகவே அவர்கள் லண்டன் சென்ற டைந்ததையும் அங்கே ஏற்கனவே பார்த்து வைத்திருந்த வீட்டிற்கு அவர்கள் சென்ற தையும் நிஷா தெரிவித்து விட்டாள்.

அதிர்ஷட வசமாக அங்கே ஒரு தமிழ்க் குடும்பம் அருகிலிருந்த வீட்டிலிருக்கிறதாம். அதில் வயதானவர் கள் இருவர் இருக்கிறார் களாம். அவர்கள் இவர்களைப் பார்த்ததும் புது மணமான தம்பதியர் என்பதால் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்து தந்தார்களாம். ஆனாலும் பானுவின் சமையல் போலில்லையாம் அவை. நிஷா தான் சொன்னாள்.

10 நாட்கள் கழிந்ததும் ராஜி பானுவை அழைத்துச் சொன்னாள்பா னு என் உறவுக்காரப் பெண்ணும் அவள் கணவனும் அடுத்த வாரம் லண்டன் போகிறார்களாம். இன்று தான் டிக்கட் வாங்கினார்கள், நான் உனக்கும் சேர்த்து ஒரு டிக்கட் வாங்கச் சொன்னேன்.

ஏன்ம்மா, நான் எதற்கு? இல்லை பானு என் மனம் அல்லாடுகிறது. நீ போய் அவர்கள் வாழ்வு எப்படித்தானிருக்கிறது எனப் பார்த்து உன்னால் எதாவது அவர்களுக்கு செய்ய முடியுமென்றால் செய்து விட்டு வருவாயல்லவா? அதற் காகத்தான்.

உங்களை யார் பார்த்துக் கொள்வார்கள்?

பக்கத்து வீட்டுக்கு ஒரு வேலைக் காரம்மா வந்திருக்கிறது. அவர் களைப் பார்த்தால் நல்லவர்கள்தான் போலிருக்கிறது. பக்கத்து வீட்டுப் பெண் ஏதாவது உங்களுக்கு உதவி வேண்டு மென்றால் இந்தம்மாவை கூப்பிட்டுக் கொள்ளுங்கள். என்று சொன்னாள்.

அதெல்லாம் சரிப்பட்டு வருமா?

நான் பார்த்துக் கொள்கிறேன். என்ற ராஜி, உன் பாஸ்போர்ட்டை எடுத்து வை. உறவுக்காரப் பெண் இப்போ வருவாள். அவளிடம் கொடுத்தால் உனக்கு விசாவுக்கும் டிக்கெட்டிற்கும் அவள் ஏற்பாடு செய்து தருகிறேன் என்றிருக்கிறாள். அவள்

வருகிற நேரம் தான். சீக்கிரம் எடுத்து வை பானு என்றாள் அவசரமாக ராஜி.

அவள் சொன்னது போலவே அந்தப் பெண்ணும் அப்போதே வந்தாள். அவளுக்கு 40 வயதிருக்கும். அவளும் லண்டனுக்கு அருகிலுள்ள ஒரு கன்ரியில் வேலையிலிருக்கிறாளாம். அவள் கணவனும் அதற்கு அருகிலேயே பணியிலி ருக்கிறானாம். அவள் உன்னை நிஷாவிடம் ஒப்படைத்து விட்டுத்தான் அவள் வீட்டுக்குச் செல்வாளாம்.

சரியம்மா, நீங்கள் சொல்கிறீர்கள், எனக்கும் நிஷாவைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. நான் போய் வருகி றேன். நீங்கள் பத்திரமாக இருங்கள். நான் என் பிரண்டு ஒருத்தி இருக்கிறாள் அவளிடமும் சொல்லிவிட்டுச் செல்கிறேன் என்றாள்.

விமானம் புறப்பட்டு வானில் பறந்து கொண்டிருக்கும் போது பானுவின் நினைவுகள் தனியாக சஞ்சரித்துக் கொண்டிருந்தது. தன் வாழ்வு இளமையிலேயே கணவன் இறந்ததால் பொலிவிழந்துவிட்டிருந்தது. அந்த நேரத்தில் வரமாகக் கிடைத்தவள் தான் நிஷா. ராஜியின் வீட்டிற்கு வந்தபோதிலிருந்து நிஷாவை இடுப்பில் வைத்து உணவு ஊட்டி எல்லாமும் செய்து அவளக்கு ஒரு தாயைப் போலவே இருந்தாள் பானு.

பாவம் நிஷா எப்படியிருக்கி றாளோ? என்ற கவலையின் நினைவி லிருக்கும் போதே ப்ளைட் லண்டன் உறீத்ரூ விமான நிலையத்தில் இறங்கி யது. நிஷாவும் பாஸ்கரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். பானுவை தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல காரும் இருந்தது. அழைத்து வந்த பெண்ணிடம் நன்றி சொல்லிவிட்டு மூவரும் புறப்பட்டனர்.

வீட்டிற்குச் சென்றதும் சமைய லறைக்குச் சென்றாள் பானு. அத்தை உங்களின் சமையலறை போலிருக்காது இங்கே. நீங்கள் களைப்பாயிருப்பீர்கள். உட்காருங்கள். நான் டீ கொண்டு வருகிறேன் என்று கிச்சனுக்கு ஓடினாள் நிஷா.

சுடச்சுட டீயுடன் வந்தவள் ஒரு டம்ளரை பானுவிடமும் மற்றதை பாஸ்கரிடமும் கொடுத்துவிட்டு தனக்கும் ஒன்று உள்ளே சென்று எடுத்து வந்தாள். டீ அருமையாக இருந்தது. பானுவால் நம்பவே முடியவில்லை. டீ பிரமாதம் என்றாள் நிஷாவிடம்.

பிரம்ம ரிஷி வாயால் பட்டமா? என்று சிரித்தாள் நிஷா.

பாஸ்கர் பானுவை வீட்டைச் சுற்றிக் காண்பித்தான். தனி வீடது. தோட்டமெல்லாம் இருந்தது. தோட்டத்தில் காய்கறிகளும் இருந்தன.

காய்கறிகள் எல்லாம் யார் விளைவிக்கிறார்கள்?

ஏன்? நிஷா தான்,

நிஷாவா?

ஆமாம் அவள் இங்கே வந்ததி லிருந்து வேலைகள் அவளுக்குச் சரியாகவே இருக்கின்றது. என்ற பாஸ்கர். நீங்கள் காலையில் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள், இங்கே இப்போது மதியம். வாருங்கள் அம்மா சாப்பிடுவோம் என்றழைத்துச் சென்றான்.

சாப்பாட்டு மேசை மீது மூடிகள் போட்டு உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. சாப்பிடும் மேசையில் தட்டுகளை வைத்து நிஷா முதலில் சாதம், அவளுக்குப் பிடித்த புளிக்குழம்பு, உருளைக் கிழங்கு பொடிமாஸ், கோஸ் பொரியல், ரசம், அப்பளம் என ஒரே அமர்க்களம்.

சாப்பாட்டையே பார்த்துக் கொண் டிருக்கிறீர்கள்?

என்ன அத்தை சாப்பாடு நன்றா யிருக்குமா என்றா யோசிக்கிறீர்கள். ஓரளவு பரவாயில்லை என்றேயிருக்கும். சாப்பிடுங்கள் என்றாள்.

சாப்பிடும்போது தான் பானு வுக்குப் புரிந்தது, எல்லாமே தன் கைப் பக்குவத்திலிருந்தது. எப்படி இது சாத்தியம். தான் சொல்லிக் கொடுக்க வில்லையே. அருமையாகச் செய்திருக்கிறாளே.

அத்தை என்ன நினைக்கிறீர்கள், நம் சமையலை இவள் எப்படிச் செய்தாள் என்று தானே. நீங்கள் செய்யும்போது நான் பார்த்திருக்கிறேனே.

பானுவுக்கு ஒரே சந்தோஷம்.

அவள் உடனே ஸ்கைப்பில் ராஜியிடம் பேசினாள். உன் மகள். சாப்பாடு....

மோசமாக இருக்கிறதா? பாவம் எனச் சொன்னாள் ராஜி

அதுதானில்லை. அவள் சமையல் பிரமாதம். என் டைப்பில் தான் எல்லாமே இருக்கிறது.

அப்படியா? எப்படி பானு?

நான் சொன்னேனில்லையா இந்தக் கால பெண் பிள்ளைகள் மிக விவரமான வர்கள். நம்மைப் போலில்லை என்று,

ஆமாம். ரொம்ப சந்தோஷம் பானு, நிஷா, பாஸ்கர். என் மனம் மகிழ்ச்சியில் நிறைந்து விட்டது.

சரி நான் இனி இங்கிருக்கப் போவதில்லை. இங்கு நான் பார்த்தவை களைச் சொல்லி மகிழ அங்கே வந்து விடுகிறேன். மாப்பிள்ளையிடம் சொல்லி விட்டேன். நாளை ப்ளைட்டாம்.

என் சமையலை சாப்பிட முடியாமல் தான் அவசரமாகச் செல்கிறீர்களா அத்தை.

போம்மா, என்னை மயக்கி விட்டாய். இங்கிருந்தால் மயக்கம் அதிகமாகிவிடும். அதனால் தான் என்றாள். எல்லோரும் சிரித்தனர். அங்கே சிரிப்பின் அலைகள்..

# இதை நீ உணர்ந்தால் நீயும் மனிதன் தான்!...

அம்மா என்பது பாசம் !
அப்பா என்பது ஆசான் !
உணவு என்பது மருந்து !
ஆடை என்பது மானம் !
பணம் என்பது தேவை !
ஆங்கிலம் என்பது மொழி !
வெள்ளை என்பது நிறம் !
தமிழ் என்பது உயிர் !
இயற்கை என்பது அழகு !
தனிமை என்பது பயம் !
காதல் என்பது போதை !
அன்பு என்பது அடிமை !
ஆனந்தம் என்பது ஆயுள் !
சினம் என்பது நோய் !
துன்பம் என்பது பரீட்சை !
தோல்வி என்பது பாடம் !
வெற்றி என்பது தற்காலிகம் !
பெருமை என்பது அகங்காரம் !
நட்பு என்பது இனிமை !
குழந்தை என்பது களிப்பு !
குடும்பம் என்பது பற்று !
எண்ணம் என்பது வாழ்க்கை !
உலகம் என்பது மாயை !

அதில்,
ஆண் என்பவன் உழைப்பு !
பெண் என்பவள் பொக்கிஷம் !

இவை எல்லாம் நீ அறிந்தால்
நீயும் ஒரு உண்மையான மனிதனே!

**இளம் தாரகை**

( ஷஹ்னா ஸப்வான் )

# மோகினியாட்டம்

வானமும் பூமியும்
வசந்தமும் பனியும்
சுற்றியுள்ள பசுமையும்
சுகந்தமான மலர்களும்
ஓடும் நதியும்
உறவாடும் பட்டாம்பூச்சியும்
கூவும் குயிலும், அகவும் மயிலும்..
சில் என்ற குளுமையும்
சிதறிக் கிடக்கும் பூக்களும்..
அழகிய சாலையும்
அருவியின் சாரலும்
கடந்திடும் மனிதர்களும்
கனப்பொழுதான புன்னகையும்
அத்தனையும் எனக்கே..
அள்ளிக்கொள்வேன் கண்களில்
நிறைத்துக் கொள்வேன் மனதில்..
சோம்பிக் கிடக்கும் காலங்களில்
தேங்கிக் கிடக்கும்
இவையெடுத்து
மூடிக்கிடக்கும் கண்ணுள்ளே
மோகினியாட்டம் காட்டிடுவேன்.

**- பரமேஸ்வரி சண்முகம்**





# எங்கே நான் செல்ல?

என்னை நீ மறந்தாய்
உன்னை நான் மறவேன்
உயிரே நீ பிரிந்தாய்
உணர்வே நான் பிரியேன்

கடந்த நாட்களில் களிப்பு பேசியதே!
கடக்கும் நாளிலோ கண்ணீர் பேசுதே!

இந்த வலிகள் இன்னும் நீளுமோ!
இனிய நேசம் எப்போது பேசுமோ!
இனியவனே! எனது பாசம் பேசலையா?
இன்னும் உனது கோபம் தீரலையா?

பாலை வனத்தில் சோலையாய்
பாவை மனத்தில் பரிதியாய்
பிடிவாதம் பிழையாய் புரிந்து
கொண்டதே!
பிரிவில்லா உறவில் விரிசல் வந்ததே!

எங்கே நான் செல்ல
என்னுயிரே வா சொல்ல
எனக்காக இங்கு யாருமில்ல
என்னவனே பேசு மெல்ல.

- சரவிபி ரோசிசந்திரா



# இலட்சியம்...

**- பிந்த் இல்முதீன்**

இத்துடன் கோர்ட் கலைகிறது... குற்றவாளிக்கூண்டுக்குள் நின்றிருந்த பாத்திமாவும் ரீஹாவும் கீழிறங்கினர். பாத்திமாவின் கண்களில் இறைவனைப் புகழத் துடிக்கும் வேட்கை...

ரீஹாவுக்கோ பாத்திமாவை அப்படியே விழுங்கி விடும் படியான கோபம்.. பார்வை யாளர்கள் ஒவ்வொரு வராய் நகர்ந்தனர்.

ரீஹாவின் பின்னால் ஓடி வந்த சட்டத்தரணி ஏ.ஆர்.இப்றாஹீம்,

“ரீஹா என்ன மன்னிச்சிடுங்க.. எவ்வளவு வாதாடியும் என்னால் ஒங்கள ஜெயிக்க வைக்க முடியல..”

***

அழகான அந்த வீட்டில் நேர்த்தியாக காணப்பட்டது சட்டத்தரணி நூராவின் அறை...

சுவருடன் ஒட்டியவாறு கண்களை கவரும் மீன் தொட்டி.. அதிலிருந்த வண்ண மீன்கள் அழகாய் அங்குமிங்கும் உலாவின..

“என்னம்மா இன்னும் அந்த லோயரக் காணோம். போயிடலாம் வாங்கமா”

“கொஞ்சம் இரு.. எப்படியும் வந்திடு வாங்க”

தாயின் அதட்டலில் வாய் மூடிப் போனாள் றிஸ்லா.

தாயும் மகளும் பேசி முடிக்கும் முன்னர், ஊதா நிற ஷல்வார் அணிந்து தலையையும் முடியையும் முழுதாய் மறைத்து போர்த்தப்பட்ட ஷோலுடன் கண்களில் அணியப்பட்டிரு கண்ணாடியை சரி செய்தவாறே புன்னகை தவழ்ந்த முகத்துடன் வந்தமர்ந்தாள் பிரபல சட்டத்தரணியான நூரா..

அவளது கள்ளமில்லா விழிகளும் புன்னகை தவழ்ந்த இதழ்களும் றிஸ்லாவை ஒரு நிமிடம் சிந்திக்க வைத்தது..

ஒரு சட்டத்தரணி என்றால் மிக நவீனமான ஆடையுடுத்தி ஏனையோ ருடன் நேரம் செலவழித்து பேசவும் முடியா திருப்பார்கள் என அவள் நினைத்ததற்கு மாற்றமாக இருந்தாள் நூரா..

“அவசரமா ஒரு கோல் வந்ததால லேட் ஆகிட்டேன்.. மன்னிச்சிடுங்க...”

“ஆஹ் பரவால மேடம்...” இருவரது வாய்களும் முணுமுணுத்தன..

“சொல்லுங்கமா என்ன விஷயம்?”

“இவங்க எங்கட உம்மா மேடம்.. எனக்கு கல்யாணம் ஆகி 5 வருஷங்களா கிட்டு...

ஆனா எனக்கு குழந்தை பாக்கியம்...” றிஸ்லாவின் கண்களில் நீர் துளிர் விட்டது..

“கல்யாணம் ஆகி குழந்தை இல்ல.. சோதிச்சி பார்த்ததில றிஸ்லாக்கு ஒரு பிரச்சனையும் இல்லை.. அதனால் இனி மேலும் எங்களால அடுத்தவங்கட சொல்

பேச்சு கேட்க ஏலாது.. இவங்களுக்கு விவாகரத்து வேணும்...''

அத்தாய் கூறியதைக் கேட்டு முகத்தில் எவ்வித மாற்றத்தையும் காட்டாத நூரா,

"சரி.. இது ஒங்கட விருப்பம் மட்டுமா? இல்லாட்டி ஒங்கட ஹஸ்பன்ட்க்கும் விருப்பமா?'' என்றாள் றிஸ்லாவை நோக்கி..

''எங்க ரெண்டு பேருக்கும் விருப்ப மில்லை மேடம்..வீட்டால தான்...''

இவ்வாறு விசும்பலுடன் கூறிய றிஸ்லாவை பார்த்ததும் ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள் நூரா.. இருப்பினும் அதனை முகத்தில் வெளிக்காட்டவில்லை..

''நீங்க கொஞ்சம் வெளியே இருங்க மா.. நான் இவங்களோட பேசிட்டு வாரேன்..'' என றிஸ்லாவுடன் தனிமையாக பேச வேண்டும் என்பதனை அவள் கூற,

''வேணாம் நீங்க எங்க ரெண்டு பேர் முன்னாடியே சொல்லுங்க பரவாயில்லை..

சும்மாவே அவ விவாகரத்து செய்ய முடியாது என சொல்றா.. நீங்க வேற மனச மாத்தி விட வேணாம்..''

''அத தான் மா சொல்றேன்.. விவாகரத்தை விட எத்தனையோ வேறு வழிகள் இருக்கு...''

நூராவின் பேச்சு அத்தாய்க்கு கோபத்தை ஏற்படுத்தியது..

இதுவரை அமைதியாக பேசிக் கொண்டிருந்தவர் திடீரென எழுந்து,

''உங்ககிட்ட வந்தது வேலைய முடிச்சு கேக்குறதுக்கு.. அதுக்குத்தான் சல்லி தாரமே.. இன்னும் ஏன் தேவை யில்லாம பேசுறீங்க??

இதை எப்பயோ நாங்க கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டோம்...

சப்போட்டா தான் உங்ககிட்ட வந்தோம்..''

இவ்வாறு அந்த தாய் பொரிந்து தள்ள றிஸ்லாவுக்கோ மிகவும் சங்கட மாகிப் போனது...

''கொஞ்சம் பொறுமையா இருங்க மா.. சில வேளைகளில் இதுக்கு பொறகு குழந்தை பாக்கியம் கிடைக்கும் வாய்ப்பு நெறயவே இருக்கு..''

''ஒங்கட பேச்சு எங்களுக்கு தேவை யில்ல..வா போகலாம்.''

றிஸ்லாவின் கணவனின் குடும்பத் துடன் ஏற்கனவே பகைமையுடன் இருந்த அந்த தாய் மகளுடன் அவ்விடத்தை விட்டும் நகர்ந்தாள்..

அதற்குள் றிஸ்லா நூராவின் தொலை பேசி எண்ணை தாய் அறியா வண்ணம் மெதுவாக குறித்துக் கொண்டாள்..

''பணத்தை வாங்கிட்டு வேலை பார்ப்பதை விட்டுட்டு பேசுறாங்க பேச்சு..'

அந்த தாயின் புலம்பல் அவர்கள் வீதியை தாண்டும் வரை ஒலித்தது..

நாட்கள் மாதங்களாகி வருடங்கள் உருண்டோடின..

''மேடம் ரொம்ப தேங்க்ஸ்.. என்ட வாழ்க்கையில நடக்கவிருந்த பெரியதொரு இழப்பை இல்லாமல் ஆகிட்டீங்க..''

7 மாதங்கள் நிறைந்த தன் வயிற்றை தடவியவாறே தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள் றிஸ்லா..

ஆம் இப்போது அவளது வயிற்றில் குழந்தை வளர்ந்து கொண்டிருந்தது.. அவளுக்கு குழந்தை உருவாகுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரே அவளது தாயும் மரணித்து விட்டாள்..

ஆனால் சட்டத்தரணி நூராவை பற்றிய சில தீர்க்கப்படாத சந்தேகங்கள் றிஸ்லாவுக்குக்குள் இருந்து கொண்டே இருந்தன.. தொலைபேசியில் எவ்வளவு தான் பேசினாலும் நேரில் சந்தித்த உணர்வு வராதே..

எப்படியாவது என் குழந்தை பிறப்பதற்கு முன்னர் மீண்டும் நூராவை சந்தித்தே ஆகவேண்டும் என உறுதி பூண்டவள் கணவனின் அனுமதி யுடன் நூராவின் வீட்டிற்கு சென்றாள்..

''வாங்க றிஸ்லா... ஏதாச்சும் தேவையாயிருந்தா கோல் பேசின போதே கேட்டிருக்கலாமே..''

''மேடம் தப்பா நினைக்காதீங்க..

எங்கட உம்மா அவசரப்பட்டு எனக்கு விவாகரத்து எடுத்து தரணும் என சொன்ன நேரம் நீங்க உடனே அதற்கு சம்மதிக்கல்ல..

அதற்குப்பிறகு ஒங்கள நான் தொடர்பு கொண்ட போது எனக்கு குழந்தை இல்லாட்டியும் பரவாயில்லை.. எனக்கு

விவாகரத்து வேணாம் என சொன்னேன்... 'இவையிரண்டையும் ரொம்ப சுலபமாக தீர்க்கலாம்' என சொன்னீங்க...

நீங்க சொன்ன மாதிரியே நானும் என் ஹஸ்பன்டும் இந்தியாவுக்கு போய் சோதித்ததில் எனக்கு குழந்தையும் உருவானது. இதில் எனக்கு அதிசயமான விஷயம் என்னன்னா..." சற்று இழுத்த றிஸ்லாவிடம்,

"சொல்லுங்க "

புன்னகை மாறாத அதே முகத்துடன் கேட்டாள் நூரா..

"நான் இந்த உலகத்தில பொதுவாக எல்லோருமே பணத்துக்காக வேலை பார்க்கிறவங்கள தான் பார்த்திருக்கேன்.. ஆனா நீங்க மட்டும் இப்படி அடுத்தவர் நலனை பாக்குறதும் கோர்ட்டுக்கு போக விடாம எங்களை தடுத்து மாற்றுவழி சொன்னதுக்குமான காரணம் என்ன என சொல்ல முடியுமா?"

சற்று நேரம் அமைதி காத்த நூரா பேச ஆரம்பித்தாள்..

"எங்கட வீட்டில நான் மட்டும்தான் பிள்ளை.. எனக்கு பத்து வயதிருக்கும்... அப்போ எங்க வாப்பாட நண்பர் ஒருத்தர் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போயிட்டாரு.. எங்க வாப்பாவும் அந்த அங்கிளும் ரொம்பவே நல்ல நண்பர்கள்.. அதனால அந்த அங்கள் மரணித்த பிறகும் வாப்பா அந்த குடும்பத்திற்கு நிறைய உதவிகள் பண்ணினாங்க...

ஆனால் நான் கொஞ்சமும் எதிர் பார்க்காத விதமாக கொஞ்ச நாட்களுக்கு பிறகு எல்லாமே சிக்கலாகிட்டு..

என்ன நடந்த என யாருமே என்கிட்ட சொல்லல..

ஆனா அந்த அங்கிளோட மனைவி யான ரீஹா ஆண்டி எங்கட குடும்பத்துக்கு எதிரியா மாறிட்டாங்க என ஊரெல்லாம் கதை ஆனது..

"உதவி தானே செய்தாங்க ஒங்கட வாப்பா.." புருவம்சுருக்கியவாறே கேட்ட றிஸ்லாவிடம்,

"ஆமா.. அதற்கான காரணம் போக போகத்தான் தெரிந்தது.. அந்த ஆன்டி எங்கட வாப்பாவ திருமணம் செய்ய



# மழலை மயிலே

சுட்டிக் குறும்புகள் நீ செய்திடினும்
கெட்டிக் காரியென
கொட்டிட எந்தன் கைகளை....
கொட்டி உந்தன் இமைகளை
கட்டி அணைத்து என்னை..
காட்டிச்சிரிக்கும் முத்துப்பல் சிரிப்பில்
கூடியிருக்கும் என் அன்பை..

முட்டி மோதி எழுந்து
குட்டிப் பாதம் பதித்து
எட்டியோர் எட்டு வைக்கையில்
நட்ட உன் பாதம் சறுக்கி
பட்டென விழும் உன் அழகை..

திக்கித்திணறி நீ
பேசிடும் மழலை மொழியிலும்
கள்ளம் கபடமறியா
வதன அழகிலும்...
என் கவலை மறந்து
திகைத்து நிற்கும் என் நிலையை...

உன் பிஞ்சு உருவம்
எனக்குள் ஏற்றி விட்ட
நெஞ்சச் சுவடுகளை.....
திரும்பத் திரும்ப மீட்டி
ரசித்திடும் எனக்குள் உள்ள
உன் நினைவலைகளை.....

என்னவென்று வர்ணனை
செய்வேன்........
என் மழலை மயிலே!!
நான் கண்டு கொண்ட
அதிசயம் என்பேனா?-அன்றி
நான் கற்றுக் கொண்ட
அனுபவம் என்பேனா??

- **நுஸ்ஹா நவாஸ்**
ஏறாவூர்.

ஆசைப்பட்டிருக்காங்க..''

ஆச்சரியத்தில் றிஸ்லாவின் கண்கள் அகல விரிந்தன..

''அதற்கு பிறகு இந்த விஷயம் கோர்ட்டில் வாதாடப்பட்டு எங்கட உம்மாக்கு சாதகமாகத் தான் தீர்ப்பு அளிக்கப் பட்டது.

இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத அந்த ஆன்டி ஊர் மக்களின் கேலிப் பேச்சுக்களை தாங்க முடியாமல் தற்கொலை பண்ணிகிட்டாங்க... கோர்ட்டுக்கு கொண்டு போகாமலேயே அழகான முறையில் இதனை சரி செய்து இருக்களாம்.. ஆனா இத ரொம்ப பெரிய விஷயமாக்கி எல்லாமே தலைகீழாக மாறிட்டு.. என்ட உம்மாவாக இருந்தாலும் இப்படியான விஷயங்களை ரொம்ப பெரிசாக்கி அதை அடுத்த மனுஷங்களுக்கும் தெரியப்படுத்தி வீட்டில் நடக்கும் எல்லா பிரச்சினைகளையும் அடுத்தவர்கள் பார்த்து கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு சந்திக்கு கொண்டு வருவதில் எனக்கு துளியும் விருப்பமில்லை..


அதனால்தான் நான் ஒரு சட்டத் தரணியாக மாறி இப்படியான பல பெண்களது பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முடிவெடுத்தேன்..முடியுமான வரைக்கும் பெண்களது பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தாது இருக்க திட்டங்கள் போட்டேன்.. அதனால் நெறய தடைகளையும் தாண்டி இருக்கேன்..'' இவ்வாறு கூறிய நூராவின் விழிகளில் கண்ணீர் துளிர்த்தது...

''அதேபோல நான் என்னிடம் வரக்கூடிய பல குடும்பங்களின் பிரச்சினை களை முடியுமானவரை தீர்த்து வைப்பதற்கு பல முயற்சிகளை எடுத்த போதும் அது பல தடைகளுடன் தடைப் பட்டபோது உங்களது விடயத்தில் முதலா வதாக அது நிறைவேறியது..இது என் வாழ்வில் மறக்க முடியா ஓர் வெற்றியாகும்...

''அப்போ ஒங்கட ஹஸ்பன்ட்?''

''ம்ம்.. அவரும் ஒரு லோயர் தான்.. எனக்கு எல்லா விஷயங்களிலும் ஒத்துழைப்பு தாறது அவர் தான்'' என்ற நூரா மகிழ்ச்சியுடன் றிஸ்லாவை வழியனுப்பிவிட்டு அமைதியான முறையில் தன் மேசையில் இருந்த பேப்பர் களை புரட்ட தொடங்கினாள்...

# என்னோடு



**- பஸ்னா**

அடிக்கடி என்னோடு
பல உறவுகள்
உரையாடிக்கொண்டுதான்
இருக்கின்றன....

அன்று நண்பனொருத்தன்
அலைபேசியிருந்தான்
அவனுக்கு அவசரமாக
சிறுதொகைப்பணம் வேண்டுமாக
இருந்திருக்கிறது...

அடுத்தொருநாள்
தோழியொருத்தி
எனைத்தேடி
வீடுவரை வந்திருந்தாள்
அவளுக்கு
மாற்றீடாக ஆபரணமொன்று
அவசியப்பட்டிருக்கிறது...

இன்னுமொருநாள் என்
பால்யகால சிநேகிதியொருத்தி

வாட்சப்பில் சலாமுரைத்திருந்தாள்
ஏதோ ஒன்லைன் வியாபாரக்
குரூப் ஒன்றில் இணைத்துவிட
என் இலக்கமும்
தேவைப்பட்டிருக்கிறது அவளுக்கு...

அவ்வாறே
என் பள்ளிக்கால
நெருங்கிய நண்பியொருத்தி
முகநூல் வழியே
எனக்கு நட்பழைப்புத்
தந்திருந்தாள்
அடுத்த கணமே
அவள் அனுப்பிய
யூ ட்டியூப் லிங் கிற்கு
லைக் ஒன்று
தேவைப்பட்டிருக்கிறது அவளுக்கு...

என் பல்கலைச்
சிநேகிதன் ஒருவன்
நீண்ட நாட்களின் பின்
என் இலக்கம் தேடி
எனைத்தொடர்பு கொண்டிருந்தான்
'வாழ்த்துப்பா' ஒன்று
தேவைப்பட்டிருக்கிறது அவனுக்கு...

மற்றுமொரு நாள்
என் பக்கத்துத்தெரு
சகோதரியொருத்தி
அழைப்பெடுத்து
அரைமணிநேரம் கடந்தும்
உரையாடித்தீர்த்தார்
சீட்டுப்பிடிக்க
ஒரு நபரின் இடம்
குறைந்திருக்கிறது அவருக்கு...

இப்படியாக
அடிக்கடி என்னோடு
பல உறவுகள்
உரையாடிக்கொண்டுதான்
இருக்கின்றன....

ஆனால்

கடும் மன அழுத்தத்தில்
நான் புதையுண்டிருந்த
ஒரு நாளில்

எப்படியாவது
யாரிடமாவது
கொட்டித்தீர்த்து
கொஞ்சமேனும் மனதைத்
தேற்றினால் போதுமெனக்
கருதியபோது

நான் தொர்புகொள்வதற்கென்று
அல்லது
என்னைத் தொடர்புகொள்வதற்கென்று
அன்று யாருமேயிருக்கவில்லை

அல்லது

அவர்களிருந்தும்
இன்னொரு தொடர்பில்
இன்னொரு தேவையில்
அதியக்கறையாய்
தொலைந்திருந்தனர் எனலாம்...



# பெண்ணே அன்பாய் வாழி

பொன்துகளைச் சுமந்தமேகம் பொன்னைச் சிந்த
பொன்புனைந்த நிலமகளைப் போற்றும் நேரம்
புன்னகையின் பொருளுரைக்கும் பூக்கள் எல்லாம்
பூமியெங்கும் மணம்பரப்பிப் புதுமை செய்ய
நன்மனதை நவரசமாய் நாணத் தோடு
நன்முகத்தால் நடந்துவந்தாள் அன்னம் போல
பன்மினிமேல் கலைமகளைப் பார்த்த பின்னே
பைந்தமிழின் புகழ்மணக்கப் பாடி னாளே!

மன்னவனின் மனதினிலே மாயஞ் செய்ய
மங்கையவள் விழியிரண்டால் மதுவைத் தந்து
மின்னலிடை அவிநயத்தால் விந்தைப் பெண்ணாய்
மேதினியை அலங்கரிக்கும் மலராய் ஆனாள்
மண்ணுலகில் நிலவொளியை வாங்கி வந்து
மாண்பொளிர மலைமுகட்டில் தெளித்து விட்டு
கன்னிமாடக் கலையழகில் கனிந்த பெண்ணே
கற்பகத்தின் கனிரசத்தின் கனவு நீயே!

மரபறிந்து ஓடிவரும் வற்றா ஆற்றில்
மனங்குளிர நீராடும் மங்கை பேச
மரஞ்செறிந்தும் மாந்தளிராய் மேனி மின்ன
மருக்கொழுந்து வாசனையில் மாயஞ் செய்தாள்
அரம்பையரில் ஆரணங்கே அன்பி னூற்றே
அரங்கினிலே ஆடவைக்கு மாசை கொண்ட
அரவணைக்கும் சிந்தையுள்ள அஞ்சா நெஞ்சில்
அகங்குளிர்ந்த சந்திரன்போல் அன்பாய் வாழி!



**கவிஞர் வீக பொன்னையா**

# இல்லம்



கவிச்சிகரம்
அ.முத்துவிஜயன்

அவன் சம்சாரம் தீர்மானமாச் சொல்லிப்புட்டா இனியும் என்னால் பொறுக்க முடியாது, ஒண்ணு அவர் வீட்டுல இருக்கனும் இல்ல நான் இருக்கனும். யார் வேணுமின்னு நீங்களே முடிவு பண்ணிக்கங்க....

அவனும் எல்லாரையும் போலத்தான் தாஜா பண்ணினான்.. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க அவர் பாவம் இந்த வயசான காலத்துல எங்குட்டு போவாரு. அவருக்கு நான் ஒரே மகன் வேற யாரும்கெடையாது நாமதான் பாத்துக்கணும்.....ன்னு

அவ சொன்னா ஒங்களுக்கு வேண்ணா அது தலையெழுத்தா இருக்கலாம் எனக்கு அப்புடி இதை கட்டிக்கிட்டு அழுகனுமுன்னு கட்டாயம் இல்லை....ன்னு முடிவாச்சொன்னா..அத்தோட மட்டுமில்லாம ஏன் முதியோர் இல்லமெல்லாம் இவங்களுக்கு காகத்தானே கட்டி வைச்சி ருக்காங்க...அங்க அனுப்ப வேண்டியது .தானேன்னா.....

அங்க பணமெல்லாம் கட்டனும்மா ஏற்கனவே இங்க பட்ஜெட் இடிக்குது அதுக்கு வேற பணம்கட்டனும்... அந்தப் பணத்த வீட்டுல செலவு பண்ணுனா நல்லது தானன்னான்

யாரு ஒங்கல பணம் கட்டுற இடத்துல சேக்கச் சொன்னா ஃப்ரீயா பாக்குற இல்ல மெல்லா மிருக்குது... அங்க கொண்டு போய் சேருங்க... அங்க இவரு வயசு ஆளுக எல்லாம் இருப்பாங்க. பேச்சுத் தொணைக்கி இங்க ஆளுஇல்ல அங்க நெறையாப்பேரு இருப்பாங்க... பொம்பளைகளே இருக்காங்க இவரு ஆம்பளை போக வேண்டியதுதானே ன்னா....

அது அனாதைகள் ஆளு இல்லாதவுக போற எடமாச்சே அங்கயா எங்கப்பாவ அனுப்பச்சொல்ற...ன்னு அதிர்ந்துபோய் கேட்டான்... அவசொன்னா அதுனாலஎன்ன அங்க நல்லாப் பாத்துக்கிறாங்களாம்...

எனக்குத்தெரிஞ்சவங்க சொன் னாங்க போய் நானே பாத்துட்டு வந்தேன் நல்லாத்தான் இருக்குதுன்னா...

அப்ப பேசாம நீ போய்டேன் அங்க நாங்க நிம்மதியா இருப்போம் லன்னான்... போகலாம்தான்..பிள்ளகஇருக்குலஅதுகல ஆரு பாத்துக்கிறது... ஆக ஒங்க அப்பாவ அங்க அனுப்புறதான் பிரச்சனையா இல்ல அனுப்புறது பிரச்சனை யான்னு கொக்கி போட்டா...

இவன் சொன்னான் தீர்மானமாத் தான்இருக்குறீயாபோய்பாத்துட்டெல்லாம் வந்திருக்க.. விசாரிச்சிருக் கன்னான்

அவசொன்னா பின்ன என்ன ஒங்க அப்பா மாதிரி ஒரு சுயநலவாதியப்பாக்க முடியாது பென்சன் வாற பணத்த அவரே வைச்சிக் கிறாரு... நம்ம சிரமப்படு போது குடுக்கலாமுல்லகேட்டாகடனாத்தாறேன்னு நோட்டுல எழுதிவைச் சிட்டு குடுத்துட்டு கறாறா த்திரும்பி வாங்கிக்கிறாரு....

நாம சாப்பாடு போடுறதுக்கு ஏதாவது குடுக்கலாமுல்ல... ம்ம்ம்



## மருதாணி - களவாணி

- மருதாணி யிட்ட
விரல்களைக் கண்டு
மனமும் சிவந்துவிடும்;
திருகாணி ஒன்று
நெஞ்சில் இறங்கித்
திருகி நயந்துவிடும்...

- களவாணி மனசும்
கடுகி நிறம்மாறிக்
கவிதையைக் கூட்டிவரும்;
கலைவாணி விரல்கள்
கற்பனை வீணையைக்
காற்றினில் மீட்டிவரும்...

**பட்டுக்கோட்டை ராஜா**



கை வரமாட்டீங்குது யாருக்குச்சேத்து வைக்கிறாரு இன்னமும்... கணக்குன்னா அம்புட்டுக்கணக்கு..நாமமட்டும்இலவசமா அவருக்கு சாப்பாடு போடனுமா... தலையெழுத்தான்னு கத்துனா...

சரி அப்பாகிட்டப் பேசுறேன்னு சொல்லிட்டு அவர்கிட்ட மெல்ல விசயத்த ஆரம்பிச்சான்.. அவர் தீர்மானமா சொல்லிட்டாரு அந்தப் பேச்சுக்கே எடமில்ல. அந்த இல்ல மெல்லாம் எனக்கு சவுகரியபடாது... நீதான் பாத்துக்கனும் இல்லாட்டி நான் கலெக்டர்கிட்ட மனு கொடுப்பேன்... உன் மேல அவங்க உன் மேல கேஸ் போடுவாங்க... பரவாயில்லயா சட்டம் தெரியுமாஉனக்கு படவா... என்ன ஏமாத்த முடியாதுன்னு கத்துனாரு...

இவனுக்குஎன்னாபண்ணுறதுன்னு தெரியல ஒரு பக்கம் சம்சாரம் இன்னொருபக்கம் அப்பா மண்டை காஞ்சு போய்டுச்சு பேசாம நாம அங்கபோய் டலாம்ன்னா அதுக்கும் வழியில்ல....

அதுக்குள்ள சம்சாரத்துக்கும் அவருக்கும் தினம் சண்டையில அவ என்ன சொன்னான்னு தெரியல... அவர் போக ஒத்துக்கிட்டதா இவ சொன்னா... சரின்னு ஒரு காரை ஏற்பாடு பண்ணுனா... அவரும் கௌம்பிட்டாரு...

இவனுக்கு ஒண்ணும்புரியல... இவனும் போனான்... அங்க எறங்குன வன்ன அங்க இருந்தவங்க சொன்னாங்க இவன் கிட்ட நீங்க ஒங்க அப்பாகூட உள்ளாற போய் ஒரு ரவுண்டு பாத்துட்டு வாங்க... நாங்க சில பார்மாலிட்டீஸ் இருக்கு பாத்துவைக்கிறோம்ன்னாங்க

இவன் சம்சாரம்சொன்னா நீங்க போய் பாத்துட்டு வாங்க நான் ஏற்கனவே பாத்துட்டேன்னா... அங்க இருந்தவரு இவனையும் இவங்க அப்பாவையும் உள்ளாற கூட்டிட்டுப்போனாங்க...

உள்ளாற போனா பாக்கவே பாவமா இருந்துச்சு... நெல்லை ஜெயந்தா சொன்ன மாதிரி குஞ்சுகள் மிதித்து முடமான கோழிகளா அங்க வயசானவங்க இருந்தாங்க இவங்களோடபிள்ளைகளைப்பாத்துஆவலா கொஞ்சுனாங்க.... எங்க பேரப்பிள்ளைகளு மிப்புடித்தான் இருப்பாங்க... அவங்கலப்

பாக்க பேச குடுத்துவைக்கல...ன்னு கண்ணீர் விட்டாங்க....

இவனோட பிள்ளைகளும் அவங்க கூட ஒட்டிக்கிட்டாங்க யாருப்பா இவங்கன்னு இவன்கிட்டக்கேட்டாங்க...இவன்சொன்னான் இவங்க ஆதரவில்லாத பெரியவங்கன்னு

அப்ப அவங்க கேட்டாங்க நாமதான் ஆதரவா இருக்கோம்ல அப்புறமேன் தாத்தாவ இங்க கொண்டாந்து விடனும்ன்னானுக...

இதை எல்லாம்பாத்துக்கிட்டு இறுகின முகத்தோட இவன் அப்பா வந்து கிட்டு இருந்தாரு இவனுக்கே ஒரு மாதிரி ஆயிடுச்சி...

அப்ப தூரத்துல ஒரு வயசான அம்மா இவங்களையே உத்துப்பாத்துக்கிட்டு இருந்துச்சு... கண்ணு சரியாதெரியல போல... சேர்லதான் ஒக்காந்து இருந்துச்சு... இவங்க அதுக்குப்பக்கதுல போறப்ப நல்லா இருக்குறீயாடான்னு இவங்க அப்பாவைப் பாத்துக்கேட்டுச்சு...

இவர் மூஞ்சி ஒருமாதிரி ஆயிப் போச்சு... நீ யார் என்ன ஏன் கேக்குற ந்னாரு... அதுக்கு அந்த அம்மா சொல்லுச்சு நடிக்காதடா... பெத்த அம்மாவத்தெரியல ஒனக்கு... கொண்டாந்து விட்டதோட சரி.... எட்டிக்கூடப்பாக்கல,,,ன்னுகண்ணதொடச் சிக்கிச்சு...இவன் உன் மகனா இவங்கதான் பேரப்பிள்ளைகளா ந்னுசொன்னவன்ன இவன் அதிர்ந்து போனான்...என்னப்பா இது புதுக்கதையா இருக்குன்னு கேட்டான்

அவர் தலையதொங்கபோட்டாரு... அந்தப்பாட்டி சொல்லிச்சி அவன் எப்படி சொல்வான்... திருட்டுப்பய பொண்டாட்டி பேச்சை கேட்டுகொண்டாந்து விட்டதாச் சொன்னான் ஆனா பொண்டாட்டி செத்துப் போனதுக்கு அப்புறமும் எட்டிப் பாக்கல அப்புறம்தான் தெரிஞ்சது அவ நல்லவ இவனோட ஐடியாதான் இதுன்னு...

இவனுக்கும் ஞாவகம்வந்துச்சு அப்பா அவரோட அம்மா இவன் சின்ன வயசுல காணாம ப்போய்ட்டாங்கன்னு சொன்னது...

அதுக்குள்ள அவன் சம்சாரம் அங்க வந்துட்டாங்க... அவளைப்பாத்ததும் அந்தப் பாட்டி சிரிச்சாங்க...

உனக்கு முன்னாடியே இவங்களைத்

# நான் எழுதுகிறேன்...

கவிதை என்றால் அழகியல்
அழகியல் எல்லாம் கவிதை
இயற்கை எழுதிய கவிதை காடு
காடு எழுதும் கவிதை பசுமை
மேகம் எழுதிய கவிதை மழை
மழை எழுதும் கவிதை வானவில்
இரவு எழுதிய கவிதை நிலவு
நிலவு எழுதும் கவிதை பௌர்ணமி
மலைகள் எழுதிய கவிதை நதிகள்
நதிகள் எழுதும் கவிதை சமுத்திரம்
மரங்கள் எழுதிய கவிதை மலர்கள்
மலர்கள் எழுதும் கவிதை தேனமுதம்
சூரியன் எழுதிய கவிதை வெயில்
வெயில் எழுதும் கவிதை வெப்பம்
சிப்பி எழுதிய கவிதை முத்து
முத்துக்கள் எழுதும் கவிதை மாலை
காற்று எழுதிய கவிதை தென்றல்
தென்றல் எழுதும் கவிதை ஸ்பரிஷம்
மூங்கில் எழுதிய கவிதை புல்லாங்குழல்
புல்லாங்குழல் எழுதும் கவிதை இசை
உள்ளங்கள் எழுதும் கவிதை காதல்
காதல் எழுதும் கவிதை கண்ணீர்
கடவுள் எழுதிய கவிதை அன்னை
அன்னை எழுதும் கவிதை தாலாட்டு
இதழ்கள் எழுதிய கவிதை முத்தம்
முத்தம் எழுதும் கவிதை மோகம்

டாக்டர்.ஜலீலா
ஏறாவூர், இலங்கை

தெரியுமான்னு கேட்டான்... அதுக்கு அவ சொன்னா எங்க மாமனாரோட அம்மாவை எனக்குத்தெரியாம இருக்குமா.....ன்னு சிரிச்சா இவனோட அப்பா மூஞ்சி மாறிப்போச்சு...

அப்ப அவ சொன்னா போன மாசம் என் பிரண்டு இங்க என்னைய கூட்டிட்டு வந்தா அவ ரெகுலரா இங்க வாரவ... அப்ப நான் வந்தப்ப இங்க இருந்த ஒரு அம்மாதான் என்னப்பாத்து விசாரிச்சாங்க... அவங்க நம்ம ஏரியாவில இருந்தவங்கதான்... அவங்கதான் நம்ம பாட்டிகிட்ட என்னப்பத்திச் சொன்னாங்க எனக்கு சாக்காயிடுச்சு... இது எப்படி எனக்குத்தெரியாமப்போச்சு...யோசிச்சேன் அதுதான் உங்க அப்பாவை இங்க அனுப்புறமாதிரி பேசினேன்...

அவர்ஒத்துக்கமாட்டார்ன்னுதெரியும் அவருக்கு அந்தவலி தெரிய னும்ன்னுதான் பேசினேன்... அவர் சண்டைபோட்டாரு அப்பத்தான் அவர் அம்மாவை நான் பாத்தவிசயத்தைச் சொன்னேன்... தலையத் தொங்கப்போட்டாரு

இல்லத்துல பேசி அவங்களை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டுபோக ஏற்பாடு செஞ்சேன். நாம இங்க வந்ததே அவங்களைக் கூட்டிட்டுப் போறதுக் குத்தான்... ஒங்க அப்பாவை விட்டுட்டுப் போறதுக்கில்லன்னு சொன்னவன்ன அவன் கண்ணு கலங்கிடுச்சு... ஒன்ன தப்பா நெனச்சிட்டேன் நானு என்ன மன்னிச்சிருன்னு கைபிடிச்சி சொன்னான்...

அதே நேரத்துல இவனோட அப்பாவோட அம்மா கண்ணுல இருந்து கண்ணீர் ஊத்துச்சு எத்தனை நாள்கனவு இங்க இருக்குறவுகளுக்கு எல்லாம்... எனக்கு நனவாயிடுச்சு...நான் அனாதையாச்சாகப் போறோம் பேரப்பிள்ளைகள்கூட இருக்காம பாக்காமன்னு நெனச்சேன் கடவுள் உன் சம்சார ரூபத்துல வந்து நனவாக்கிட்டா... தெய்வம் உன் சம்சாரம்...

இனி நான் செத்தாலும் சந்தோசம் தான் எனக்குக் கொள்ளிவைக்க ஆளிருக்கு என் பேரப்பிள்ளைக நெய்பந்தம் பிடிச்சி சுத்திவரத்தான் என் கட்டை வேகும்... இது போதும்ன்னு தழுதழுக்க கண்ணீரோட சொல்லும்போது அங்க இருந்தவங்க எல்லார் கண்ணுகளும் கொளமாகிப்போச்சு...

எதுக்கும்கலங்காத இவனோட அப்பா கண்ணும் கலங்கித்தான் போச்சு... தப்ப ஒணரந்து... என்ன மன்னிச்சிடும் மான்னு கண்ணீர்விட்டாரு..

அப்பவும் அந்தப்பாட்டி சொல்லிச்சி இப்பவும் எப்பவும் நீ நல்லாருக்கனும்ன்னு தாண்டா நான் சாமி கும்புட்டேன் நீ அம்மா இல்லைன்னு சொன்னாலும் எனக்கு நீ எப்பவும் மகன் தாண்டான்னு... கண்ணீரோட.... ■

## தன்முனைக் கவிதைகள்



ஆய்ந்தறியும் ஆற்றல்
இயல்பாக மாற்று.
ஈடிணை இல்லை
உலகில் வேறு.

இதழ் சிந்திய
கதையின் கரு.
பிறரிடமும் சிந்தியது
மனித இதழ்.

முடங்கிகிடக்கும் சிம்மாசனம்
தூசி தட்டப்பட்டது.
தனித்த ஆற்றல்
மாபெரும் ஆளுமையே வருக.

வாசகனே உன்னால்
நான் தொலைந்தேன்.
நெடுந்தொடராய் நீளும்
மனதில் ஊதல்.

**மணவை கார்னிகன்**

தலை வாழை இலையில்
சாப்பாடு ஆனாலும் மரியாதையில்லை
கறிவேப்பிலை!

முள் கூட்டுக்குள் குடியிருப்பு
ஆனாலும் ருசிக்கிறது
பலா!

துடுப்பாய் துடித்துக்கொண்டிருக்கிறது
கட்டுமரம் கரை திரும்பும்வரை
வறுமை!

யாழ்ப்பானம் சென்று திரும்பியவனுக்கு
புத்தரின் மேல் காதல்
சமாதானம்!

வரிசை மாறாத உணவு
உண்டு செல்கிறார்கள் விருப்பபடி
நூலகம்!

நிலா இல்லாமலே சாதம்
ஊட்டிக் கொள்கிறது அவளிடம்
பொம்மை!

விரட்டி அடித்தாலும் கூடவே
சுத்துகிறது இரத்த பாசம்
நுளம்பு!

அப்படியென்ன இருக்கிறது கால்களில்
இந்த ஆட்டம் ஆடுகிறது
சலங்கை!

அழுதாலும் அவள் தான்
எரிந்துபோக வேண்டும் எப்போழுதும்
மெழுகுவர்த்தி!

காய்த்த மரம் தான்
கல்லடி படவே இல்லை
முதிர்கன்னி..!

நடுவே நடக்கலாம் சொந்தம்தான்
ஒரடி நகர்ந்தாலும் சண்டைதான்
வரப்பு...!

சொன்னால் அறுந்தும் போகிறது
சொல்லாமல் வளர்ந்தும் போகிறது
காதல்...!

**- மகிழை.சிவகார்த்தி**

# மணிக்கூ



# ஆசைகள்

பிரிவினைவாதம் இல்லாத
உலகில் வாழ ஆசை,
அன்பெனும் கூண்டில்
அடைப்பட்டு கிடக்க ஆசை,
ஏமாளியாயினும் கோமாளியாயினும்
என் நேரான வாழ்வில்
பயணிக்க ஆசை,
பிறர் நம்மைப் பார்த்து சிரித்தாலும்
அவர்களை அணைத்துக்
கொள்ள ஆசை,
வஞ்சகப் புகழ்ச்சி இல்லாத
நெஞ்சத்தில் குடியிருக்க ஆசை,
முடியாது என்று தெரிந்தும்
முயற்சிகள் செய்து கொண்டு
இருக்க ஆசை,
தொடரும் என் ஆசைகள்
அனைத்தும் தொலைந்து போகாமல்
தொலைவினில் இருக்கட்டும்
என் அதிர்ஷ்டம் தொலைவினில்
இருப்பதால்....

**எம். ஐ. எம். முபீத்**



# எங்கே அவள்..?

– அனுராஜ்

காலைவேளையில் அடுக்களையில் காப்பிப் போட்டுக் கொண்டிருந்தாள் ஜெயா. அப்போது அவர்களது வீட்டுக் கதவு பலமாய் தட்டப்பட, இந்த நேரத்திற்கு யார்..? என பேமுழி விழித்தவளாய், போய் கதவைத் திறக்க, அங்கு ஒரு பெண் நின்றிருந்தாள்.

“இது சுரேஷ் சார் வீடு தானே..?”

“ஆமா..நீங்க..?”

“அவர்கிட்டே அவசரமாய் பேசணும்.. எங்கே இருக்கார்னு சொல்றீங்களா..?” ஜெயா சற்று தாமதித் தாலும், அவளைத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து விடுவாள் போலிருந் தது அவளது வேகம்.

“மாடியிலே தூங்கிட்டு இருக்காரு, எழுப்பறேன்.. நீங்க ஹால்லே வெயிட் பண்ணுங்க..” என்றவளாய் .. “என்னங்க.. என்னங்க..” என்றபடியே அவள் மாடிப் படியேறவும், சுரேஷ் தானே அவளது குரலின் டெஸிபல் பொறுக்காமல் படியிறங்கி வந்தான்.

“என்ன..?”

“உங்களைத் தேடி யாரோ வந்திருக்காக.”

“நம்மளைத் தேடி.. யாரு இந் நேரத்திலே..” யோசித்துக் கொண்டே ஜெயாவுடன் இறங்கியவன், ஹாலில் புதிதாக ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ந்தவனாய், ஞே என விழித்த படி, “யார் நீங்க..?” என்றான்.

“நான் உங்களோட வேலை பார்க்கற மும்தாஜோட அக்கா ஜெரினா..”

“சரி..என்னை எதுக்கு தேடிட்டு வந்திருக்கீங்க..?”

“மும்தாஜ் உங்களோட தான் ஓடிப் போறதா, லெட்டர் எழுதி வச்சுட்டு வீட்டை விட்டு வெளியேறிட்டா.. என்னோட தங்கச்சியை எங்கே ஒளிச்சு வச்சிருக்கீங்க, சொல்லிட்டா நல்லது.. இல்லே..” என்றவள் சட்டென தனது ஹேண்ட்பேக்கில் இருந்து கத்தியை எடுத்து சுரேஷின் முகத்திற்கு நேராக நீட்டவும் புருஷனும், பொண்டாட்டியும் வெலவெலத்துப் போனார்கள். சுரேஷிற்கு வாய், கை எல்லாம் தந்தியடிக்கத் தொடங்கியது.

ஜெயாவோ பத்ரகாளியாய் சுரேஷை முறைத்தாள். அவனோ பரிதாப மாய் தனது மனைவியை பார்த்தபடி, தலையை கண்டபடி மேலும் கீழும் ஆட்டினான்.

பிடித்துவைத்த பிள்ளையாராட்டம் வீட்டிற்குள் வந்து அமர்ந்து கொண்டு அழிச்சாட்டியம் செய்து கொண்டிருந்த கொரோனாவை.. சே.. ஜரினாவை எப்படி விரட்டியடிப்பது என யோசித்து யோசித்து சுரேஷின் மூளை, முழியை விட்டு வெளியே

வந்து விடும் போலிருந்தது..ஏற்கனவே துருத்திக் கொண்டு இருக்கும் கண்கள் இப்போது இரண்டு கோலிகுண்டுகளாக பரிணமித்துக் கொண்டிருந்தது.

சுரேஷின் மனைவி ஜெயாவின் பார்வையோ துர்க்கா பரமேஸ்வரியின் பார்வை போல கர்ண கடூரமாய் இருந்தது.. “ஆபீஸுக்கு போறேன் பேர்வழின்னு.. ஆபீஸில இந்த மாதிரி வேலையெல்லாம் பண்றியா.. உன்னை..” பார்வையாலேயே சுரேஷை மிரட்டிக் கொண்டிருந்தாள் ஜெயா.

‘‘பாவி மனுஷா.. உன்னையே கதின்னு நெனச்சிட்டு வாழுற எனக்கு, இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்..” பயங்கரமாய் புலம்பத் துவங்கினாள் ஜெயா.

“இவ வேற.. நேரங்காலந் தெரியாம..”

“இதோ பார் கொரோனா... சே.. சே.. என்ன இழவுடா இது.. ஜரினா.. முறைக்காதீங்க.. லாக்டவுண்லேயே காலத்தை கழிச்சிட்டனா.. அது தான் எப்ப பார்த்தாலும் கொரோனாவே ஞாபகத்திலே வருது.. உங்க சிஸ்டர் மும்தாஜ் ஆபீஸ்லே என்னோட சீட்டுக்கு அடுத்த சீட்டு தான்.. பார்க்கறப்ப சினேகமா சிரிக்கறது உண்டு...ஆனா.. அவங்க கிட்டே நான் பேசினது கூட கிடையாது..”

ஜெயா மனசுக்குள் முணுமுணுத்தாள்.. என் பேரை ஒழுங்கா ஒரு நாளும் சொன்னதில்லே.. பக்கத்து சீட்டுக்காரி பேரை மட்டும் மும்தாஜ்ன்னு கும்முன்னு சொல் றதைப் பாரு..!

‘‘மிஸ்டர் சுரேஷ்.. இதை நான் நம்பணும்.. பக்கத்து சீட்டுங்கறீங்க.. பேசாமலும், பழகாமலுமா இருப்பீங்க.. உண்மையை சொல்லிட்டா உங்களுக்கு நல்லது.. இல்லேன்னா..’’

‘‘மிஸ்.. மிஸ்... அவசரப் படாதீங்க.. உங்க ஜட்ஜ்மெண்ட்டே தப்பாலே இருக்கு.. நான் ஏற்கனவே கல்யாணம் ஆனவன்னு உங்க சிஸ்டருக்கு தெரியும்.. பிறகு எப்படி; என்னைப் போய் லவ் பண்ணுவாங்க..? அவங்களை கூப்பிட்டுட்டு ஓடற உடம்பா இது..! நாலு எட்டு எடுத்து வச்சாவே, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குது..!’’

‘‘சுரேஷின் கேள்வி ஜரினாவை சற்று சிந்திக்க வைத்தது.. அவளது ஆயுதம் தாங்கிய கை சோர்ந்து தளர, சுரேஷின்



கிராமத்து கீதம்

# மாமனோட

மல்லுவேட்டி கட்டி
  மைனர் போல வந்தா
மாமா உன்னைப் பார்த்தா
  மயங்கிப்போறேன் நானும்
மார்மேல சாஞ்சி
  கோலம் போட வேணும்
மருதாணி அரச்சிவச்சி
  மயக்கப்போறேன் இப்போ...

மழை மேகம் கூடும்வேளை
  மயில்தோகை விரித்தாடும்
மஞ்சு கொஞ்சும் நேரம்
  மஞ்சள் வாங்கி வாங்க
மதுரைப் பக்கப்போயி
  மல்லிப்பந்தாய் வாங்கி வாங்க
மாலைமாத்த நானும்
  மாமா காத்துக்கிடக்குறேன்யா

மாமனோட மனசு
  மல்லிகைப்பூப் போல
மங்கை அறிவாளய்யா
  மனதில் கொள்வாயய்யா
மாசி முடியுமுன்னே
  மறக்காம நீயும் வாய்யா
மாற்றான் கவருமுன்னே
  மாலை சூட்டிப்போய்யா....

**இரா. பேச்சியம்மாள்**
கரிசல் கானம்

குரலும் சற்றே தெம்பாய் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.

"மிஸ்.ஜரினா.. ஊரு உலகத்திலே ஒரு சுரேஷ் தான் இருக்கணுமா...? உங்க சிஸ்டர் வேற எதாவது சுரேஷ்ங்கற பேரு உள்ள ஆளை லவ் பண்ணலாம் அல்லவா..? நான் என்ன மும்தாஜை இங்கே ஒளிச்சு வச்சுட்டு நாடகமா ஆடறேன்.. நீங்க எதுக்கும் நல்லா விசாரிக்கறது நல்லது. நானும் உங்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை செய்றேன்."

ஜரினா சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள்.

"ஸாரி.. மிஸ்டர் சுரேஷ்.. காலங் கார்த்தால உங்களை ரொம்ப டிஸ்ட்டர்ப் பண்ணிட்டேன். மன்னிச்சுங்கோங்க.. மும்தாஜ் சம்பந்தமா ஏதாவது தகவல் கிடைச்சா உடனே இன்பர்ம் பண்ணுங்க." என்றவளாய் இருவரிடமும் விடைபெற்று வெளியேறினாள் ஜரினா.

அப்பாடா.. காலையிலே வந்தது.. கதவு வழியா போயிடுச்சு.. (இன்னும் எத்தனை நாளைக்குத் தான் " 'தலைக்கு வந்ததுன்னு..' சொல்லியே போரடிக்குறது.. அது வேற தலை" ன்னு சொல்லப் போக.. கோஷ்டி சேர்ந்து கூட்டமா வேற வந்துடப் போறாக..)



"ஏங்க..அந்த மும்தாஜ் ரொம்ப அழகா இருப்பாளோ..?"

"இப்ப வந்திட்டுப் போனாளே.. இவளை விட அவ கொஞ்சம் உசத்தி தான்..! ஆமா.. அதை ஏன் இப்ப நீ கேட்கிறே..?"

"அபீஸுக்கு போறதே ஜொள்ளு விடறதுக்குத் தானா..!"

"ஆமா.. அங்கே எங்களுக்கு வேற வேலை இல்லை பாரு.." என்றான் எரிச்சலுடன் சுரேஷ்.

"என் கிட்டே பேசணும்னா மட்டும் எரிஞ்சு எரிஞ்சு விழறேள்.. மும்தாஜ்ன்னு பேரை கேட்டதும் உங்க முகமெல்லாம் எல்.இ.டி. பல்பாட்டம் பளிச்சுன்லே பிரகாசமா ஆயிடறது..!"

"இவ வேற நேரங்காலம் தெரியாம.. போடி..போய் வேலையைப் பாரு..!"

முந்தானையை சட்டென ஒரு உதறு உதறி இடுப்பில் செருகிக் கொண்டு, குமட்டில் இடித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்த ஜெயாவை முறைத்தான் சுரேஷ்.

"மும்தாஜ் எங்கே போயிருப்பா..? யோசித்த அவனது சிறுமூளைக்கு எதுவும் எட்டவில்லை..! எங்க போயிருந்தா நமக்கென்ன..! " மீண்டும் கட்டிலில் குப்புற விழுந்தவன், விட்ட கனவை தொடரத் துவங்கினான். அவனது போறாத காலம் கனவிலும் மும்தாஜும், ஜரினாவுமே வந்தார்கள்.

சுரேஷ் வீட்டிலிருந்து ஆயாசத்துடன் வந்து சேர்ந்த ஜரினா.. வீட்டிற்குள் நுழைந்தவுடன் எரிச்சலாய் காலணியைக் கழற்ற கால்களை உதறினாள். அது எகிறி குதித்து அவள் மேலேயே பட்டது.. "சே.. இது வேற..!" என்றபடி அதனை ஓரமாய் வைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு "பகீர்" என்றது.

கூடத்தில் புதிதாய் ஒருவனுடன் மாலையும் கழுத்துமாய் அமர்ந்திருந்தாள் மும்தாஜ்.. உடன் இருப்பவன் தான் ''சுரேஷ்'' என்பதை நான் சொல்ல வேண்டுமா உங்களுக்கு. ■

# தலைக்கனமில்லா காதலின் இலக்கணம்...!

அவளிடம் எனக்குண்டான
காதலை விவரிக்க
அலங்கார வார்த்தைகள்
எதுவும் தேவையில்லை

அவளின் ஒவ்வொரு
அசைவும் இதயத்தின்
அதிர்வாக தொடர்ந்து
என்னுள் பயணிக்கின்றதே

கண்ணெழுதி பொட்டு வைத்து
கருங்கூந்தல் அவிழவிட்டு
முல்லைச்சரம் சூட்டிய
பெண்ணிவளே

மொழியறியாத பூவாக
வாய்பேசா நிலவாக
பூவெழுதிய புன்னகையில்
பூவிலங்கு போட்டாளே

வெண்ணிற சிறகுகள்
தரித்த தேவதையே
மின்வெட்டு பார்வையில்
இதயம் பறித்தாயே

ஒவ்வொரு அணுவிலும்
இழை பிரிக்கமுடியாத
அன்பின் ஆழத்தை
உயிரினில் கோர்த்தேனே

உயிருக்கு உயிரானவளே
உள்ளன்பு ஒன்றைத்தவிர
உனக்காக தருவதற்கு
வேறொன்றுமில்லை கண்மணியே

காலங்கள் தாண்டியும்
வாழ்ந்திட்ட காதலர்கள்
பட்டியலில் நம்பெயரையும்
தடம் பதிப்போம்

நல்ல புரிதலும்
விட்டுக் கொடுத்தலும்
அன்பைப் பகிர்தலும்
காதலுக்கு இலக்கணமே

இனிவரும் காலமெல்லாம்
தித்திக்கும் அன்போடு
திகட்டாத காதலுடன்
சிறப்பாக வாழ்ந்திருப்போம்

---

பரந்த வானம்
நீல வண்ணத்தில் தெரிகின்றது
பறவையின் சிறகு

காய்ந்த சருகுகள்
கொழுந்து விட்டு எரியும்
ஏழையின் அடுப்பு

அடர்ந்த இருளிலும்
வெளிச்சம் வெகுவாக ஈர்க்கிறது
மின்மினிப் பூச்சி



மேடு பள்ளம்
மிகுந்த அச்சத்தை வரவழைக்கின்றது
பனி விளையாட்டு

பனிப்பொழிவு
ரத்தத்தை உறையச் செய்கின்றது
சாலை விபத்து

படியோர பயணம்
ஆபத்து நிறைந்ததாக இருக்கின்றது
எதிர்பாராத வேகத்தடை

**கலைவாணி சுரேஷ்பாபு**
துபாய்



## தொடர் - 03

# மஹ்ஜபின்

ஏளூர் நிலாத்தோழி

அவர் வேலை தேடி சவூதி அரேபியா வுக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்த காலம் அது.

கனவுச் சிறைக்குள் சுதந்திரக் கைதி யாய் சிறகடித்த அவளின் தாய்க்கு வெளி நாட்டு வாழ்க்கையில் இஷ்டம் இல்லை.

சவூதி அரேபியாவைப் பொறுத்த மட்டில் அப்பொழுது ஆண்களுக்கு உள்ள தொழில் என்றால் ஆடுகளையும் ஒட்டகங்களையும் பாலைவனங்களில் ஓட்டித் திரிவது தான் ...

அங்கு சென்ற பலர் சொந்த நாட்டை மறந்து உறவுகளோடு வந்து இணைய முடியாமல் அங்கேயே அடிமையாக கிடந்து விடுகின்றனர். இன்னும் சிலர் விலாசமே தெரியாமல் தொலைந்தும் விடுகிறார்கள்.. இன்னும் சிலருடைய ஜனாஸாக்கள் தான் நாடு திரும்புகின்றன.

இப்படியான அயல் தேசத்து வாழ்க்கை குறித்த அவளுடைய கருத்துக்கு மாற்றமான கருத்துக்களோடும் கனவு களோடும் தான் அவன் றெக்கை கட்டிப் பறந்தான்.

தான்திரும்பிவரும்வரைஅவளையும் அவள் குடும்பத்தினரையும் காத்திருக்கச் சொல்லி அடுத்த நாள் மறுதினம் அவன் தன் தாய் நாட்டையும் , கரம்பிடிப்பதாக வாக்குக் கொடுத்த கால அவகாசங்களையும் கடந்து சென்றது அவளது தாய்க்கு தாங்கொண்ணா வேதனைப் பாறையாக நெஞ்சை அடைத்துக் கொண்டது.

வைத்தியராக வேண்டும் என்ற கனவுகளோடு படிப்பை ஆரம்பித்து சாதாரண தரத்தில் அதிதிறமைச் சித்தி களுடன் உயர்தரத்தில் காலடி எடுத்து வைத்த சில நாட்களில் தான் அவளு டைய தாயை பெண் பார்க்கும் படலம் நடந்தேறி ஹாஷிமோடு அவள் நிச்சயிக்கப் பட்டிருந்தாள்.

தன்னுடைய கனவுக்குத் தடையாக வரப்போகும் கல்யாணத்தில் சிறிதளவும் விருப்பம் இல்லாமல் கல்வியையும் இடையில் கைவிட்டு விட்டு சரிந்து போய்க் கிடந்த அவளது தாயின் உள்ளத்தை உறவினர்கள் ஒவ்வொருவருமாக மாற்றி அமைத்து அதில் ஹாஷிம் மீதான நல்லெண்ணங்களை விதைத்தார்கள். ஒரு நல்லதுக்காக இன்னொரு நல்லதை இழந்து தான் ஆக வேண்டும் என்றால்... இது

தான் விதி என்றால் அந்த விதியை தானும் மனநிறைவோடு ஏற்றுக் கொண்டாள்... அப்பொழுது இருந்தே ஹாஷிம் தான் தன் கணவனாக வரப் போகின்றவன் என்ற திடமான நம்பிக்கையோடு நேசம் வளர்த்தாள்.

அவனும் போன பின், அவனுடைய குடும்பத்தவர்கள் அவளை அடிக்கடி வந்து பார்க்க தவறவில்லை. அவளும் அவனுக்காக எதிர்பார்ப்புக்கள் சுமந்த வாழ்வோடு காத்திருந்தாள்.

இந்தத் தூரத்து நேசத்துக்குள் மூழ்கிப்போன மஹ்ஜபினுக்கு கஷ்வினுடைய நேசம் மனத்திரையில் மின்னியது.

மனம் கஷ்வினுடைய பெயரைச் சொல்லித் துடித்தது.... அவளுக்குள்ளும் நேசம் துளிர்விடத் துவங்கியது... அப்படியே மஹ்ஜபின் தூங்கிப் போனாள்.

மறு நாள் காலை பல்கலைக்கழக வளாகத்திற்குள் கஷ்வினோடு வழமையான நண்பர் கூட்டம் கதைத்துக் கொண்டிருந்த சில வார்த்தைகள்

அவளுடைய காதில் விழுந்தது... ''டேய்.. நம்ம கஷ்வின் ஃபொரீன் போய் செட்லாவிடுவான்.. நம்மட இல்யாஸும் கனடா போறதா இருக்கான். மச்சான் பா(ர்)ட்டிய பெருசா போட்டு அசத்துறம்..''

ஒரு கணம் அவ்விடத்திலேயே நின்றுவிட்டது மஹ்ஜபினின் உள்ளம். கஷ்வின் தனது முடிவைக் கேட்காமல் அவனே ஒரு முடிவுக்கு வந்து விட்டான் போல என ஒரு விரக்தி நிலையில் தத்தளித்தாள்.

கஷ்வினுக்கு வெளிநாடு செல்வது தான் நோக்கம் என்றிருக்கையில்.., அவளுக்கு படிப்பு முடிந்ததும் தனது தாய் நாட்டில் சேவையாற்றுவது இலட்சியமாக இருந்தது.. இரண்டுக்கும் இடையில் நூலிடையிட்ட காற்றாடி போலானாள் மஹ்ஜபின்...

ஒரு சில விநாடிகளுக்குப் பிறகு ''டேய் மஹ்ஜபின் சொல்லப் போற அந்த ஒரு வார்த்தைல தான்டா என்ட மொத்த வாழ்க்கையும் இருக்கு.. அதுக்குள்ள எம்பிசனெல்லாம் எம்மாத்திரம்.''

அவள் அவனை கடந்து சென்றதன் பின்னரா இதை அவன் கூற வேண்டும் விதி விளையாட ஆரம்பித்தால் யாரால் தான் அதனை மாற்றியெழுத முடியும்

பல கேள்விகளோடும் ஒரு வித பதற்றத்தோடும் இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு படுக்கையறைக்குச் சென்றவள் சாலினியிடம் தன் மனதை முழுமையாக திறந்து கொட்டினாள்

மஹ்ஜபின் எதிலும் திடமாக முடிவெடுப்பவள். இந்த விடயத்தில் தட்டுத் தடுமாறி போவதை சாலினியால் தாங்கிக்கொள்ள முடியாமல் போனது

மறுநாள் தானே கஷ்வினிடம் சென்று ரீஸாவின் மனநிலையை கூறுவதென முடிவெடுத்துக் கொண்டாள்... ''நீ யோசிக்கிறத விடு நாளைக்கே ஒரு முடிவுக்கு வருவம்'' எனக் கூறிக் கொண்டு கட்டிலைச் சரி செய்தாள் .

ஆனால் ரீஸாவுக்கு உயிர் வதை வதைத்துக் கொண்டே இருந்தது. மறுபடியும் அந்த டயரியைத் தூக்கினாள். இந்த டயரி தான் ஏறெடுத்தும் பார்க்காத கஷ்வினை அவளது உள்ளத்துள் நுழைவித்தது. இந்த டயரி தான் தனது எண்ணத்துக்குள் மாற்றத்தைக் கொண்டு வந்தது என அவள் எண்ணிக் கொண்டிருந்த வேளை சாலினி அவளிடம் ''நான் ஒன்டு சொன்னா நீ கேப்பியா.. நாம போய் கஷ்வினுக்கிட்ட பேசிப்பாப்பமே..'' கேட்டாள்.

“இல்ல.. இதல்லாம் தேவல்ல. ஒரு நாள் வந்த எண்ணத்த இந்த ஒரு நாளோடயே குழி தோண்டி புதச்சிடுவம்.'' பழய குருடி கதவ திறடி என்றது போல் இருந்தது சாலினிக்கு.அவள்அறிந்திருந்தாள்அவனைப் போல் ஒரு நல்லவன் மஹ்ஜபினுக்கு இனி எங்கு கிடைக்கப் போகிறான். அவள் ஒரு வார்த்தை சொன்னால் அவளுக்காக அவன் இலட்சியத்தை மட்டுமல்ல எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு வருவான். என்பதையும். பற்பல தடவைகள் சாலினி ரீஸாவிடம் (மஹ்ஜபின்) சொல்லி முடித்தாள்.

அவளது தாயும் தந்தையும் நேசித்தார்கள் என்பதற்காக அவர்கள் என்ன பிரிந்தா போனார்கள் இதுவரையில் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதை மறுமுறை ஒரு

தடவை அந்த டயரியை நினைவு படுத்தும் படி சாலினி கூறி முடித்தாள். இருந்தாலும் மஹ்ஜபின் இது எதையும் கேட்கும் பாடாய் இல்லை .

அவள் தனது உள்ளத்தையும் கடந்து தனது மார்க்கத்தை நினைவு கூர்ந்தாள். இஸ்லாமிய மார்க்கத்தில் ஒரு அன்னிய ஆணும் பெண்ணும் பார்த்து காதல் கொண்டு ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டாடுவது முற்றாக தடுக்கப் பட்டிருக்கிறது. இது பாவங் களிலும் ஒன்று என அவள் அறிந்திருந்தாள். அதுபடியே அவள் இதுவரை தன் உள்ளத்தை யும் கற்பையும் கறைபடியாது பேணி வந்தாள்.

சில நொடிகளில் அவன் மீது வந்த சிறியதொரு ஈர்ப்பிற்காக தனது வரையறை களை உடைத்தெறிய முடியாது தனது கொள்கையில் நின்று தடம் மாற அவள் மனம் இடம் கொடுக்கவில்லை என்று பிடிவாதமாக அவள் சாலினியிடம் சொல்லி முடித்தாள்.

சாலினியும் இஸ்லாமிய மார்க்கத் தின் சில வரையறைகளை அறிந்து வைத்திருந்தாள். மஹ்ஜபின் சொல்வது போல் அன்னிய ஆண்களைப் பார்ப்பதும் காதல் என்று பேசுவது ஹராம் என்பது உண்மை தான். ஆனால் ஒருவருடைய விருப்பத்தைத் தெரிவிப்பது கூடும் தானே.. என சிந்தித்த சாலினி

“சரி... நீ காதலிக்கயும் வேணாம்.. கஷ்வின பார்த்து பேசயும் வேணாம்... நான் பேசுறன்.. கஷ்வினுக்கிட்ட எல்லாத்தையும் எடுத்து சொல்றன்..அவனும் உன்ன மாதிரி தான அவன்ட விருப்பத்த சொல்லிட்டு உன்ட விருப்பத்துக்காக காத்துட்டு இருக்கானே தவிர ஒங்கட மார்க்க வரையறைகள அவன் ஒரு நாளும் மீறினது இல்லயே... ஒரே ஒரு தடவ தான் அவன்ட மனசுல இருந்த விருப்பத்த உன்கிட்ட சொல்லிட்டு போனான்... அதுக்கு பிறகு அவன் ஒன்ட முகத்த பார்த்து பேசினதோ பின்னால சுத்தினதோ கிடையாது... இந்தக் காலத்துல இப்படி ஒருத்தனானு நான் கூட பல தடவ யோசிச்சிருக்கன்...”

‘‘அன்னைக்கே முடியாதுன்னு சொல்லிருந்தா எந்த பிரச்சினையும் இல்ல நிம்மதியா இருந்திருப்பேன்... எங்க என்ன சொல்ல விட்டான்... அவன் சொன்னதும் அடி வயிறு கலக்குற மாதி ஒரு உணர்வு.. பதட்டம் ஒருபக்கம் பயம் ஒருபக்கம் எல்லாமே இன்னைக்கு எனக்கு எதிரா மாறிக்கிட்டு நிக்குது பாரு ..’’

‘‘நீ எதையும் யோசிச்சு...அவசரப் பட்டு முடிவெடுக்காத...நான் அவனுக்கிட்ட சொல்லி உன்ட பேரன்ட்ஸ் கிட்ட பேசச் சொல்றன்... அவங்களும் சம்மதிப்பாங்க... நாளையோட யுனிவர்சிடி லைப் முடிய போகுது பேரன்ட்ஸ்ட சம்மதத்தோடயே மெரேஜ் பண்ணிக்கலாம்.. அத விட்டுட்டு மொத்தமா உனக்கு அமைய இருக்குற நல்ல வாழ்க்கைய வேணான்டு மட்டும் சொல்லாத... இதுக்கு உன்ட மார்க்கத்துல அனுமதி இருக்குத்தானே...’’

படபடத்த சாலினியினுடைய வார்த்தைகள் ஓய்வு பெற்றதும் ரீஸா பேச முடியாமல் மௌனியானாள்.

அவள் சொல்வதிலும் நியாயம் இருந்தது. மார்க்க வரையறைகளைத் தாண்டாமல் பெற்றோருடைய அனுமதியோடு அந்த உறவை ஹலாலாக்கிக் கொள்ள மார்க்கத்தில் அனுமதி இருக்கின்றது...

ரீஸாவும் கஷ்வினும் இது வரை ஹராமான உறவில் நுழையவில்லை... அவர்களுடைய தோற்றத்தைப் போலவே உள்ளமும் நடத்தையும் அழகாகவும் தூய்மையாகவும் இருந்தது...

அப்படியாகப்பட்ட இவர்கள் இரு வருடைய உறவும் ஹலாலாகத் தொடர்ந்தால் தான் எத்தனை அழகாய் இருக்கும்...

மார்க்க வரையறைகளை மீறாது பிரிவார்களா...? இணைவார்களா..?? இவர் களுடைய வாழ்க்கையில் இன்னும் எத்தனை சவால்களைச் சந்திக்கப் போகிறார்கள்...?

மாறிக் கொண்டிருக்கும் காலத் தோடு சேர்ந்து இவர்களும் மாறிப் போவார்களா...?

பல சுவாரஸ்யமான நிகழ்வுகளோடு

தொடரும்



# பொன்னூஞ்சல்

## தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு

சுகமாய்  சுற்றும் நினைவைச்
சொல்லி மகிழும் பொன்னூஞ்சல்
வகையாய் என்னை மடக்கி
வாசம் வீசும் பொன்னூஞ்சல்
சகமே அழகாய் எனக்குத்
சாலம் காட்டும் பொன்னூஞ்சல்
பகலும் இரவும் நகரா
பருவப் பூக்கள் பொன்னூஞ்சல்

உயிரும் வயிற்றில் வளர்ந்து
உள்ளம் மகிழும் பொன்னூஞ்சல்
வயிரும் பெரிதாய் ஆக
வளரும் குழவி பொன்னூஞ்சல்
பயிரைப் போல வளர்ந்தே
பார்க்கும் மழலை பொன்னூஞ்சல்
தயிரைக் கொட்டிப் பிள்ளை
தாவும் குறும்பு பொன்னூஞ்சல்

தத்தி நடந்து சிரிக்கும்
தங்கக் குழந்தை பொன்னூஞ்சல்
முத்தம் கேட்கத் தாயும்
முகத்தை மூடும் பொன்னூஞ்சல்
சத்தம் போடும் பிள்ளை
சாடை காட்ட ப் பொன்னூஞ்சல்
பத்து காசாய் சிதறி
பார்த்துச் சிரிக்கும் பொன்னூஞ்சல்


என்னைக் கொஞ்சம் மெல்ல
ஏதோ அசைக்கும் பொன்னூஞ்சல்
சன்னல் வழியே பெய்யும்
சாரல் மழையின் பொன்னூஞ்சல்
மண்ணில் வீழும் துளிகள்
மணக்கும் சுகமும் பொன்னூஞ்சல்
எண்ணம் மகிழ எதுவோ
என்னை ஈர்க்கும் பொன்னூஞ்சல்

கன்னம் சிவக்க காதில்
காதல் கூறும் பொன்னூஞ்சல்
கன்னி மனமும் துள்ள
கனவி லாட்டம் பொன்னூஞ்சல்
கண்கள் நோக்கி மகிழும்
காணும் கதைகள் பொன்னூஞ்சல்
பெண்ணின் உள்ளப் புதிரை
பெற்று அவிழ்த்தால் பொன்னுஞ்சல்

அருகே தாயும் இருந்தால்
அதுவே எனக்குப் பொன்னூஞ்சல்
பருகத் தேநீர் தருவார்
பார்க்கும் கவனம் பொன்னூஞ்சல்
உருகி  உடலும் வருந்த உழைக்கும்
அன்பு பொன்னூஞ்சல்
விருப்பம் நிறைவு செய்யும்
வெல்ல இனிப்பாய் பொன்னூஞ்சல்

கற்றுத் தருவார் ஆசான்
கற்கும் கல்வி பொன்னூஞ்சல்
பற்று கொண்டு படித்தால்
பாடம் நமக்குப் பொன்னூஞ்சல்
சற்று கவனம் கொண்டால்
சகலம் உனக்கே பொன்னூஞ்சல்
முற்றும் உணர்ந்துகொள்ள
முடிவும் நலமே பொன்னூஞ்சல்

எந்தன் எண்ணம் நிறைந்தால்
இதயம் மகிழும் பொன்னூஞ்சல்
சந்தக் கவிதை எனக்கே
சரியாய் வந்தால் பொன்னூஞ்சல்
பந்த மான உறவும்
பாசம் காண பொன்னுஞ்சல்
விந்தை யாக அருமை
வெற்றிச் சொல்லும் பொன்னுஞ்சல்



# சிங்களப்பாடகி ஓலு வசந்தி நேர்காணல்

இலங்கைப் பாடகர்கள் வரிசையில் தனக்கென ரசிகர்கள் கூட்டமொன்றையும் ஈர்த்தெடுத்து வலம் வரும் ஓலு வசந்தி ஒரு சிங்கள மொழிப்பாடகியாக மட்டுமல்லாமல் ஒரு ஓவியராகவும் மிளிர்கிறார். பன்முகத் திறமைகள் கொண்ட அவர், தமிழ்நெஞ்சத்துக்காக மனம் திறந்து தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் தருணம்.

வாருங்கள் ஓலு வசந்தியை அறிந்துகொள்வோம்...

நேர்கண்டவர்
வஃபீரா வஃபி

■ உங்களைப் பற்றிய அறிமுகத்துடன் நேர்காணலைஆரம்பிக்கலாம்.சொல்லுங்கள்!

● எனது சொந்த ஊர் இலங்கையின் எழில் கொஞ்சும் மலைப்பிரதேசமான கம்பளை.தாய் பத்ரா எதிரிசிங்க.தந்தை தேகிஸ் வில்சன் தசநாயக. அக்கா ஜயமாலி நிஸன்சலா. கல்வி கற்றது கம்பளை புனித ஜோஸப் மகளிர் வித்தியாலயத்தில். தொழில்ரீதியாக நான் ஒரு பாடகி. ஓவியம் வரைவதையும் தொழிலாகக் கொண்டிருக்கிறேன்.

■ இசை, ஓவியக்கலை இவற்றுடன் எந்தளவு ஈடுபாட்டுடன் இணைந்துள்ளீர்கள்?

● இதுவரை இக்கலைகளுடன் தான் பெருமளவில் என் வாழ்க்கை நகர்ந்து வந்துள்ளது. ஓவியக்கலையையும் இசையையும் நான் நிறையவே நேசிக்கிறேன். ஓவியம் வரைவதென்பது என்னைப் பொறுத்தவரை தியானமாகும். ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை சிந்தையை ஒருமுகப் படுத்துவதன் மூலமே இதற்கான சிறந்த பெறுபேறைப் பெறமுடியும். மனத்தெளிவு இதில் பிரதான பங்கு வகிக்கிறது.

■ இசைத்துறையில் உங்கள் அறிமுகம் எப்படி நிகழ்ந்தது?

● TV 1 நடத்திய 'அழகிய மனைவி' (சிங்களம்) நிகழ்ச்சிக்கான குரல் தேர்வில் கலந்து கொண்டது தான் என்னை இசைத்துறைக்குள் நுழைய வித்திட்டது. இத்தருணத்தில் அண்மையில் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திச் சென்ற சிரச தொலைக்காட்சி சேவையில் புகழ்பெற்ற சிட்னி சந்திரசேகர எனும் ஜாம்பவானை நன்றியுடன் நினைவு கூருகிறேன். அவரது ஆலோசனைகளும் அறிவுரைகளும் என்னை வளப்படுத்திக் கொள்ள பெரிதும் உதவின.புதுமுகங்களுக்கும்,மூத்தகலைஞர் களுக்கும் அவரின் வழிகாட்டுதலும் ஆலோசனைகளும் உறுதுணையாய் இருந்ததை,வரப்பிரசாதமாய் அமைந்ததை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். எதிர்காலத்திலும் அவர்கள் அவற்றைப் பின்பற்றி வழிநடப்பார்கள் என்பது என் அபிப்பிராயம்.

■ உங்கள் பொழுதுபோக்குகள்/ திறமைகள் எவை?

● புகைப்படங்கள் எடுப்பது, வாத்தியக்கருவிகள் இசைப்பது (ட்ரம்ஸ் வாசிக்கவும் கீ போட் வாசிக்கவும் தெரியும்), நடனம் ஆடுவது, பாடல் எழுதுவது என்பவற்றை பொழுதுபோக்காக கொண்டிருக்கிறேன். திரைக்கதை வசனம் எழுதுவதிலும் ஆர்வம் உள்ளதால், அது தொடர்பான கற்கைநெறியொன்றை கற்று வருகிறேன்.

■ உங்கள் கனவு / அபிலாஷைகள் பற்றி சொல்லுங்களேன்!

Dr. ப்ரதீப் ரங்காவுடன் மேடையில்...






ஓலு வசந்தியின் திறமைக்கு கிடைத்த பெருமதிப்பு விருது

ஓலு வசந்தியின் தாய்ப்பாசம் கேன்வாஸ் வண்ண ஓவியம்.



● ஆமாம்! நிறைய உண்டு. அவற்றுள் முதன்மையானது, எதிர்காலத்தில் என் போன்று திறமையுள்ள ஓவியக் கலைஞர் களுக்காக உணவகத்துடன் கூடிய ஒரு கலைக்கூடம் அமைப்பது தான். அபிலாஷைகள் எனக் குறிப்பிட விரும்புவது கோவிட் 19 ஆல் தடைப்பட்ட எனது 'வர்ஷாவ' எனும் மழை பற்றிய பாடலின் ஒளிப்பதிவை (மியூசிக் வீடியோ) செய்து முடிப்பது தான். அத்துடன் ஒலிப்பதிவு செய்யப்பட்ட என் பாடலொன்றையும் வெளியிட உத்தேசித்துள்ளேன்.

■ இலங்கையில் இசைத்துறையில் இருக்கும் திறமைசாலிகளுக்கு அவர்களுக் கான அங்கீகாரம் வழங்கப்படுவதாக நினைக்கிறீர்களா?

● ஆமாம் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் நல்ல கலைஞர்கள் தமக்கு கிடைக்கும் அங்கீகாரத்தை விட மக்களின் அன்பையே பெருத்த அங்கீகாரமாக நினைப்பார்கள். சமூக சூழல்களாலும், வேலைப்பளு காரணமாகவும் சிற்சில விடயங்களில் சிலர் கவனிக்கப்படாமலே போவதும் இங்கு விதிக்கப்படாத விதியாகவே உள்ளது.

■ உங்கள் முதல் பாடல், இதுவரை பங்களிப்பு செய்த பாடல்கள் பற்றி சொல்லுங்கள்!

● என் முதலாவது பாடல் 'சரஸ்வதி சந்திரா' என்ற சிங்கள தொலைக்காட்சி நாடகத்துக்காக பாடிய 'ரகசின் வகே ரகசின் வகே (රහසින් වගේ රහසින් වගේ) என்ற பாடலாகும். அதை இசையமைத்து என்னோடு பாடியவர் அஷான் பெர்னாண்டோ (අශාන් ප්‍රනාන්දු). அப்பாடலை எழுதியவர் மறைந்த சிட்னி சந்திரசேகர அவர்களாவார். இத்தருணத்தில் அந்த தொலைக்காட்சி சேவையின் பிரதானியாய் இருந்த புத்திக (බුද්ධික) விக்ரமாதர அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

நான் பல பாடல்கள் பாடியுள்ளேன். அவற்றுள் தொலைக்காட்சி நாடகங்களுக் கான டைட்டில் பாடல்கள், சிறுவர் காட்டூன் கதைகளுக்கான டைட்டில் பாடல்கள், தேசபக்திப் பாடல்கள் என்பன அடங்கும். மக்களின் வரவேற்பைப் பெற்ற பல பாடல்களுக்கு நான் பங்களிப்பு செய்திருக்கிறேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பெருமிதமும் கொள்கிறேன்.

■ அண்மையில் ஒரு பாடலுக்காக விருது பெற்றிருந்தீர்கள். அதைப் பற்றி கொஞ்சம் பேசலாமே!

● கோவிட் 19 தொற்று முழு உலகையேவீழ்ச்சியடைய வைத்திருந்த நேரம், மக்களுக்கு நம்பிக்கையூட்டி தெம்புடன் மீண்டு வர 'எழுந்திடுவோம் ஸ்ரீலங்கா' (නැගිටිමු ... ) எனும் ஒரு எழுச்சிப் பாடலை உருவாக்கி, இலங்கையின் முன்னணிப் பாடகர்கள் அனைவரும் இணைந்து பாடினார்கள். அதில் நானும் பங்களிப்பை வழங்கியிருந்தேன். அதில் எனக்கு மட்டுமல்லாமல் பங்கு கொண்ட அனைத்துக் கலைஞர்களுக்கும் விருது கிடைத்தது. விருதைவிட எனக்கு அதில்




முதல் பாடல் பதிவு இடம்பெற்ற ஒலிப்பதிவுக்கூடத்தில் வழி காட்டியும் ஆலோசகருமான மறைந்த ஜாம்பவான் சிட்னி சந்திரசேகரவுடன் , ஆனந்தக் கண்ணீருடன் ஓலு வசந்தி

பாடக் கிடைத்த வாய்ப்பு, விருதுக்கு அப்பாற்பட்ட ஓர் உணர்வு. எல்லோருமே ரொம்பவே லயித்து இதயபூர்வமாக ஒன்றிப் பாடிய பாடல் அது.

உண்மையில் எனக்குக் கிடைத்த உயரிய விருதாக நான் கருதுவது, மிக சுதந்திரமாக செயல்படும், தன்னடக்க மான, உயர்ந்த இரு பண்பாளர்களான கெப்பிட்டல் மஹாராஜா நிறுவனத்தின் தலைவரான ஆர். ராஜமகேந்திரன் அவர்கள் மற்றும் அந்நிறுவனத்தின் ஆலோசகராகப் பணிபுரிந்த சிட்னி சந்திரசேகர ஆசிரியர் அவர்களினதும் ஆலோசனைகளையும் ஆசிர்வாதங் களையும் பெறுமளவிற்கு நான் புண்ணியம் செய்திருக்கிறேன் என்பது தான்.

■ தமிழில் பாடியுள்ளீர்களா? பாட சந்தர்ப்பம் கிடைத்தால் ஏற்றுக் கொள்வீர்களா?



● நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்.சொந்தமெட்டில் ஒருதமிழ்ப்பாடலைப்பாடி என் கைபேசியில் பதிவு செய்து வைத்துள்ளேன். என்னை ரொம்பவே ஈர்த்த அழகிய மொழி தமிழ் என்பேன்.

■ லொக்டவுனில் என்ன செய்தீர்கள்?

● நிறைய ஓவியங்கள் வரைந்தேன். நிறைய உணவு வகைகள் சமைக்கக் கற்றுக் கொண்டேன்.

■ இலங்கையின் இசைத்துறையில் பாடகர்களுக்கிடையில் போட்டி நிலவுகிறதா? நீங்கள் எப்படி சமாளிக்கிறீர்கள்?

● போட்டியில்லாத துறைதான் ஏது? எல்லாத்துறைகளில் உள்ளவர்களும் முகம் கொடுக்கும் பிரச்சினை இது. இப்பெரும் தொற்று பாடாய்படுத்தும் இந்நேரத்தில் இவற்றைப் பேசுவது உசிதமில்லைதான். இருப்பினும் சொல்கிறேன்.எதிர்காலத்தில் இன்னும் போட்டிகள் அதிகரிக்கக்கூடிய மோசமான சூழல் உருவாகலாம்.

■ உங்கள்இலக்குகள்எவை?அவற்றை அடைந்து விட்டதாக கருதுகிறீர்களா?

● இலக்குகள் இல்லாமல் இல்லை. ஆயினும்,வாழ்க்கைநதியோட்டத்தில்சேர்ந்தே பயணப்பட்டு இதுவரை வந்திருக்கிறேன். விரும்பியோ விரும்பாமலோ, எதிர்பாராமல் வரும் அனைத்தையும் எதிர்கொண்டு, இனிவரும் வாழ்க்கையை நல்லவைகளால் பூரணப் படுத்திக் கொள்வதையே இலக்காகக் கொண்டிருக்கிறேன்.

■ உங்களால் மறக்கவே முடியாத நிகழ்வென எதைக் குறிப்பிடுவீர்கள்?

● நான் தமிழ்நெஞ்சம் இதழுக்காக தந்த புகைப்படங்களில் ஒரு கறுப்பு வெள்ளை நிழற்படமொன்று உள்ளது. ஒலிப்பதிவுக் கூடமொன்றில் என் குரலில் பாடல் பதிவான முதல்நாள் அந்த நிழற்படம் எடுக்கப்பட்டது.

அன்றைய நாளில் மனதில் பொங்கிய சந்தோஷத்தை வார்த்தைகளில் வடிக்க வியலாது. என்னை நானே நேசித்த அந்த தருணத்தை என்னால் மறக்கவே முடியாது.

■ தமிழ்நெஞ்சம் இதழைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

● உண்மையில் இந்த இதழ் பற்றி முன்பு அறிந்திருக்கவில்லை. ஆயினும் நீங்கள் சொன்ன பின்பு இணையதளம் சென்று பார்த்தேன். ஆற்றலுக்கு மொழி ஒரு தடையில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். திறமையானவர்கள் எங்கிருந் தாலும் அவர்களைக் கண்டறிந்து, அவர்களை உலகறியச் செய்யும் இதழாசிரியரின் பணி கண்டு வியந்து என் நன்றிகளையும் தெரிவிக்கிறேன். இந்தப் பத்திரிகையின் சிறப்பும் பெருமையும் இந்த நேர்காணல் மூலம், சிங்கள மொழி பேசுபவர்களையும் சென்றடையும் .

■ உங்கள் ரசிகர்களுக்காக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

● ஆரம்ப காலத்திலிருந்தே என்னை அறிந்து கொண்ட ரசிகர்கள் இன்றும் என்னுடன் இருக்கிறார்கள். அவர்களை நான் ரொம்பவே நேசிப்பதால் சொல்ல விரும்புவது, நோயற்ற வாழ்வே உயர்ந்த செல்வம் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு தொற்றுடன் கூடிய இக்காலக் கட்டத்தில், சுத்தத்தைக் கடைப்பிடித்து பத்திரமாக இருங்கள்! புதிய விடயங்களில் கவனம் செலுத்துங்கள்! காலத்தின் மற்றும் வாழ்க்கையின் பெறுமதி எம் பாதுகாப்பில் தான் தங்கியுள்ளது என்பதை மறவாதீர்கள்! எல்லோரும் பாதுகாப்பாக இருங்கள்! அனைவரும் ஆரோக்கியமாகவும் வளமாகவும் வாழ்க!

தமிழ்நெஞ்சம் ஓலு வசந்திக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது. ■

# இதயம் பிழிந்த உணர்வுகள்...

என்.எம்.அலிக்கான்
சாய்ந்தமருது

நீ கசக்கிப் பிழிந்த இதயத்தை
சக்கை நீக்கிய சாறாக்கி வைத்திருக்கிறேன் வா...
சர்க்கரை, தேன்பாகு கலந்த
அமுதபானமாய் அருந்தி, உன்
வெறியின் வேட்கையைக் குறியாக்கி
அதில் குளிர் காய்வதற்காக...

அடுத்தவன் இதயத்தைப் பிளந்து
அதனூடே படகோட்டத் துடிக்கும் பந்தயத்தில்...
நீயொரு ஹீரோ என்பதனால் தானோ?
பல ஹீரோக்கள் படையெடுக்கிறார்கள்
பின்னால்;
உனக்கு குடை பிடிப்பதற்காக!...

ஆபிரிக்க கருமேகம் கக்கிய குண்டை விடவும்
கொடிதாகிப்போன உன் இதயத்தில்
ஈரம் விகாரமாகிப்போனது எதற்காக?
நீயொரு மானிடப் பிறவி என்பதனாலா?

ஓ...நான் தெரியாமல்தான் கேட்கிறேன்;
உன் பகுத்தறிவென்ற பரம்பொருளின்
பரிசுப் பொதி மீது
நஞ்சூட்டி நாசமாக்கியது யார்?

அதனால்தானோ...அன்று நீ
துடிக்கப்பதைக்க, கத்தக்கதற, கடத்திச் சென்று
கற்பழித்து...பின்...கழுத்தறுத்து...
ஆனை பிளிரும் அவ் வனாந்தரத்தில்
தூசாய் வீசி எறிந்தபோது,
அரும்புதிரும் அவ்விள மொட்டின் அலறல்
காட்டு மிருகங்களின் கண்களையும்
குளமாக்கியதை நீ அறிய
எந்த நியாயமும் இல்லை; ஏனென்றால்...
போதை என்ற அரக்கன் உன்னுள்
புல்லாங்குழல் மீட்டியதே; புரிகிறதா?

இன்னும்...இன்னும்... எத்தனை... எத்தனை
கரும காண்டங்களை கரும்பாக்கி;
இரும்பாகிப்போன உன் இதய ஆலையில்
நீ பிழிந்த இதயங்கள் அத்தனையையும்
சக்கை நீக்கிய சாறாக்கி வைத்திருக்கிறேன், ஓ...
சவக்காலை சாமுண்டி வைரவனே; வா...வா
சர்க்கரை, தேன் கலந்த பானமாய்
அருந்தி; சுவை பார்ப்பதற்கல்ல,
சிறைச்சாலை ஊடாக உன்னை
சவக்காலைக்குள் சமாதி கட்டுவதற்காக..!

# வளர்ப்பு

**- சப்ரா**

அலங்கார இருக்கைகள் அதிதிகளாலும் பார்வையாளர்களாலும் நிறைந்திருக்க, வழமையை விட அன்றைக்கு அதிகமாகவே பிரகாசித்தது அந்த அரங்கம்.

கொழும்பு இந்து பெண்கள் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதற்காகவே இந்த ஏற்பாடு வெகு விமர்சையாக செய்யப் பட்டிருந்தது.

வண்ண பலூன்களாலும் பெரிய பெரிய திரைச்சீலைகளைக் கொண்டும் மேடை அலங்கரிக்கப்பட்டிருக்க, "நான் ஒரு மீட்டிங்ல இருக்கேன். முடிந்ததும் அழைக்கிறேன்" என்றவாறு தொலை பேசியுடன் ஆசிரியை உமா

ஒரு புறம் நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்குவதில் அதி உச்ச கவனம் செலுத்திக் கொண்டிருந்த கல்லூரியின் தமிழ் பாட ஆசிரியரான பிரபா தன் கையில் நிகழ்ச்சி நிரலுடன் மறு புறமும் மின்விசிறிகள் வேகமாக சுழன்ற போதும் அடிக்கும் வெயிலுக்கு அவற்றிலிருந்தே சூடு வெளியேறுவதனை உணர்ந்த பலர் வெகு சிரமப்பட்டு தம்மை சாதாரணமாக காட்ட முயற்சித்தும் கொண்டிருக்க ஒரு சில இளவயது வருகையாளர்கள் தாம் சிரமப்பட்டு தயாராகி வந்த அலங்காரமெல்லாம் உஷ்ணத்தோடு உஷ்ணமாக உருகி விடுகிறதே எனும் அங்கலாய்ப்பில் தவிக்க,

"அடுத்து எமது ஆனந்தா கல்லூரியின் பிரதம அதிபர், சுமார் 35 வருடங்களாக எமது பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர், தன் சிறந்த பேச்சால் அனைவரையும் ஈர்க்கக்கூடிய போதைவஸ்து தடுப்பு அதிகாரியாக பகுதிநேரத்தில் தொழிலாற்றிக் கொண்டிருக்கும் எமது கௌரவ ஆசிரியர் சந்தோஷ் அவர்களை அன்போடு சிறப்புரை ஆற்ற மேடைக்கு பணிவன்புடன் அழைக்கின்றேன்."அரங்கத்தின் கைத்தட்டல்களின் எதிரொலி ஓயும் முன்னர் மிக கம்பீரமாக மேடை மீதேறிய சந்தோஷ் பேச ஆரம்பித்தார்.

"எனது மதிப்பிற்கும் கௌரவத்துக்குமுரிய இந்த கல்லூரியின் அதிபர் அவர்களே..." அவரது விளித்தலிலேயே அனைவரும் அவரது பேச்சுக்குள் உள்வாங்கப்பட, "தற்காலத்திற்கு ஏற்ற தலைப்பில் பேச வேண்டுமெனில் போதைப் பொருள் பாவனையை பற்றி பேசுவதை நான் இவ்வேளையில் மிகப் பொருத் தமாகக் காண்கிறேன்.

இதனைப் பற்றி பேசப் போனால் சில மணி நேரங்களை மட்டும் இதற்காக ஒதுக்கி போதாது. இந்த சமூகத்தில் இளம் வயதினரை மட்டுமன்றி வயது வந்தவர்களையும் தன்னுடைய அடிமையாக்கி வைத்திருக்கின்றது இந்த போதைப் பொருட்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக நான் கூறுவது பெற்றோரின் கண்டிப்பற்ற வளர்ப்பைத் தான்"

அனைவரது உள்ளத்தையும் தொடும் விதமாக நீண்டது சந்தோஷின் உரை..

அதன் நேரடி ஒளிபரப்பு சமூக வலைதளங்களில் பலரது பாராட்டுகளுடனான பார்வைக்குள் உள்வாங்கப் பட்டுக் கொண்டிருந்தது வழமை போன்றே. "அம்மா ஒரு காஃபி.." சோபாவில் தூங்கியவாறு குரல் கொடுத்தான் வினோத்.

"காஃபி குடிக்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். அப்பா என்னமோ நிகழ்ச்சி செய்றது பற்றி சொன்னாரே பார்த்தியா?" சந்தியா.

"ஆ.. ஆமாம்மா.. அதெல்லாம் ஆச்சு" வினோத்.

"நான் பார்க்கும் நேரமெல்லாம் வெட்டியாத் தானே இருந்தான். எப்ப பார்த்திருப்பான்?

"ஒரு வேளை பார்த்திருப்பான் போல.." தனக்குள் பேசியவாறே நகர்ந்தாள் சந்தியா..

''பகலைக்கு என்ன சமைக்கட்டும் வினோத்? சமையலறையிலிருந்து வந்த சந்தியாவின் குரலை காதில் வாங்கிக் கொள்ளாது தொலைபேசியில் மூழ்கியிருந்தவன் மீது கோபம் ஏற்பட, «ஒன்ன தானே கேட்கறேன்» என்றவாறு அவனது மண்டையில் இரண்டு குட்டுக் களை வைக்க வந்தவளிடம், ''இன்னைக்கு தனி வெஜிடபிள் சமச்சிடு சந்தி...'' சந்தோஷ்.

''வாங்க.. வந்துட்டீங்களா? போன விஷயம் என்ன ஆச்சு? நல்லபடியா பேசினீங்களா?'' கண்களில் ஒருவித காதலுடன் அவளைப் பார்த்தவர், ''என்னை விட என் மனைவிக்கு தான் என் மீது அக்கறை அதிகம்'' என்றவாறு அவள் தோளைத் தட்டிவிட, ''எப்பவுமே உங்களுக்கு நக்கல் தான்'' நகர்ந்தாள் சந்தியா.

''ஏய் பைய்யா அப்பா பேசினது எப்படியிருந்தது?''

சட்டை காலரை உயர்த்திய படி சந்தோஷ். ''சும்மா அரங்கமே அதிர்ந்த தேப்பா'' இனிமே எவனுக்கும் இந்த கஞ்சா ஹெரோயின் மீதெல்லாம் ஆசையே வராது என்று நினைக்கிறேன் நீங்கள் தெறிக்க விட்ட வேகத்தில்..'' அப்பா மகனின் சிரிப்பொலி சமையலறை யிலிருந்த சந்தியாவையும் கூடவே சிரிக்க வைத்தது.

''ஐயா ஐயா... சந்தோஷ் ஐயா''

வாசற் பக்கமிருந்துஒரு குரல் கேட்க, ''அப்பா யாரோ உங்க கஸ்டமர் போலிருக்கே?'' வினோத்.

''யாராக இருந்தாலும் வீடு தேடி வந்தவங்க. வாங்க உள்ளே.உக்காருங்க'' சந்தோஷ் காட்டிய கதிரையில் வந்தமர்ந் தார் அந்த பெரியவர்.

அவரது கண்கள் எதையோ கூற முற்பட்ட, ''சொல்லுங்க என்ன விஷயம்?''சந்தோஷ்.

''ஐயா இன்னைக்கு உங்க பேச்ச நானும் பாடசாலையில கேட்டேன். உண்மையிலேயே கட்டாயம் சமூகத்திற்கு எத்தி வைக்க வேண்டிய விஷயம்''

''சரிங்கய்யா நன்றி. நீங்க சொல்ல வந்த விஷயத்தை அவசரமாக சொல்லுங்க'' அவசரப் படுத்தினார் அவர்.

''என் பையன் பெயர் பிரகாஷ். 24 வயசாகுது. ரொம்ப நல்லா படித்துக் கொண்டிருந்தான். திடீரென அவனோட நடவடிக்கையில மாற்றத்தை கண்டேன். யாரோ ஒரு பொறம்போக்கு கூட சேர்ந்து இவனும் இந்த போதைவஸ்துக்கு பழக்கப் பட்டிருக்கான்''

அவரை மேலும் பேச விடாது தடுத்த சந்தோஷ், ''அதெல்லாம் சரி.. ஆனா இதெல்லாம் எப்பவோ கண்டுபிடிச்சிருக்க வேண்டிய விஷயம். நீங்க தானே புள்ள யாரோட பழகுறான் என்றதுல கவனமாக இருந்திருக்கனும். எல்லாம் கைமீறிப் போன பின் இப்படி வந்து பொலம்பி என்ன பயன்? அதெல்லாம் ஆரம்பத்திலேயே கண்டித்து வைக்கணும்''

ஒரு சில இலவச ஆலோசனை களுடன் அவரை அனுப்பி வைத்த சந்தோஷுக்கும் தன் மகனது வளர்ச்சியை நினைத்து பெரும் மகிழ்ச்சி தான்.

என்னதான் சந்தியாவின் பங்க ளிப்பு பெருமளவிற்கு இருந்தபோதும் தன் கண்டிப்புடனான வளர்ப்பு தான் இதற்கெல்லாம் காரணம் என நினைத்த வாறு வீட்டுத் தோட்டத்தில் வழமையான நடையை தொடர வெளியேறிவருக்கு மீண்டும் தென்பட்டார் சற்று முன்னர் விடைபெற்ற அதே பெரியவர்.

''என்னங்க?'' சந்தோஷ்.

''ப்ரகாஷோட இருக்கிற அந்த பையனோட பெயர் வினோத் என்னமோ தான். இப்பதான் நினைவு வந்துச்சு. இவனுங்க எல்லாம் எங்க நல்லா இருக்க போறானுங்க''

பெருமூச்சுடன் நடந்தார் பெரியவர் வினித் என்ற பெயரை மாற்றி சொல்லி விட்டோம் என்ற உணர்வேயில்லாமல்..

''ப்ரகாஷ் நீ என்ட ஃப்ரண்ட் என்றதால சொல்றேன். தயவு செய்து வினித் கூட பழகாத.. அவனோட சேர்ந்து நீயும் கெட்டுப் போறடா.''

காற்றிலே கரைந்தது வினோத்தின் குரல்...

■

# நினைவுகளோடு

என் ஆசை மகளே---
தூர தேசத்திலிருந்து
உன் மாறா நினைவுகளோடு
கவிதையால் உன்னை
ஆராதிக்கிறேன்---!

உன்னைக் காணத்துடிக்கும்
நல்ல நாளை
நினைத்தவனாய்--!
கனவுகளோடு எத்தனை நாள்
என்னால் வாழ முடியும்.

உன் புன்னகையை
புன் சிரிப்பை
அள்ளிக் கொஞ்சி
அணைத்திட வேண்டும்
ஆரத்தழுவி மகிழ்ந்திட வேண்டும்--'!

நீ உலகில்
வந்துதித்தபோது
நான் அங்கு அருகிலில்லை
படத்தில்
உன்னழகைப் பார்த்து
பனித்தன என் கண்கள்!
யாரிடம் சொல்லியழ...

வாழ்வில் உறவும் பிரிவும்
இரண்டறக் கலந்ததுதான்
இருந்தும் பிரிவென்பதை
தவிப்பவர்களால்தானே
உணர முடியும்!

விரைவில் பறந்து வருவேன்
உனைக்காக - அதுவரை
பொறுத்திடு மகளே...

ஏ.ஆர்.இஸ்மத்
பொத்துவில்.



# பள்ளிக்கால

சிறகடிக்கும்
பட்டாம்பூச்சியாய்
பதின்மப் பருவம்! நம்
பள்ளிப் பருவம்!

பசுமையான நினைவுகள்
என்றாலே அனைவருக்கும்
கொசுவத்திச்சுருள் சுழன்று
பின்னோக்கிச் சென்று
கால இயந்திரம் நிற்பது
பள்ளிப் பருவத்திலே
ஒல்லி உருவத்திலே

முழு நெல்லியை வாயிலே
உருட்டி குழாய்நீரை குடித்ததை
இப்போது நினைக்கையிலும்
நெஞ்சம் இனிக்கிறது

கண்டிப்பான
கணக்கு வாத்தியார்
உடலில் அட்சரேகை
தீர்க்கரேகைக் கோடுகளை
பிரம்பால் எழுதியது
மறக்க இயலாத வரலாறு

அன்றைய தள்ளுவண்டி குச்சி ஐஸ்
சேமியா ஐஸுக்கு ஈடாவதில்லை
இன்றைய ஹைபாக்கோக்கள்

பொக்கைவாய் கிழவி
தரும் எலந்தம் பழத்தில்
கூடுதலாக
ஒட்டிக் கொண்டிருக்கும் அன்பு
உயர்தர காய்கறிப்பழ அங்காடிகளில்
தேடினாலும் கிடைக்காதது

மதிய உணவு பாத்திரத்தை
கழுவிக் கொண்டு போவதை
இன்று வரை
கடைபிடிக்கக் காரணமாக இருந்தது
அடுத்த பெஞ்ச் அன்பரசு
அடித்துச் சொன்னது

# நினைவுகள்!

-பா.சிவகுமார்
சென்னை, இந்தியா



உருண்டு பிரண்டு
விளையாடுவதில்
வெள்ளைச் சட்டை
அழுக்காகும் அடர்
பழுப்பாகும்
அடித்து வெளுப்பாள் அம்மா
சட்டையோடு என்னையும்

பேச்சு மிகமிக அதிகமென
கரும்பலகையில் தினம்
பெயர் பொறிக்கப்பட்ட நான்
திருமணத்திற்கு பிறகு
பேச்சுரிமை இழந்தது
ஆகப்பெரும் சோகம்

நமக்கு தெரியாமல்
தினமும் கீழடி அகழாய்வுகள்
நடைபெறும்
மதியவுணவுக் கலன்களில்

வீட்டுப் பாடம்
செய்யாத நாட்களில்
மனமுருக வேண்டிக் கொள்வேன்
மழையோ;
ஆசிரியருக்கு காய்ச்சலோ
வரவேண்டுமென்று

நாற்பது ரூபாய் பள்ளிக் கட்டணம்
செலுத்த இயலாமல்
நாற்பது நாட்கள் வகுப்பறை வெளியே
நின்ற வலியெதுவும்
நாற்பதாயிரம் கட்டி
மழலையர் பள்ளியில் படிக்கும்
என் மகனுக்கு
எப்பொழுதும் புரிய போவதில்லை

எத்தனை எத்தனை
நினைவுகள்!
அத்தனையும் அற்புத
நிகழ்வுகள்!

ஒவ்வொருவருக்குள்ளும்
பசுமையாகப்
புதைந்துள்ளன
ஒவ்வொருவிதமான
பள்ளிப் பருவ நினைவுகள்!

## நீளும் கரம்



விழி நனையும் இருளில்
துயர் துடைக்கும் உன் கரம்
தேடி என் கரமும் நீளுதே....!!!!

- ச. இராஜ்குமார்

# உயிரற்ற கவிதை நான்

புதிதாய் படைக்கப்படும்  எதுவுமே
பொலிவுடன்  இல்லையென - அடிக்கடி
உருக்குலைந்து போகிறேன்.

எதுகை மோனையென
எதுவுமே கைகூடவில்லை எனக்கு,
இப்போதெல்லாம் வெறுமையின்
வண்ணங்களே  எடுப்பாக...

வறுமை தின்று  வலிமை குன்றிய
தூரிகை மட்டும் தினமும்
என் கிறுக்கல்களைக்  கண்டதும்
இறுக்கமான தன் உதடுகள் விரிய
பல்லிளித்துச் சிரிக்கின்றது.

மொழியின் தேவதை இவள்,
மூக்கும் முளியும்
செப்பமில்லையென - இருந்தும்
போக்கிடம் வேறில்லையென
கட்டுகட்டாய்  தாள்களை
அடுக்கிப்  பார்க்கிறேன்

கனவு காணாதே
கவிஞன் நீயில்லையென
காலம் என்னைப்  புறம் தள்ளி
அழித்துவிட எண்ணுகிறது.

ஒத்துக் கொள்கிறேன்

களைத்துப் போன
என் நா வறண்ட வார்த்தைகள்
எழுந்து நிற்க வலிமையின்றி
இன்றோ நாளையோவென
இறப்பை நோக்க

எஞ்சியிருக்கும்
என் பலவீன  எதிரொலிகள்
கைகால்கள் பிணைக்கப்பட்டு
வாழ்க்கை கனவென ஓடி
கற்பனை நெரிசலில்
தொலைந்து போய்த் தடுமாற
உயிரற்ற கவிதை நான்
எழுத்துக்களை எடுத்தெடுத்து
அணிந்து பார்க்கிறேன்  -  எங்கே
நான்  தொலைத்த
நடையழகின் உயிர்ப்பென
குறிப்புக்கள் எடுத்தபடி

வானம்பாடி ரூஜா
நிந்தவூர்.

நூல் மதிப்புரை

வஃபீரா வஃபி




# அழகின் எல்லை அங்கோர்வாட்!

முனைவர், கவிஞர், ஆசிரியர் எனப் பன்முக சிறப்பினைப் பெற்று, பற்பல விருதுகளைத் தனதாக்கிய கவிஞர் ஓசூர் மணிமேகலை, ஏற்கனவே இலங்கைப் பயணக் கட்டுரையும் எழுதியிருக்கிறார்.

ஒரு பயணக்கட்டுரை என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரணம் இந்நூல். ரத்தினச் சுருக்கமாய் இயல்களுக்கு அழகாய் தலைப்பிட்டு வாசிக்கும் ஆவலை அதிகப்படுத்தியுள்ள இவர், அங்கோர்வாட் கோயிலின் வரலாற்றுச் சிறப்புகளைச் சொல்வதிலாகட்டும், அந்நாட்டு மக்கட் பண்புகளை அவர்களின் விருந்தோம்பல் பாங்கினை விவரிப்பதிலாகட்டும் தன் பாணியில் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

தாமரை உணவகத்தில் வழங்கப்பட்ட ஊர் சமையலை விவரித்த விதமே நாவின் சுவையரும்புகளைக் கிள்ளி எம்மையும் விருந்துக்கழைத்தது. எமக்கு ஒவ்வாத உணவாக இருந்தாலும் மற்றவர்களின் உணவுப் பழக்கங்களையும் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென உணர்ந்து கொண்டதை பகிர்ந்ததில் அவரின் பெருந்தன்மை புரிந்தது மட்டுமல்ல எமக்கும் பாடம் கற்றுக் கொடுத்தது.

அங்கோர்வாட்டில் நடைபெற்ற உலகத்தமிழ் கவிஞர்கள் மாநாடு மற்றும் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி விளக்கிய விதமும் எம்மையும் அங்கு பார்வையாளராய் அமர வைத்து ரசித்திருக்க, இவ்விழாவில் ஔவையார் விருதும் இவர் கைசேர்ந்து பெருமிதம் கொண்டது. நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியது மட்டுமல்லாமல், கலாச்சாரம் மற்றும் நுண்கலைத்துறை இயக்குனர் மோர்ன் சோயிப் விருதுகள் வழங்கி சிறப்புரையாற்ற, அதன் சாராம்சத்தை ஆங்கிலத்தில் அழகுற விளக்கி கெமர் மொழியில் நன்றி சொல்லி பலத்த கரகோஷத்தைப் பாராட்டாகப் பெற்றதையும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்கோர்வாட் கோயில் செல்லும் வழி மற்றும் கோயிலின் சிறப்பு என்பன அவரின் வரிகளில் முப்பரிமாண வடிவம் பெற வாசித்த யாவரும் கோயிலைத் தரிசித்து வந்தோம் என்று சொன்னால் மிகையாகாது. அப்படி உயிரோட்டமான விளக்கங்கள் நூல் முழுவதும் விரவிக் கிடந்தன.

தலை வெட்டப்பட்ட பல சிலைகளை கண்ணுற்றதாகக் கவலையுடன் குறிப்பிட்ட அவர் «கை முத்திரைகளையும் உட்கார்ந்திருந்த நிலைகளையும் பாரத்தால்,இந்துக் கடவுள் விஷ்ணு போலவும் தெரிகிறது.அரசியல், இனப்போராட்டம் ஆண்டவனின் முகத்தை மட்டுமல்ல முகவரியையும் கூட மாற்றி விடும் போலும்» என்று சொல்லியிருப்பது அக்காட்சியின் பாதிப்பு மனதில் ஆதிக்கம் செலுத்துவதன் வெளிப்பாடாகவும், அவரின் மன ஆதங்கத்தைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

அங்கோர்வாட் நாட்டின் மற்றொரு சிறப்பம்சம் அதிகாலை சூரிய உதயமென குறிப்பிட்டுள்ளார். கதிரவன் ஒளி, கோயில் சுவர்களில் பட்டுத் தெறிக்குமழகை ரசிக்கவென உலகமக்கள் இங்கு திரளுவதையும் தம் எழுத்துகளில் வடித்திருப்பது, வாசிப்போரையும் வா வாவென இருகரங்கள் நீட்டி வரவேற்கிறது.

முகச்சிற்பங்கள் நிறைந்த பேயோன் கோயிலின் அழகுடன், சிற்பமொன்றின் மூக்கோடு தம் மூக்குரசும் விதமாக புகைப்படமெடுத்துக் கொண்டதும் இன்னுமொரு சிறப்பு!

( படகுவீட்டில் பாசப்பலகாரம் பற்றிய அவரின் விவரிப்பு என்னையும் செய்முறை தேடி செய்துண்ண வைத்தது. உண்மையில் அப்பயணக் கட்டுரையில் சொன்னதைப் போலவே மிக அற்புதமான சுவையாக இருந்ததையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்)

பயணம் முழுக்க சிறுபிள்ளை போன்ற இவரின் உற்சாகம், வாசகரையும் தானாக தொற்றிக் கொள்ளும்..

நினைவில் இனிமை தாய்லாந்து சுவர்ணபூமி விமானநிலையமும், பட்டாயா கடற்கரையும், ஸ்டோன் ஃபாரஸ்ட்டும் டைனோசர் Valleyயும், புத்தர் ஆலயமும், ஸஃபாரி வேர்ல்ட் டும் கண்முன் காட்சிகளாய் விரிந்து வாசிப்போரை வழிநடத்தின.

அழகிய காட்சிகளை புகைப்படக் கருவியிலும் அழகிய பயணத்தின் அனுபவங்களை நெஞ்சிலும் சுமந்தபடி ஊர் வந்து சேர்ந்த பிறகு, தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுகவென தன் கைவண்ணத்தில் திறம்பட விவரித்து நூலில் கோர்த்து அங்கு எடுத்த வண்ணப் படங்களையும் சேர்த்திருப்பது பார்க்காதவர்களையும் தூண்டி,அந்நாடுகளுக்குப் பயணிக்க வைத்துவிடுமென நினைக்கிறேன்.

பயணத் தொடக்கம் முதல் முடிவு வரை, குறைந்த செலவில் வாசகரையும் அவருடன் சேர்ந்தே பயணிக்க வைத்த பெருமை, இவரின் எழுத்துகளில் புதைந்து கிடக்கும் விந்தையைக் காணலாம். இவரின் இலக்கிய பயணம் இனிதே தொடர எனது நல்வாழ்த்துகள்!

நூல் தேவைகளுக்கு ...

e-mail : manimekalai.rajan@gmail.com
கைபேசி : +91 9677520336



# எனக்கான எல்லை

உன் முத்தங்களை
எல்லாம் சேமித்து
வைக்கிறேன்
ஆறுதல்களாக !

நான் நானாக
இருந்திட...
எனக்குள் நானே
தொலைந்து போகிறேன் !

பகிர வந்த
ஆசையெல்லாம்
எட்டி நிற்கிறது
உன் கோபத்தில் !

நாணத்தால்
நான் நாணலைப்போல்
வளைந்தாலும்
உன் திமிர் கொண்ட
தீண்டலில்
உறைந்து போகிறேன் !

நீ மட்டுமே அறிந்த
வேறெவரும் அறிந்திராத
எனக்கான எல்லைக்குள்
இருந்து ரசிக்கிறேன்
உனக்கான எல்லையை !

**ரத்னா**
திருநெல்வேலி

# எங்கே மனிதம்?

குருதி சொட்ட குற்றுயிராய்
கிடக்கிறான் குருடனொருவன்
சாடைக்கண்ணாலே பார்த்துகொண்டு
சாலை கடக்கிறாளொருத்தி

பிய்ந்த சேலையுடனொருத்தி
பிழைப்புத் தேடியலைகையில்
பிழையாய் பேசி
பிடித்திழுக்கிறானொருவன்

இதமாய் இருந்தவுலகில் இனமென
இம்சை செய்கிறான்
அகிம்சையின் ஆயுசுக்கும்
அவஸ்தைகொடுக்கிறான்
அரக்கனொருவன்

கற்பை கடித்துப்பிய்க்கிறான்
காமுகனொருவன்
காசையும் அள்ளியெறிய
காவலனும் கரைந்துவிடுகிறான்

பசியாற்றிட பழஞ்சோற்றுக்கே
பாடாய் உள்ளதென
படைத்தவன் மறந்து
பச்சிளம் கருவை
கசக்கியெறிகிறாள் கல்நெஞ்சுக்காரி

அரை உயிராய் அடித்துப்புதைத்திட்ட
நீதத்தை அழைத்திட்டு
அங்கேயே நிற்கிறானொருவன்
மனிதம் மக்கிவிட்டது
மறுத்துப்பேசிய நீதத்தையும்
மாய்த்துவிட்டனர் இனியதற்கு
மறுவார்த்தையுமில்லை
மறுவாழ்க்கையுமில்லை
என்கிறான் மற்றுமொருவன்

அந்தோ ...
மரணச்சேதி கேட்கிறது
ஆமாம் மனிதம் மக்கித்தான் போய்விட்டது

**இஷாதா முஹம்மத்**
ஏரூர் கவிமொழி

# தூய்மைத் திட்டத்தின் முன்னோடி!



## முனைவர் பா.சக்திவேல்

தூய்மை இந்தியா திட்டம் இன்றைக்கு நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு, எங்கும் தூய்மை, எதிலும் தூய்மை வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் முன்னோடியாக 7ம் நூற்றாண்டிலேயே தமிழகம் விளங்கியிருக்கிறது என்பது பக்தி இலக்கியங்கள் வழங்கும் செய்தி.

சைவ சமயத்தின் சத்தாகவும், வித்தாகவும் விளங்கும் நால்வருள், மருள் நீக்கியராகப் பிறந்து, தருமசேனராக மாறி, திருநாவுக்கரசராக திருநாமம் சூட்டப்பெற்று, அப்பராக தலங்கள்தோறும் பிரவேசித்து தமிழோடு, இறைபக்தியையும், தன்னம்பிக்கை சிந்தனைகளையும், உலக சமத்துவ நோக்கையும் சென்ற இடமெங்கும் விதைத்தவர், தூய்மையின் நாயகனாக நறுமணம் பரப்பினார். இசைக் கருவிகளையும், தாள வாத்தியங்களையும், மலர்களையும் ஏனையோர் திருக்கரத்தில் தாங்கி நிற்க, உழவாரப்படை கைக்கொண்டு காட்சி தரும் சமூக சேவகராய் திருநாவுக்கரசர்.

பூசிக்கும் இடத்தையும், இறை சுவாசிக்கும் இடத்தையும் நேசிக்க விரும்புவோர் புனிதத்தையும் தூய்மையையும் முன்னிறுத்தி வழிபட வேண்டும் என்பதை கோட்பாடாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றியவர். அந்தகாலத்தில் மக்களின் நடமாட்டம் அதிகம் இருந்த, ஊரின் மையப் பகுதியாக விளங்கிய ஒவ்வொரு ஆலயத்திலும், திருவலகுக் கொண்டு பெருக்கி, வெளிச் சுற்று, உள்சுற்று பகுதிகளில் முளைத்த முற்செடிகளையும், கோரைப்புற்களையும் உழவாரத்தால் அகற்றி சீர்மையும் செம்மையும் கொண்டு திருவோடு திகழச் செய்வதையே தெய்வத்தொண்டாக எண்ணி புரிந்தவர் திருநாவுக்கரசர். தமிழக நில எல்லையை தாண்டியும் ஆயிரக்கணக்கான ஆலயங்களில் கைத்தொண்டு புரிந்த, எல்லை தாண்டிய தொண்டர். கயிலை காட்சிக்குப் பிறகும் உழவார பணியாற்றியவர். திருமருகல் அருகே உள்ள திருப்புகலூரில், மண்ணுலகில் அவரின் கடைசி தருணங்களிலும் ஓயாது தொண்டு புரிந்தவர்.

> “நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
> நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
> புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
> பூமாலைப் புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடி”

என்ற திருவாரூர்ப் பதிகம் மூலம் தூய்மையான இடம் தொழுவதற்கான இடமாகும் என்பதை உலகோர்க்கு பிரகடனம் செய்கிறார்.

திருநாவுக்கரசரின் இத்தகைய பணிக்கு அணி செய்தவர் அவருடைய சகோதரியார் திலகவதியார் ஆவார். நிச்சயிக்கப்பட்ட கணவர் போர்க்களத்தில் வீரமரணம் எய்தியதைத் தொடர்ந்து இறைத் தொண்டில் ஈடுபட்டு வந்தார். கெடில நதிக்கரையில் திருவதிகைத் தலத்தில் திருமடம் அமைத்து ஆலயத்தை தூய்மை செய்தல், அலகிடுதல், மெழுகுதல் போன்ற திருப்பணிகளை தினம்தோறும் செய்வதை வாழ்நாளின் திருப்பயனாக எண்ணி புரிந்தார்.

''காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்''
- - - - - - - - - - -
''புலர்வதன் முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு''
- திருத்தொண்டர்புராணம்

பின்னாளில் சூலை நோயோடு தம்மை சந்தித்த திருநாவுக்கரசருக்கு இதே நெறியை போதித்து எண்திசைகளுக்கும் இந்தப்பணியை எடுத்துச் செல்ல முழுமுதற்காரணமாக இருந்தவர். இன்றைக்கு கங்கையை சுத்தம் செய்தல், சரஸ்வதியை தேடுதல், காசியைத் தூய்மை செய்தல், திருக்கோவிலில் உள்ள நீர்நிலைகளை தூர்வாருதல் போன்ற திட்டப்பணிகள் முழு வீச்சில் நடைபெறுகிறது. இவைகளுக்கு தோற்றுவாயாக இருந்த ஒப்பற்ற சமூக சேவகராகிய அப்பரை, திருத்தொண்டுக்கு ஏற்றார் போல வடிவமைத்ததில் அவருடைய தமக்கையார் திலகவாதியாரின் முயற்சி முழுமுதலானது. இந்த நூற்றாண்டின் அரசாங்க திட்டமான தூய்மை இந்தியாவின் துவக்கப்புள்ளியாக 13 நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திலகவாதியாரும் அவர் மூலம் திருநாவுக்கரசரும் ஆற்றிய பணி அளப்பரும் பணியாகும் என்பது எல்லோரும் தெளிதல் வேண்டும். ■

## ஹைக்கூ

விலைவாசி உயர்வு
தாராளமாகக் கிடைக்கிறது
தலைவர்களுக்கு ஏச்சு

கரங்களைச் சேர்ந்தும்
தொலைவாயிருக்கின்றது
நிகழ்நிலைக் கல்வி

நாடு முடக்கம்
காலியாக இருக்கின்றது
அப்பாவின் சட்டைப்பை

தொற்று இல்லை
தனிமைப்படுத்தலில்
நிலா

கொரோனா பரவல்
மலிவாகி விட்டது
மனித உயிர்

நாடு முடக்கம்
இனி சுமையில்லை
புத்தகப்பை

- மக்கொனையூராள்

## தமிழ்நெஞ்சத்திற்கு...
# மடல்

Very nice cover page. Excellent magazine

Kalaiarasi Thirunavukkarasu

தமிழ்நெஞ்சம் பத்திரிகையை தொடர்பு கொள்வதையிட்டு மனமகிழ்கிறேன். உங்கள் பத்திரிகையின் ஆழமான வாசகி நான்... இப்பத்திரிகையில் நானும் ஆக்கங்கள் பிரசுரிப்பதாயின் என்ன செய்ய வேண்டும் என்ற ஒரு விளக்கம் தர முடியுமா?

Sheefa Ibraheem

தமிழ்நெஞ்சம் வாசகராக மட்டுமல்லாது, இதழில் எழுதுவதையும் விரும்பும் வாசகியை / எழுத்தாளரை வரவேற்கிறோம், தங்களின் சொற்களஞ்சிய கதை, க்விதை, கட்டுரை, துணுக்கு, சிரிப்பு மற்றும் எந்த வடிவத்திலேனும் எழுதி எமக்கு மின்னஞ்சலில் அனுப்புதல் வேண்டும். சிறப்பானவைகள் இதழில் இடம்பெறச் செய்வோம். நன்றி!ஆக்கங்களை விரைந்து அனுப்பவும். நன்றி!

ஆ-ர்

திருமண விருந்து ஒரு சிறுகதைக்கான இலக்கணம் பொருந்தியுள்ளது. கதை நகர்த்தும் விதமும் சிறப்பு.கரு இன்றைய அவசிய்த்திற்கான ஒன்று. வாழ்த்துகள்.பாவலர் இராமவேல் முருகன் கதாசிரியராக பயணிக்கத் தக்க தகுதி மிகுதியாக பெற்றுள்ளது பெருமைக்குரியது.

கவிஞர் பொன்மணிதாசன்

அருமையான வடிவமைப்பில் எப்போதும் போல் அசத்தலாய் ஜொலிக்கிறது.

கவிஞர் அனுராஜ்

நேர்த்தியான வடிவமைப்பு

பரணி சுப சேகர்

எண்ணற்ற கவிஞர்களுக்கு ஏற்றம் தரும் திண்ணை / தமிழ்நெஞ்சத்தின் ஹைக்கூ திண்ணை..

சாரதா K. சந்தோஷ்

நல்ல பேட்டி, இலக்கியத் கட்டுரை படித்து முடித்த திருப்தி... வள்ளியும் வரதரும் வாழ்க தமிழ்நெஞ்சம் சிறக்க வாழ்த்துகள்!

சங்கரபாண்டியன். G

மஹ்ஜபின் அழகாக நகர்கிறது. நிலாத்தோழி சிறப்பாக தொடரை செலுத்தட்டும்.

சோலைமலரன், மயிலாடுதுறை

முதன் முதலாக தமிழ்நெஞ்சம் / எனும் தமிழ் களஞ்சியத்தை முகநூலில் வாசிக்க வாய்ப்பு கிடைத்தது. மிக்க நன்றி, இதழில் வெளிவந்த அத்தனையும், தமிழ் அமுதூட்டிய தேன் கிண்ணம்.. வாசிக்க வாசிக்க இனித்தது..! அருமை... சிறப்பு..

ராமதாஸ்

செப்டெம்பர் மாத தமிழ்நெஞ்சம் இதழானது நிறைய பக்கங்களுடன் பயனுள்ள ஆக்கங்களுடன் மனதுக்கு நிறைவாக இருந்தது. கதைகள் அனைத்தும் ஏதாவதொரு படிப்பினையை தந்தது சிறப்பு. கோ.லீலாவின் 'பூரண பொற்குடம்' நூல் மதிப்புரையை வெகுவாக ரசித்தேன்.
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் அமின் வீட்டுத் திருமண அறிவித்தலும் திருமண புகைப்படமும் மற்றும் வாழ்த்துக் கவிதைகளும் மகுடமாய் இதழுக்கு சிறப்பு சேர்த்தன. இதழின் தரம் முதல்தரமாக உள்ளது.தொடரட்டும் உங்கள் தமிழின் சேவை!

இளமாறன், விருத்தகிரி

கடந்த இதழின் அத்தனை அம்சங்களும் தனி அழகுடன் மிளிர்ந்து, இதழுக்குப் பெருமை சேர்த்தன. எழுதிய படைப்பாளிகளுக்கு எனது வாழ்த்துகள்!

மங்கையர்க்கரசி, தஞ்சாவூர்

கவிதைகள், கதைகள், கட்டுரைகளென களைகட்டுகிறது தமிழ்நெஞ்சத்தின் செப்டெம்பர் இதழ். அதன் சிறப்பான வடிவமைப்பும், ஆக்கங்களும் அதன் அழகுக்கு மெருகூட்டி, பாரபட்சமின்றி அனைவரையும் அரவணைத்து வழிநடத்திச் செல்கிறது. நன்றி!

முஹமட் அஸீம், ஒலுவில்

சென்ற் இதழ் எமக்கு இனிமையான செய்திகளையும் அம்சங்களையும் அள்ளி வந்தது. ஆரோக்கியசெல்வியின் கவிதை அருமை. அவருக்கும் ஏனையோருக்கும் வாழ்த்துகள்! பலதரப்பட்ட போட்டிகளையும் அறிவித்தால் இன்னும் சிறப்பாக இருக்குமே!

ராயப்பன், சென்னை

தனது ஐம்பத்தோராவது ஆண்டை எட்டவிருக்கும் தமிழ்நெஞ்சம் இதழ் இன்னும் பல நூற்றாண்டுகள் செழித்த தமிழோடு நடைபயில வாழ்த்துகிறேன்.

கவிஞர்.மனோ, பூந்தமல்லி

பாவலர் வையவன் மற்றும் பாவலர் வள்ளிமுத்துவின் நேர்காணல்கள் அசத்தல். நிறைய விடயங்களை தமிழ்நெஞ்சம் வாசகர்களோடு பகிர்ந்ததில், பிரமிப்புடன் கற்றுக் கொண்டவை பல. நன்றி! எப்போதுமே ஓர் எதிர்பார்ப்புடன் இதழைப் புரட்டுவேன். ஏராளமான விடயங்கள் திருப்திகரமாகவும், மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைந்துள்ளன. உலகத்தரமாக திகழ்வதில் தமிழ்நெஞ்சத்துக்கு நிகரேதுமில்லை.

வான்மதி சுதாகரன், வேப்பங்குளம்

ஒரு இதழை நடத்துவது இலகுவான காரியமல்ல. அதிலும் ஐம்பது வருடங்களாக வெற்றிகரமாக நடத்துவதென்பது சாதனைதான். அதைவிட அனைவரையும் வசீகரிக்கும் விதமாக ஆக்கங்களை சேர்த்து, கோர்த்து வடிவமைத்து எம் கரங்களில் தவழச் செய்வதென்பது உலகசாதனை. இந்த வெற்றிக்குப் பின்னால் விடாமுயற்சியும் கடின உழைப்பும் இருப்பதை உணர முடிகிறது. ஆசிரியர் தமிழ்நெஞ்சம் ஐயாவுக்கு மனமார்ந்த நன்றி!

மகேஷினி ஸ்ரீதர், வியாசர்பாடி

சிறப்புமிக்க அம்சங்களைத் தாங்கி வரும் தமிழ்நெஞ்சம் இதழ் அனைவரதும் மனங்கவர்வதில் வியப்பேதுமில்லை. தரமான ஆக்கங்கள் தந்து அனைவரின் திறமைக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் இவ்விதழின் சிறப்பு சொல்ல வார்த்தைகளில்லை. சிறப்பான தொடர்கதை ‘மஹ்ஜபின்’ விறுவிறுப்பாக அமைந்துள்ளது. கதாசிரியருக்கும்,ஏனைய எழுத்தாளர்களுக்கும் நல்வாழ்த்துகள்!

சீ.ஏ.ஏ நஸார், மருதங்கேணி

செப்டெம்பர் இதழ் படித்துச் சுவைத்தேன். அனைத்துமே மலைத்தேன். ‘திருமண விருந்து’ கதை நாயகன் இக்கால இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக விழிப்புணர்வைத் தந்து சென்றது அருமை. எழுதிய இராமவேல் முருகனுக்கு வாழ்த்துகள்!

சித்திராதேவி கருணா, நுங்கம்பாக்கம்

பக்கத்திற்கு பக்கம் அருமையான கட்டுரைகள், கவிதைகள்.முழுமையான நவரச மாத இதழ்.. ஆசிரியரின் அர்ப்பணிப்பு பக்கத்திற்கு பக்கம் தெரிகிறது...

முஹம்மது ஷர்ஜிலா யாகூப்

**இதழ் சிறப்பாகிட வாசகர்கள் மடல் வழி வகுக்கும். நன்றி!**

# அந்த மூணு வார்த்தை சொல்லடா ?!

நௌஷாத் கான். லி

டேய் லூசு பயலே, வேலை வேலைன்னு மட்டும் அலையாதே கொஞ்சம் பொண்டாட்டிக்கும் நேரம் ஒதுக்கு, நீ அவளுக்காக தான் பணம், பணம்னு ஓடுற. அது எனக்கு தெரியும் ஆனா... உன் அன்பு அவளுக்கு புரியலையே, முதல்ல உன் அன்பை அவளுக்கு புரிய வை, அவளுக்காக நேரம் ஒதுக்கு அதுக்கப்புறம் நீ பணத்துக்கு பின்னாடி ஓடுடா என்று அதட்டியதோடு மட்டுமின்றி கோபித்து கொண்டு தன் அம்மா வீட்டுக்கு பொட்டியும், கையுமாய் சென்ற தன் மருமகளை அழைத்து வரும் படி தன் மகன் முத்துவேலிடம் சொன்னார் கந்தையா.

அப்பா பேச்சை தட்டாத முத்துவேல் நேராக தன் மாமியார் வீட்டுக்கு சென்றான்.

அவனை வாசலில் பார்த்ததும் ''வாங்க மாப்ள எப்படி இருக்கீங்க, உள்ள வாங்க மாப்ள. அப்பா, அம்மா எல்லாரும் நல்லா இருக்காங்களா ?''

''எல்லாரும் நல்லா இருக்காங்க அத்தை. நீங்க, மாமா எல்லாரும் நலம் தானா?''

ஆண்டவன் புண்ணியத்துல நாங்க நல்லா இருக்கோம் மாப்ள.

அத்தை அன்றைக்கு கோபத்துல ஒரு வார்த்தை போடின்னு சொல்லிட்டேன், அவ மேல என் உசுரையே வச்சு இருக்கேன். இப்படி நாயாட்டம் ஓடி, ஆடி உழைச்சு சம்பாதிக்கிறது எனக்கு மட்டுமா அவளுக்கும் சேர்த்து தானே, வருங்காலத்துல பொறக்க போற எங்க புள்ளைகளுக்காகவும் தானே...

பணம், பணம்னு ஏன் ஓடுற பாசத்தோட மதிப்பு தெரியுமான்னு கேட்கிறா அத்தை, என் சின்ன வயசுல இருந்து கூட படிச்சு வளர்ந்த என் நண்பன் தேவா அபுதாபியில ஓரளவுக்கு நல்ல வேலையில இருந்தான். மாசாமாசம் வீட்டுக்கும் ஒழுங்கா பணம் அனுப்பினான் ஆனா கடந்த ரெண்டு வருஷமா அவன் கம்பெனியில கொரோனாவ காரணம் காட்டி வருட விடுமுறை தரலை அவன் பொண்டாட்டி செஞ்ச அன்பு தொல்லையால வேலையை கேன்சல் செய்து விட்டு சென்றான். அவன் குடும்ப வாழ்க்கை ஒரு ஆறுமாசம் நல்லா போச்சு, மாச மாசம் கையிருப்பு குறையவே குடும்பத்துல பிரச்சனை அதிகமாயிடுச்சு. வறுமையும், வெறுமையும் அவன் குடும்ப வாழ்க்கையில வந்ததால அத்தான்னு, மாமான்னு சொன்ன அவன் பொண்டாட்டி கோபத்துல அவங்க குடும்ப உறுப்பினர் முன்னாடியே குடும்பம் நடத்த தெரியாத நீயெல்லாம் ஆம்பளையான்னு கேட்டதால பாவி பய மானம் கெட்டு போச்சுன்னு விரக்தியில விஷத்தை வாயிலும், காதிலும் ஊத்திக்கிட்டு பாவப்பட்ட உசுரை போக்கிக் கிட்டான்.

ரொம்ப கலகலன்னு சிரிச்சுக்கிட்டு, வாழ்க்கையிலஎதைபத்தியுமேகவலைபடாத அந்த லாஸ்ட் பென்ஞ் வாசு வாழ்க்கையில தற்கொலை பண்ணிக்குவான்னு கனவில கூட நான் நினைச்சு பார்க்கலை அத்தை.

காலேஜ்ல கூட லெக்ச்சரர், பசங்க, பொண்ணுங்கன்னு எல்லாரையும் கிண்டல் பண்ணிக்கிட்டு ரொம்ப ஜாலியா சுத்திக்கிட்டு திரிஞ்ச பய ,அவனை அந்த கண்ணாடி பெட்டியில பொணம்மா பார்க்கிறப்ப என் உயிரே போன மாதிரி இருந்துச்சு அத்தை.

பொண்ணுங்களுக்கு இப்ப இருக்கிற சந்தோசம் மட்டும் தான் பெருசா தெரியும் ஆனா வருங்காலத்தை பத்தி யெல்லாம்

பெருசா கவலையெல்லாம் பட மாட்டாங்க, இப்ப என் பொண்டாட்டிக்காக எல்லாம் விட்டிட்டு அவளுக்காக மட்டும் இருந்தேனா அவள் இப்போதைக்கு சந்தோசமா இருப்பா ஆனா அந்த சந்தோசம் ரொம்ப நாளைக்கு நீடிக்காது. நான் இப்படி ஓடி, ஆடி உழைக்கிறதே உங்க பெண்ணுக்காக தான். என் நண்பனின் மனைவி போல பணம் இல்லைன்னா என் பொண்டாட்டியும் அந்த வார்த்தையைசொல்லிடகூடாதுன்னுரொம்ப பயத்தோடயே வாழுறேன், அவளுக்காக எங்க வருங்கால வாழ்க்கைக்காக தான் உழைக்கிறேன். என் அன்பை எப்ப புரிஞ்சிக்க போறாளோ?

அந்த கோபக்காரிக்கு எப்ப நல்ல புத்திய கொடுக்க போறானோ அந்த கடவுள் ?

நீங்க கவலை படாதீங்க மாப்ள சின்ன பொண்ணு தானே வருஷம் போக, போக பக்குவம் வந்திடும். உங்களுக்குன்னு ஒரு குழந்தை பொறந்தா எல்லாம் சரி ஆயிடும். நாங்க புத்திமதி சொல்லி அனுப்பி வைக்கிறோம் மாப்ள.

வேணாம் அத்தை நானே அவன் ரூமுக்கு போய் மன்னிப்பு கேட்டிட்டு எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறேன். அப்பா கூட கண்டிஷனா சொல்லிட்டார். வந்தா மருமகளோட தான் வரணும்னு, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை அதனால என் பொண்டாட்டியோட தான் இந்த வீட்டை விட்டு போவேன்.

எவ்வளவு சொன்னாலும் நீங்க கேட்க மாட்டீங்க நீங்களே போய் அந்த பிடிவாத காரியின் கோபத்தை குறைச்சு உங்க வீட்டுக்கு கொண்டு போங்க.

டொக்.. டொக்

ஹ்ம் உள்ள வாங்க

நான் தான்னு எப்படி கண்டுபிடிச்ச

இது என்ன காரைக்குடி பேலஸா, இருக்கிறது ஒரு ரூம், ஒரு ஹால். நீங்க பேசுறது என் ரூமுக்கு மட்டுமல்ல, பக்கத்து வீட்டுக்கும் கேட்டிருக்கும்.

மேடத்துக்கு என் மேல உள்ள கோபம் இன்னும் போகலையா,ஏதோ கோபத்துல போடின்னு சொல்லிட்டேன் ப்ளீஸ் என்னை மன்னிச்சிடுடி.

வெறும் வார்த்தையால சொன்னா உன்னை மன்னிக்கனுமா ?

வேற என்ன செய்யணும்

என் காலுல விழு

அவ சொன்ன மறுநொடியே அவள் காலில் விழ சென்றவனை அவள் கைகளால் தடுத்தாள்.

சாரிங்க நீங்க அம்மாகிட்ட பேசினதை எல்லாத்தையும் நான் கேட்டேன். உங்க அன்பை இப்ப முழுமையா புரிஞ்சுக்கிட்டேன். வாழ்க்கைக்கு பணமும் முக்கியம், பாசமும் முக்கியம்.., பணத்தால மட்டுமே வாழ்ந்திட முடியாது, பணம் இல்லாமலும் வாழ்ந்திட முடியாதுன்னு இப்ப புரிஞ்சுக்கிட்டேன்.

அட்லீஸ்ட் வாரத்துக்கு ஒரு முறை யாவது வெளியே கூட்டிட்டு போங்க, அந்த ஒருநாள் எனக்காக வாழுங்கள் அது போதும் என்றாள்.

என்ன நினைத்தாளோ தெரியவில்லை சட்டென அவனை அணைத்து கொண்டாள்.

இப்ப என் புஜ்ஜு குட்டிக்கு என்ன வேணும் ?

ஐ லவ் யூன்னு காது குளிர அந்த மூணு வார்த்தைய சொல்லிட்டு இன்னும் கொஞ்ச நேரத்துக்கு அப்படியே இறுக்க கட்டி புடிச்சுக்கிட்டு லவ் பண்ணுடா மச்சான் என்று சொல்லி கொண்டே அவன் நெஞ்சினில் செல்லமாய் புதைந்து கொண்டாள்.

■



# மறக்க முடியாத தோட்டம்

**கவிமுகில் சுரேஷ்**
தர்மபுரி



இன்னும் முகுந்தனால் மறக்க முடிய வில்லை தாத்தாவின் பசுமைத் தோட்டம்.

அவனுடைய தாத்தா எட்டு ஏக்கர் நிலம் வைத்திருந்தார் மூன்று ஏக்கர் நிலத்தில் பெரியப் பெரிய மாமரங்கள் வளர்ந்த அடர்ந்து கிடந்தது.

சீசனுக்கு சுவைக்க எல்லா வகை யான மாங்கனியும் அங்கு கிடைக்கும் மற்ற ஐந்து ஏக்கர் நிலம் பசுமை போர்த்தியதாய் பயிர் வகைகள் காணப்படும்.

கண்ணுக்கு எட்டியவரை பசுமை யான குளிர்ச்சியான இடம் மனதுக்கு இதம் தரும் நிலமது.

குருவிகள் கூடும், குயில்கள் பாடும், கிளிகள் பேசும், அதிகாலைதோறும் அலாரம் இல்லாமல் சேவல்கள் எழுப்பி விடும், கிணற்றில் மீன்கள் துள்ளி விளையாடும்.

ஒவ்வொரு காட்சிகளும் பார்ப்ப தற்கு அழகாகவும், மனதை மயக்கக் கூடியதாகவும் முகுந்தன் உணர்ந்து அனுப வித்த அந்த நாட்களை நினைத்து பெரு மூச்சு விட்டான்.

தாத்தா கறந்த பாலில் தண்ணீர் சேர்க்காமல் அப்படியே கொண்டு வந்து கொடுக்க பாட்டி நன்றாக கொதிக்கவைத்து அதில் நாட்டு சர்க்கரையை போட்டு சூடு பறக்க ஆற்றி கொடுப்பாள்.

அந்தப் பால் குடித்து வெகு நாளாயிற்று பதமான ராகி களி செய்து சூடாய் தட்டில் இட்டு வெந்த கறியோடு ஆவி பறக்கும் சூடாக மண்சட்டியில் கொதித்த குழம்பை இறக்கி அதில் ஊற்றுவாள் களியை அதில் தொட்டு வாயில் வைக்கும்போது திருநெல்வேலி இருட்டு கடை அல்வாவை போல தொண்டைக்குழிக்குள் சூடாய் இதமாய் கடினப் படுத்தாமல் இறங்கும் இப்ப யாரும் அப்படி கறி செய்து பதமாய் போட ஆளில்லை வருந்தினான்.

தண்ணீர் சேர்க்காத கெட்டித்தயிர் கண்டிப்போடு உணவோடு சேர்த்துக் கொள்ள வற்புறுத்தும் பாட்டி மழித்ததில் மனம் வலித்தது.

தினம் மோர் சிலிப்பி வெண்ணை எடுத்து நெய்யாய் உருக்கி சூடான பருப்பு சாதத்தில் அதையிட்டு அவனை கொழு கொழுவென வளர்த்த பாட்டியை அவனால் என்றும் மறக்க இயலாது.

வருடங்கள் கடந்து ஓடிற்று.

ஒவ்வொரு கோடை காலத்திலும் வெயில் கொடுமை தாங்கமுடியாமல் சென்னையிலிருந்து மாமா, அத்தை மற்றும் உறவினர்கள் அவர்களுடைய பிள்ளை களோடு தோட்டத்திற்கு வந்து பிள்ளை களின் விடுமுறை நாட்கள் முடியும் வரை எங்களோடு இருப்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாத சந்தோசங்கள்.

அந்தத் தருணங்கள் வாழ்வில் கிடைத்த பொக்கிஷம் நாட்கள் ஒவ்வொரு நாளும் ஆடிப்பாடி, ஒருவரையொருவர் கேலி செய்து,யார் எப்படி பேசுவார்கள் குடும்பத்தில் எப்படி நடப்பார்கள் என்பதை எல்லாம் டிராமாவை போல செய்து காட்டும் பெரிய மாமாவை அவனால் மறக்க முடியவில்லை.

விதவிதமாய் சமைத்து, பரிமாறி, அன்பு பாராட்டி விடுமுறை முடிந்து உறவுகள் பிரிந்து செல்லும் பொழுது பிரிய முடியாமல் கண்ணீர் விட்டு

ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்த மிட்டு எழுகின்ற அந்த காட்சிகளெல்லாம் இன்று காண இயலாமல் போனது.

காரணம் தாத்தா இறந்த பிறகு முகுந்தனின் அப்பாவும், உடன் பிறந்த இரு தம்பிகளும் அந்த தோட்டத்தை பராமரிக்க முடியாமல் விலைக்கு விற்று விட்டார்கள்.

முகுந்தனின் அப்பா லேத் பட்டறை யில் வேலை செய்தபடியால் அவர் சென் னையை நோக்கி தன் குடும்பத்தோடு பயணப்பட்டார்.

முகுந்தனின் மீதி வாழ்க்கை ஆவடி யில்தான் ஆரம்பித்தது சென்னை வாழ்க்கை அவனுக்கு அசௌகரியமாகதான் ஆரம் பத்தில் பட்டது.

காரணம் அங்கே கிராமிய மணம் இல்லை நிறம் இல்லை எதார்த்தமான மனிதர் களைத் தேடினான் பக்கத்தில் கொலை விழுந்தாலும் எட்டிப்பார்க்காத பக்கத்து வீட்டினர்களைதான் விசித்தி ரமாய் சந்தித்தான்.

நாட்கள் செல்ல செல்லதான் இங்கும் ஈரமுள்ள மனிதர்கள் வாழ்கிறார்கள் என் பதை உணர ஆரம்பித்தான்.

சென்னையில் எப்படியோ படித்து சிவில் என்ஜினியர் ஆனான்.

அங்கேயே பெண் பார்த்து திரு மணம் நடத்தி வைக்கப்பட்டது இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள் முதல் பெண் பிள்ளை இரண்டாவது ஆண் பிள்ளை.

வாழ்க்கைச் சக்கரம் வேகமாய் சுழல ஆரம்பித்தது தேவைகள் பெருகியது பிள்ளைகளுக்கு படிப்பு செலவு ,வீட்டுத் தேவைகள் அதிகரிக்க வேலையிலே மூழ்கிக் கிடந்தான்.

சிலநேரங்களில் தன் கிராமத்தின் பசுமை நினைவுகள் வந்து ஆட்கொள்ளும் ஒவ்வொரு நாளும் வீட்டின் மொட்டை மாடியில் கயிற்று கட்டிலில் தலை யணையில் தலை சாய்த்து வானத்தை அண்ணார்ந்து பார்க்கும்போது...

அந்த நட்சத்திரங்களோடு அவன் பேசுவான் "ஏய் நட்சத்திரங்ளே! நிலவே! எங்கள் தோட்டத்தின் கயிற்று கட்டிலில் படுத்து பார்க்கும்போது அங்கேயும் நீங்கள் தானே என்னை சந்தித்தீர்கள்



இன்னும் என்னை நீங்கள் மறக்கவில்லை சென்னை வந்ததும் என்னை சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் என் கிராமத்தை நான் இன்னும் சந்திக்க இயலாமல் இங்கே நகர வாழ்க்கையில் என் தேவைகளுக்காக நசுங்கிக் கொண்டு இருக்கிறேன் ஒவ்வொரு நாளும்'' என மனதிற்குள் வருந்தினான்

முகுந்தனின் இரு பிள்ளைகளும் ஒவ்வொரு நாளும் "அப்பா கதை சொல்லுங்க இன்னைக்கு என்ன கதை சொல்ல போறீங்க"

ஒவ்வொரு நாளும் மொட்டை மாடியில் நட்சத்திரங்களோடு தன் மனதைப் பிணைத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு சுவாரசியமாக இளமையின் நிகழ்வுகளை கதையாக கூறுவான்.

பிள்ளைகள் அவைகளையெல்லாம் காட்சிகளாய் தன் மனதிற்குள் நிறைத்துக் கொள்ளும்.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் அவனுடைய கிராமம், அவனுடைய தோட்டம் அந்த நிகழ்வுகளையே தொடர் கதையாக ஒவ்வொரு நாளும் பகுதி பகுதியாக அவர்களுக்கு சொல்லிக் கொண்டு வந்தான்.

பிள்ளைகளின் மனத்திரையில் அந்த கிராமத்தின் காட்சிகள் பதிந்து போயிற்று அவன் கிராமத்தை விட்டு நகரத்துக்கு வந்து பல வருடங்கள் ஆயிற்று கிராமத்தையே காணாத தன் பிள்ளைகளுடைய உள்ளங்களில் கிராமத்தை குடி வைத்தான் தான் வாழ்ந்து தோட்டத்தை நிலை நிறுத்தினான்

பிள்ளைகள் அவனை வற்புறுத்தினார்கள் ''அப்பா இந்த மே மாத லீவுக்கு கண்டிப்பா உங்க கிராமத்துக்கு, அந்த தோட்டத்துக்கு எங்களை கூட்டிட்டு போங்க அப்பா''

அவனும் ஆவல் கொண்டான் ''வெகு நாளாயிற்று கண்டிப்பா நம்ம போறோம் நல்லா என்ஜாய் பண்ண போறோம் அங்க இருக்கிற தோட்டத்துக் கிணற்றில் குதித்து மீனைப்போல நீந்த போறோம்'' என்றான்.

ஆண்டுத் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் அந்த பிள்ளைகளுடைய உள்ளத்தில் ஒவ்வொரு நாளும் பரீட்சை எப்பொழுது முடியும் பயணம் எப்பொழுது துவங்கும் எனும் ஆவல் நிரம்பிக் கிடந்தது முகுந்தனின் மனைவி சரசும் «ஏங்க எனக்கும் உங்க கிராமத்தை பாக்கணும் ஆசையா இருக்கு, உங்க தம்பி குடும்பத்த எல்லாம் பார்த்து ரொம்ப நாளாச்சு» என்றாள்.

ஒருவழியாக பிள்ளைகளுக்கு பரீட்சை எல்லாம் முடிந்தது "அப்பா எப்ப லீவு போட போறீங்க சொல்லுங்க'' பிச்சி எடுக்காத குறையாக அப்பாவின் மனதை குடைந்தார்கள்.

முகுந்தன் ஆபீஸில் பத்து நாட்கள் லீவு வேண்டுமென லீவு லெட்டர் எழுதி கொடுத்தான்.

சரசு அந்த கிராமத்திற்கு புறப்பட அதற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்தாள்.

முகுந்தனின் தம்பி குழந்தைக்கு பஞ்சால் ஆனகரடி பொம்மையைவாங்கினாள் காரம், இனிப்பு எல்லா வற்றையும் வாங்கி பையில் அடுக்கி வைத்தாள்.

பிள்ளைகள் அங்கே தங்கி உடை மாற்றிக் கொள்ள தேவையான உடைகளை எடுத்து வைத்தாள்.

முகுந்தனும் ஏசி பஸ்ஸில் டிக்கெட் ரிசர்வ் செய்தான்.

அடுத்தநாள் பிள்ளைகள் உற்சாகமாய் வீட்டில் எழுந்தார்கள் ''அப்பா எப்ப போறோம்'' ஆவலில் துள்ளினார்கள்.

''கொஞ்சம் பொறுமையா இருங்கப்பா நைட்டுதான் கிளம்ப போறோம் பதினொரு மணிக்கு''

பிள்ளைகள் அந்த கிராமத்தையும் தோட்டத்தையும் கண்டு ஆனந்தம் கொள்ள துடித்துக் கொண்டிருந்தார்கள்.

பிள்ளைகளின் மனதிற்குள் காட்சிகளாய் விதைத்த தோட்டத்தில் அவர்களின் கற்பனைகள் பெருகி கொண்டிருந்தது.

புது இடம், புது மக்கள், புது கிராமத்தை பார்க்கும் அவளில் பிள்ளைகள் இருவரும் ஆசை பொங்க பல கதைகளை பேசிக்கொண்டு இருந்தார்கள்.

இரவு வந்தது ஆட்டோ வீட்டிற்கு முன்பாக வந்து நிற்க மூன்று பைகளை எடுத்து ஆட்டோவில் வைத்தார்கள்

பிறகு அவர்களும் உள்ளே நுழைய ஆட்டோ நிரப்பிக் கொண்டது கோயம்பேடு பஸ் ஸ்டாண்டில் வந்து ஆட்டோ நிற்க இறங்கிக் கொண்டார்கள்.

சரியாக பதினோரு மணிக்கு சூப்பர் டீலக்ஸ் பஸ் வந்து நிற்க. ரிசர்வ் செய்யப்பட்ட சீட்களில் ஏறி ஆசையோடு உட்கார்ந்தார்கள்.

முகுந்தனின் பிள்ளைகள் வண்டியில் ஏறியதில் இருந்து சும்மா இருக்கவில்லை அப்பாவிடம் ஆயிரம் கேள்விகள் கேட்டார்கள் "அப்பா நீங்க குளிச்ச கிணத்துல தண்ணி இருக்குமா? அங்க இருக்கிற ஜனங்கள் எல்லாம் எப்படி இருப்பாங்க? தோட்டம் எப்படி இருக்கும்?"

இப்படி பிள்ளைகள் கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் கூறினான்.

இரண்டு மணி நேரம் கேள்விகள் கேட்ட அந்த பிள்ளைகள் முகுந்தனின் தோள் மீதும் மடி மீதும் சாய்ந்து களைத்து உறங்கினார்கள்.

அவன் மனைவியும் பிள்ளைகளின் சந்தோசம்தான் எனது சந்தோசம் என்பதைப் போல அவனை பார்த்தாள். விடிந்தது பஸ் ஸ்டாண்டில் பஸ் நிற்க இறங்கினார்கள் இவர்களுக்காக காத்திருந்த காரில் ஏறி வீடு வந்து சேர்ந்தார்கள்.

அது முகுந்தனின் தம்பி வீடு அவனின் தம்பி அந்த கிராமத்தில் மளிகைக்கடை வைத்திருந்தார் வெந்நீரில் எல்லோரும் குளித்தார்கள் காலை டிபன் அங்கே செய்யப்பட்டது

தம்பியின் குழந்தை பழகுவதற்கு சங்கோஜப்பட்டது

முகுந்தனின் தம்பி அண்ணனை பார்த்து சொன்னான் ''அதுக்குதான் அடிக்கடி இங்க வரணும், போகணும் இப்ப யாரு என்னேன்னு தெரிய மாட்டேங்குது எல்லாம் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டியதா இருக்கு'' என சிரித்தாள்.

"எங்கடா வரமுடியுது நினைச்சாலும் வேலை சரியா இருக்கு" என தன் நிலைமையை பதிலாக கூறினான் முகுந்தன்.

பிறகு முகுந்தனின் மனைவி கொண்டு வந்திருந்த கரடி பொம்மையையும், சாக்லேட்ஸ்களையும் அந்த பிள்ளையின் கையில் கொடுத்து அவளை கட்டி அரவணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

முகுந்தனின் தம்பி மனைவி ''பாப்பா பெரிய அம்மாடா உன்னை பார்க்க ஆசையா வந்து இருக்காங்க பாரு அக்கா, அண்ணன்'' என அறிமுகப்படுத்தி வைத்தாள்

கொஞ்ச நேரத்தில் சகஜமாய் அந்த பாப்பா பழக, பேச ஆரம்பித்தாள் சாக்லேட்டும் பொம்மையும் கொடுத்ததால்



சினேகம் ஆகிவிட்டாள்.

«சரி தம்பி நம்ம தோட்டத்துக்கு போயிட்டு வரலாமா»

“சரி அண்ணா” வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருக்குள் எல்லோரும் ஆசையோடு நுழைய முகுந்தனின் தம்பி கார் ஓட்டினான்.

பத்து நிமிடத்தில் கார் அந்த தோட்டத்தை அடைந்தது.

கார் நிறுத்தப்பட்டது “டேய் நம்ம தோட்டம் எங்கடா” முகுந்தன் கேட்டான்.

“இதுதான் அண்ணா”

“எங்கடா வயல்லே காணோம், கிணறு காணோம், மாந்தோப்பு காணோம்”

“அண்ணா இந்த ஏரியாவுக்கு சிப்காட் வருதுன்னு இந்த நிலத்தை வாங்கினவரு பிளாட் போட்டு எல்லாத்தையும் வீடுகட்டி வித்துட்டாரு மாமரத்த எல்லாம் கதவுகள் செய்யவும் ஜன்னல்கள் செய்யவும் வெட்டி அறுத்து எடுத்துட்டாரு”

முகுந்தன் ஏமாந்து போனான் மனதை யாரோ ரம்பத்தால் போட்டு அறுப்பதைப்போல உணர்ந்தான்.

அதை விட அவன் பிள்ளைகள் அதிகமாய் ஏமாற்றம் அடைந்தார்கள்.

முகுந்தனின் ஏமாந்த முகத்தை பார்த்து அவனின் தம்பி «அண்ணா நம்ம ஊரு ரொம்ப மாறிடுச்சு இங்க கம்ப்யூட்டர் சென்டர் இருக்கு, பெரிய ஹோட்டல்கள் இருக்கு, மளிகைகடை நிறைய ஆயிடுச்சு நீ நினைக்கிற மாதிரி எல்லாம் இல்ல அண்ணா» என்றான்.

“அப்போ ஒவ்வொரு நாளும் என் பிள்ளைகளுக்கு நான் சொல்லிய மாந்தோப்பு, பசுமை வயல்கள், பேசும் கிளிகள், கூவும் குயில்கள் எங்கே? அவனின் மனதிற்கு உள்ளாய் விடை தெரியாத கேள்விகள் அவைகள்.

பிள்ளைகளின் முகத்தை பார்த்தான் அவர்கள் ஏமாற்றத்தோடு “அப்பா நீ சொன்னதெல்லாம் பொய் இனி நீ எதை சொன்னாலும் நாங்க நம்ப மாட்டோம்” என்றார்கள்.

கடவுளே இவர்களுக்கு எப்படி நான் பதில் சொல்ல இயலும் அவனின் மனம் வலித்தது ஒவ்வோர் இரவும் பிள்ளைகளுக்கு சொன்ன கதை எல்லாம் இப்பொழுது அர்த்தம் அற்றதாய்.

இரண்டு நாட்கள் தம்பியின் வீட்டில் தங்கினான் பிறகு சென்னைக்கு புறப்பட்டார்கள்.

இப்பொழுதெல்லாம் மொட்டைமாடியில் கட்டிலில் ஒவ்வொரு நாளும் தலை சாய்த்து படுக்கையில் நட்சத்திரங்களை பார்த்து பிள்ளைகளுக்கு கதை சொல்வதை நிறுத்திக் கொண்டான்.

அந்தப் பசுமை கிராமமும் அந்தப் பழைய தாத்தா, பாட்டி மற்றும் உறவினர் களோடு குதூகலித்த நாட்களை தனக்குள் மட்டுமே வைத்துக்கொண்டான்.

# கண்ணீரோடு

துடைக்க
யாருமின்றி
வழிந்தோடும்
கண்ணீர் சொல்லுமோ
என் பாவப்பட்ட காயங்களின்
அனாதை நிலையை

வலிகளின் அடிகளில்
வலித்து வழிகிறது
விழிகளால்
என் மொத்த இன்பமும்

இன்னல் கொண்ட
என் ஆண்மையின்
மனம் இங்கு
யாருக்குத்தான் புரியும்
புரிந்தும் என்னதான் பயன்

அனைவரும்
பாதிவழிதான் துணை
மீதமுள்ள என்
பாதையற்ற பயணம்
இந்த கண்ணீரோடுதான்
துவங்கிடுமோ
இல்லை தொலைந்திடுமோ

சேனையூர் சப்றீன்
அட்டாளைச்சேனை

# உறங்கும் முன் உறங்குவது யார்?

அறிவியல் ஆய்வுக் கட்டுரையாளர்
நேசமுடன் ஈசு



உறக்கம் இன்று மிக முக்கியம் இன்றைய வளர்ச்சி நல்லதா? கெட்டதா? என்ற தராசில் தூக்கமே முள்ளாக இருக்கின்றது. தூக்கம் கெட்டால் வரும் பாதிப்புகள் பல அதில் மருத்துவர்கள் குறிப் பிடுவது என்னவெனில் தூக்கம் கெடும் போது உடலில் ஒட்டுமொத்த நோய்களுக்கும் அது பிள்ளையார் சுழி போட்டு தொடங்கி வைக்கிறது என்கிறார்கள். ஏன் தூக்கம் கெடுகிறது? இன்றைய வளர்ச்சியின் உச்சத் தில் நாம் நிறைய தொழில்நுட்பங்களைத் ஒட்டி இருந்தாலும் விட்டிருப்பதென்னவோ நமது ஆரோக்கியத்தை தான். நோய்கள் ஏன் ஏற்படுகிறது? என்பது பற்றிய மருத்துவர் களின் கூற்றுக்களில் தொலைக் காட்சியைப் பார்ப்பது, தொலைபேசியை இரவு நெடுநேரம் பயன்படுத்துவது, அதிலும் குறிப்பாக வாட்ஸ்அப், ஃபேஸ்புக், ஷேர் சாட், சினிமா, மற்றும் சாட்டிங் என்கின்ற உரையாடல்கள் இவை மூலம் நம்மை அறியாமலே நாம் அதில் ஆழ்ந்து போகும் பொழுது கண்களுக்கு பாதிப்பு உண்டாகி அது நம் மன நிலையில் மாற்றங்களை உண்டாக்கி தூக்கத்தை கெடுத்து விடுகிறது.

ஆரோக்கியத்தின் அடிப்படை என்பது என்னவென்றால் தூக்கம்தான். நம் உடலில் ரசாயண மாற்றங்கள் அறிவியல்பூர்வமாக எப்பொழுது நிகழ்கிறது எனில் இரவில் உறங்கும் பொழுது தான் நடக்கின்றது. அடிப்படையில் நாம் பகலில் வேலை செய்பவர்களாகவும் இரவில் உறங்குபவர்களாகுமே இருந்தோம். நமது உடலின் அமைப்புகளும் அவ்வாறே படைக்கப்பட்டிருக்கிறது என்று சிறப்பு மருத்துவ ஆலோசகர்கள் கூறுகிறார்கள். ஏன் இரவு தூங்க வேண்டும் அதை ஏன் பகலில் செய்யக் கூடாது என்றால் பகலில் இருக்கின்ற வெளிச்சங்களும் நமது உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் இயற்கையாக இரவின் தன்மைகேற்பவே அமையப்பட்டுள்ளன. விலங்குகள் இரவில் விழித்து பகலில் உறங்குதல் அசைவ உணவுகளை கிழித்து உண்பதற்கான பற்கள், கண்கள், கால்கள், இயற்கையாக அமைக்கப்பட்டு இருப்பது போல மனிதர் களின் உடலும் இயற்கையாக இரவில் உறங்கி அதன் மூலமாக மாற்றங்களைப் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இந்த கட்டுரையில் உறங்கும் முன் உறங்குவது யார்? என்பது பற்றி சிந்திப்போம். உறங்குவது என்பது சில படிநிலைகளைக் கொண்டதாக இருக்கிறது. அவற்றை பெரும்பாலும் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதை அறிவிக்கவே இந்த கட்டுரை. கொரோனா முதல்அலையின் காலகட்டத்தில் காவலர்களை மிகவும் சிந்திக்க வைத்து வைரலான ஒரு புகைப்படம் காவலர் ஒருவர் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவர் கைகளில் நூற்றுக்கணக்கான கொசுக்கள் கடித்துக் கொண்டிருக்கிறது ஆனாலும் அவர் விழிக்கவில்லை உறங்கிக் கொண்டிருக்கிறார். உறக்கத்தில் தெரியாது, ஏன் தெரியாது? சாதாரணமாக நாம் கொசு

கடிக்கும் பொழுது விழித்துக் கொள்கிறோம் ஆனால் ஆழ்நிலைத் தூக்கத்தில் அவர் எழுந்திருக்கவில்லை. ஏன்? எப்படி? என உறக்கத்தை பற்றி உறங்காமல் ஆய்வு செய்தபோது விழித்துக் கொண்டது இந்த கட்டுரை.

நாம் உறங்கும் போது மூன்று படிநிலைகளைக் கொண்டது என்றேன் ஆம் நிலை ஒன்று உறங்க தயாராகும் நிலை உறங்க தயாராகும் பொழுது உங்களது உடல் அசதியும் கண்கள் சொருகுவது கொட்டாவிகளும் உங்களை தூக்கத்தின் முதல் படிநிலைக்கு அழைத்துச் செல்கிறது. இப்பொழுது இந்த ஆரம்ப நிலையில் இருப்பவர் முதலில் நிற்பவராக இருந்தால் அவர் அமருகிறார் பிறகு அமர்ந்தவர் என்றால் சாய்கிறார் சாய்ந்தவர்கள் படுத்து விடுகிறார்கள் படுத்தவர்கள் பின் உறங்கி விடுகிறார்கள் இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் உறங்கும் முன் முதலில் உறங்கப்போவது கண்கள்தான். ஆம் நாம் உறங்கும் பொழுது நமது கண்களே முதலாவதாக தனது இயக்கத்தை மெதுவாக இமைகளைத் தாழ்த்தி இரு இமைகளும் இணைந்து கண்களுக்கு ஓய்வு தருகிறது. அதன் பிறகு உறங்கச் செல்வது செவிகள் இதை எப்படி நாம் உணரலாம் என்றால் மில் வேலை பஞ்சாலையில் பணி செய்யும் ஒரு தொழிலாளி அந்த அதிக சத்தத்திலும் உறங்கிப் போவார் உறங்கும் பொழுது கண்கள் முதலாவதாக சோர்ந்து இமைகள் மூடுகிறது பிறகு அந்த சப்தம் அவரது காதுகளுக்குள் கேட்காது செவிகள் மூடுகின்றன ஆனால் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது முதலில் அவரது கண்கள் சொருகி கண்கள் மூடியிருக்கும் அதன்பிறகு அந்த சப்தங்கள் மெதுமெதுவாக ஓடும் ஒரு தொடர் வண்டியின் சத்தம் வெகுதூரம் சென்று நமது காதில் மௌனமாவது போலவே அந்த சப்தம் நின்றிருக்கும் அதன் பிறகுதான் அவர் தூங்கியிருப்பார். முதலில் கண்கள் உறங்கிய பின் செவிகள், அடுத்து செவிகளும் உறங்கியபின் உறங்கு வது எதுவெனில் நமது தோல் பகுதிதான். இதைத்தான் முதலில் குறிப்பிட்டது போல அதிகப்படியான நேரம் பணி செய்த அந்த காவலரை பற்றிய செய்தி குறிப்பிடுகிறது. அதிகப்படியான நேரம் ஓய்வின்றி பணியாற்றியதால் கண்கள் முதலில் ஓய்வெடுத்து கொண்டிருக்கும் இரண்டாவதாக செவிகள் சப்தங்களை மௌனமாக்கி உறங்கி ஓய்வு எடுத்தி ருக்கும் மூன்றாவதாக அவரது தோல் உணர்வு பகுதிகள் மெதுவாக உறங்கச் சென்றிருக்கும் அதனால்தான் அவரால் அவ்வளவு அதிக எண்ணிக்கையான கொசுக்கள் கடிக்கும் பொழுதும் அறிந் திருக்கவில்லை, எழுந்திருக்கவில்லை இவ்வாறு உறக்கத்தில் மூன்று நிலைகள் உள்ளது

## விழிப்பின் மூன்று படிநிலைகள்

ஆழமாக தூங்கியவர் முதலில் எழும்போது கவனித்தோமானால் நாம் மேற்சொன்ன முதலாவதாக உறங்க சென்ற கண்கள் இரண்டாவதாக உறங்க சென்ற செவிகள் மூன்றாவதாக உறங்க சென்ற தோல் என்பது விழிப்பு நிலையில் எதிர் திசையில் பயணிக்கிறது. முதலில் விழித்துக் கொள்வது தோல் தான். நீங்கள் ஒரு நல்ல உறக்கத்தில் இருக்கும் பொழுது ஒரு கொசு கடித்தால் முதலில் தட்டிவிடுவீர்கள் மீண்டும் மீண்டும் கடித்துக்கொண்டிருந்தாலோ தோல் பகுதியில் ஏதேனும் கடித்தாலோ நமக்கு பாதிப்புகள் ஏற்படும்போது நாம் எழுந்து விடுவோம். இதுவே தோல் முதலில் விழித்துக் கொள்வதற்கான ஒரு ஆதாரமாகும். இரண்டாவதாக விழித்துக் கொள்வது செவிகளாகும். ஆம் நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது கொசுவைக் கூட நீங்கள் தட்டிவிட்டுக் கொண்டு அனிச்சை செயலால் உறங்கி விட முடியும். ஆனால் ஒரு பெரும்சப்தம் கேட்கிறது எனில் நீங்கள் ஒரு கட்டத்தில் கோபத்தோடு எரிச்சலோடு எழுந்து விடுவீர்கள் அந்த சப்தம் உங்களை உறங்க விடாமல் செய்யும் ஆதலால் இரண்டாவதாக விழிப்பது செவிகள் என தெளிவாகும். அதற்கு அடுத்தபடியாகத்தான் கண்கள் விழிக்கின்றன. ஆதலால் தான்

தோல் விழித்த பிறகும் செவிகள் விழித்த பிறகும் நாம் கண்களை திறந்தாலும் கண்முன் காணும் காட்சிகள் தெளிவாகத் தெரியவில்லை. மங்கலாக இருந்து பிறகு மெதுவாக பனி விலகிய பின் சூரியன் தெரிவது போலவே காட்சிகள் தெரிகிறது இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது முதலில் உறங்கச் செல்லும் கண்கள் இரண்டாவதாக உறங்கச் சென்ற காதுகள் மூன்றாவதாக உறங்கச் சென்ற தோல் விழிப்படையச் செய்யும் பொழுது முதலாவதாக தோலும் இரண்டாவதாக காதுகளும் மூன்றாவதாக, இறுதியாகவே கண்கள் திறக்கின்றன. இந்த உறக்கம் என்பது நாம் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்திற்கும் சிறந்தது என்பதை அன்போடு தெரிவித்துக் கொண்டு அடுத்த முறை உறங்கும் முன் விழித்துப் பாருங்கள் உறங்குவது யாரென்று!

# நடை

குழந்தையின் கைப்பிடித்து
கூட்டி சென்றார் அப்பா
பாதுகாப்பாய் பத்திரமாய்.

குழந்தை நடந்தது ஓரமாய்
அப்பாவை பத்திரமாய்
அம்மாவிடம் ஒப்படைக்க.

**கவிச்சுடர்**
**பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து**

# வருகை

இதுவரை
மண்ணில்
நிறைவேறாக்
கனவுகள்
ஒன்று கூடிச்
செய்தன
இன்னுமொரு
கனவினை...

**- இர்ஷாத், வாழைச்சேனை**



# தமிழா..தமிழா

தமிழா தமிழைப் படிப்பாயா
தமிழின் உலகம் படைப்பாயா
அமிழ்தம் தமிழென் றுணர்வாயா
அறிவைத் தமிழில் பிணைப்பாயா
சிமிழ்நம் தமிழே புகழ்வாயா
சீராய்த் தமிழை ஆய்வாயா
நிமிர்த்தும் தமிழால் நிமிர்வாயா
நித்தி லமோங்கி உரைப்பாயா?

இல்லம் தமிழில் தோய்ப்பாயா
இருக்கும் இடந்தேன் பாய்ப்பாயா
அல்லும் பகலும் இசைப்பாயா
அடுத்துன் மழலைக் களிப்பாயா
சொல்லால் தமிழால் தனிப்பாயா
சொந்தம் தமிழோர் பிணைப்பாயா
வல்லோர் வலிமைக் கொள்வாயா
வல்லோன் தமிழால் துதிப்பாயா?

விளக்காய்த் தமிழைத் தேர்வாயா
விளங்கார் எதிர்ப்பார் சாய்ப்பாயா
தளமாம் மரபைக் காப்பாயா
தடையென் றெழுவார் எரிப்பாயா
வளமைத் தோற்றம் அறிவாயா
வான்முன் வருகை உணர்வாயா
களங்கள் தமிழில் செய்வாயா
கரையாம் தமிழைப் பணிவாயா?

**- கண்ணதாச முருகன்**

# இயற்கையோடு இணைந்து வாழ்வோம்

உலகில் இயற்கையோடு இணைந்து வாழ்வோம்..
இயல்பாய் என்றும் தொடர்ந்து வாழ்வோம்..

அனைத்து நோய்களுக்கும் இயற்கையே மருந்து..
இயற்கையை மறந்தால் நோய்களே விருந்து..

செயற்கை உணவினை மனதினில் மறந்து
இயற்கை உணவினை தொடர்ந்தே அருந்து..

நினைவில் பாரம்பரியம் மறந்து விட்டோம்
உடலில் ஆரோக்கியம் இழந்து விட்டோம்..

விளம்பர உலகில் இடம்பெற வேண்டியே
கலப்பட உணவில் கலந்தே போகின்றோம்..

துரித உணவில் நன்மைகள் இல்லை
தொடர்ந்து உண்டால் உடலில் தொல்லை..

சாயம் உணவில் மாயம் கொள்ளும்
பாவம் உடலை நாளும் கொல்லும்..

விஞ்ஞான உலகிலே வித்தியாச படைப்புக்கள்..
விசித்திர முறையிலே விநியோகம் நோய்கள்..

எமது வீட்டுக்கு வீடு வாசல் படியே
வீட்டில் உள்ளோருக்கு நோயின் பிடியே..

எமது உடலுக்கு உணவே உரமாகும்
அந்த உரத்திற்கு இயற்கை வரமாகும்..

நல்ல உணவால் வாழ்க்கை தரமாகும்
அந்த தரத்தால் வாழ்வே சிறப்பாகும்..

வேடிக்கை என்னவென்றால் விலை கொடுத்து
வேதனைகளை நாமே வாங்கிக் கொள்கிறோம்..

**சா.நாகூர் பிச்சை**
தமிழ்நாடு

# அடுத்த வரி

காகிதத்தில் காணும்
வரிகள் மட்டமல்ல
இதழ்கள் பிரிந்து
பேசும் வார்த்தைகள்
ஒலிக்கும் வரிகளே !

கவிஞனின்
முகவரி தேடிய கவிதை
அடுத்த வரிக்காக
கவிஞன் எழுதுகோல்...
காத்துக் கொண்டிருந்தது!


குருவின் தியானம்
பார்வையில் வரும்
அடுத்த வரிக்காக
அமைதியாக சீடன்
அமர்ந்திருந்தான்!



காதலன் அனுப்பும்
குறுஞ்செய்தியில்
கைபேசியில் வரும்
காதல்வரி செய்திக்காக
வழிமேல் விழி வைத்து
காதல் மொழிக்காக
காத்துக் கொண்டிருந்தாள் !

காதலி கவிதாவிடம்
‘கவி தா’ என்று
கவிதை வரியில்
காதலன் விளையாடினான் !

கவிஞர் பொன்விலங்கு
**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை, சென்னை



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com அக்டோபர் 2021

